55

# பேபர் வாழ்க்கை வரலாறு

வே. துரைசாமி ஐயர்.

# பேபர் வாழ்க்கை வரலாறு

இது,

வே. துரைசாமி ஐயரால்,

*(Senior Tamil Pandit,*
*P. S. High School, Mylapore)*

எழுதப்பெற்றது

சென்னை

ஹொகார்த் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[உரிமை பதிவு செய்யப்பட்டது]

விலை ரூ. 0—12—0

ஸ்ரீ:

# பேபர் வாழ்க்கை வரலாறு

---

## முதல் அத்தியாயம்

நீர்வள நிலவளங்களாற் சிறந்தது நம் பாரத நாடு. வீரம் கொடை தயை முதலிய நற்குணங்கள் வாய்ந்த சக்கரவர்த்திகள் பலர் அவ்வப் பொழுது இந்நாட்டில் தோன்றி வாழ்ந்து வந்தனர். இந்நாட்டின் வளமையையும் சிறப்பையும் கேள்விப்பட்டு அயல் நாட்டாரிற் பலர், அடிக்கடி படையெடுத்து வந்து நம் நாட்டுச் செல்வத்தைக் கொள்ளை கொண்டு போயினர் என்பதற்குச் சரித்திரமே சாட்சியமாகும்.

அயல் நாட்டிலிருந்து வந்தவர்களில் பேபர் சக்கரவர்த்தியும் ஒருவர். இவர் கி—பி 1494 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பேர்கானா (Ferghana) என்னும் பெயருள்ள நாட்டிற்கு அரசரானார். இவர், தைமூர் வம்சத்திற் பிறந்தவர்; எனினும், செங்கிஸ் கானுடன் இவருக்குத் தொடர்புண்டு. தைமூரும் செங்கிஸ் கானும் போர்த்தொழிலிற் சிறந்தவர். அஞ்சா நெஞ்சம் படைத்தவர். கொள்ளை, கொலை முதலிய செயல்களைச் செய்வதில் அவாக்கொண்டவர். ஓரிடத்தில் நிலைத்திராமல் நாடோடிகளாய்ச் சண்டையிடுவதே இவர்கள் வழக்கம். இரக்கமென்பதைக் கண்டும் கேட்டுமறியாதவர்.

பேபர் இவர்களை யொப்பத் தைரியமும் வீரமும் உள்ளவர்; அவற்றோடு தயை இரக்கம் முதலிய நற்குணங்கள் இவரிடம் பொருந்தி யிருந்தன. முகலாய குலமுதல்வர் இவரே; இவர் தந்தை, உமார்ஷேக் என்னும் பெயரினர்.

தைமூர் இடைவிடாமற் சண்டை செய்து ஆசியாவின் மேலைப்பகுதி முழுவதையும் தமதாக்கிக் கொண்டார். மத்திய ஆசியாவில் உள்ள பாலைவனத்தில் இருக்கும் காஷ்கர் என்னும் ஊரிலிருந்து ஈஜியன்கடல் வரையில் பரவியிருந்த இராஜ்யம் அவர் ஆளுகையில் அடங்கியிருந்தது; இவர், ஸ்மர்ஞவிலிருந்த விரரைப் போரில் தோல்வியடையச் செய்து, டில்லியை அடைந்து கொள்ளையிட்டார். சைஞவை, தன்னடிப்படுத்தி ஆசியாவில் ஏகசக்ராதிபத்தியத்தைநிலைபெறச் செய்யும் நோக்கத்துடன் கி.பி. 1405 ஆம் ஆண்டில் வரும்வழியில் உயிர் நீத்தார்.

அவர் படையெடுப்புக்கள், காற்றோடு சேர்ந்த பெருநெருப்பைபோல்வன. காற்றடிக்கும் வரையில் நெருப்பு எரியும். காற்று நின்றவுடன் நெருப் பணைந்து எரிந்த இடங்கள் பழைய நிலையை யடையும்.

தைமூரைக்கண்டு அஞ்சி ஓடி ஒளிந்த அரசர் பலரும் அவர் இறந்தவுடன் தத்தம் நாடுகளைக் கைப் பற்றி ஆளத்தொடங்கினர். முடிவில், பாரசீகத்தைச் சூழ்ந்துள்ள நாடும், ஆக்ஸஸ் நதிக்கு அப்பால்

உள்ள நிலப்பகுதியுமே அவர் வழியினருக்குச் சொந்தமாயிருந்தன. அவையும், ஒரு நூற்றுண்டுக்குமேல் நிலைத்தில்லை. பேபர் எஞ்சிய நாடுகளைத் தம் ஆட்சிக்கு உட்படச்செய்து கொண்டார்.

முகல் சாம்பிராஜ்யத்தை நிலைநாட்டிய பேபர், தம் ஊரிற் பகைவர் பலரிடையே சாதாரண அரசகுமாரரெனக் கருதப்பட்டார். தைமூர்வழியில் வந்த வீரர் ஒவ்வொருவரும் முன்னேராண்ட நாட்டைத் தாமே ஆள எண்ணிவந்தனர்.

இக்காலத்தில் ஆமு, ஸர் என வழங்கும் நதிகளால் வளமையுற்று விளங்கும் மாரன்னுர் என்னும் நாடு, அரச குமாரர் பலர் மனத்தையும் கண்ணையும் கவர்ந்தது. எம்முயற்சி செய்தேனும் அந்நாட்டைக் கைப்பற்ற ஒவ்வொருவரும் அவாவிநின்றனர்.

பொருமை மிகுந்த இவ்அரசர்களுக்கு இடையில் ஸாமர் கண்டின் அரசர், தம் அதிகாரத்தை அந்நாட்டிற் செலுத்த முயன்றுர். இவர்தாம் ஸுல்தான் அஹமத் மிர்ஜா என்னும் பெயரினர். இவர் பேபருடைய சிற்றப்பன். நிலையாத புத்தியுள்ளவர்; பிறர் சொற் கேட்பவர். இவர் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதிக்குக் கிழக்கே யுள்ளநாட்டை இவர் சகோதரர் ஆண்டுவந்தார். அவர் ராஜ்யம் ஆமுநதியிலிருந்து ஹிந்துக்குஷ் மலைவரையில் பரவியிருந்தது.

உலக்பேக் என்பவர் மூன்றுமவர்; இவர், ஆப்கானிஸ்தானத்தில் உள்ள காபூலையும் கஜினியையும்

ஆண்டு வந்தார். நான்காமவரே பேபரின் தந்தை; இவர், பேர்க்கானு என வழங்கும் நாட்டரசர். இந் நாட்டின் தலை நகர் ஆண்டிஜான் ஆகும்; எனினும், இவர் அவ்வூரில் வசிப்பதில்லை; ஆக்ஷி என்னும் ஊரிலேயே இருந்துவந்தார். புறக்கூடொன்றைப் பார்க்க அவர் ஒருசமயம் சென்றார். அக்கூடு செங்குத்தானவோர் மலையுச்சியில் கட்டப் பட்டிருந்தது. திடீரென்று அக்கூடு நழுவிக் கீழே வீழ்ந்தது; அதனால் அவர் உயிர் துறந்தார்.

இவர்கள் நால்வரேயன்றி, ஸுல்தான் ஹுஸேன் என்பவர், ஹேராட் என்னும் நாட்டைச் சிறப்புடன் ஆண்டுவந்தார். பேபர் பட்டத்திற்கு வந்தபோது தைமூர் வம்சத்திற் சிறந்திருந்தவர் இவர்களே; ஆனால், இவர்களால் மட்டிற் கலகங்களும் துன்பங்களும் நிகழ்ந்துவிடவில்லை; கிழக்கிலும் வடக்கிலும் மங்கோலிய சாதியார் வாழ்ந்து வந்தனர்; இவர்கள், செங்கிஸ்கானுடைய வழியினரால் ஆதரிக்கப்பெற்று வந்தனர். இவர்கள் தலைவன் யூனஸ்கான்; இவன் அரசனாவதற்குக் காரணராயிருந்தவர் பேபரின் தாய்வழிப் பாட்டனார். இவர் தம் குமாரிகள் மூவரையும் மேற்கூறிய சகோதரரில் மூவருக்குமணஞ் செய்வித்தார். அவர் பெண்களில் பேபரின் தாயாரும் ஒருத்தி.

அவருக்குப்பின் அவர்குமாரர் மகமத்கான் என்பவர் பட்டத்திற்கு வந்தார். இவர் மங்கோலிய வம்சத்தில் தவறிப் பிறந்தவர்; ஏனெனில் மங்கோலியர்கள் இயல்பாகவே போர் செய்வதில் விருப்பம்

யிருந்தவர்; இவரோ நாகரீகத்திற் சிறந்தவர். மங்கோலியரோ கூடாரங்களில் வசிப்பதில் அவாவுள்ளவர். இவர், ஓரிடத்தில் நிலைத்து வசித்து வந்தார். இவருடைய நாட்டின் தலைநகர் டாஷ்கண்டு.

இவரிடமிருந்த சாந்தகுணமும், ஓரிடத்தில் நிலைத்திருக்கும் தன்மையும் மங்கோலியரில் பலருக்கு ஓரளவில் வெறுப்பை உண்டாக்கினவென்றே சொல்லலாம். ஆனால், இவர் தம்பி இவருக்கு மாறான குணமுடையவர்; ஆனதால் மங்கோலியர் தம்பியுடன் கூடி, அங்கங்கு நிகழும் போர்களிலெல்லாம் சண்டை செய்வாராயினர். தமயனைப் போலவே, சாமர்க்கண்டையாளத் தம்பிக்கும் ஆசை உண்டாயிற்று.

மேற்கூறியவர், தைமூர் வமிசத்தில் தோன்றியவர்; ஆதலின், சாமர்க்கண்டை அடைய அவர்களுக்கும் உரிமையுண்டு. ஆனால், உரிமையேயில்லாத வேறு பலரும் சாமர்க்கண்டின்மேல் கண்வைத்திருந்தனர்; துருக்கி, ஆத்ரார் நாடுகளில் வசிக்கும் உஸ்பேக் வம்சத்தார், மழைக்காலத்து மேகம்போல் திடீரெனத் திரண்டு சாமர்க்கண்டில் வாழ்வோரை அச்சுறுத்தி வந்தனர். அவர்கள் தலைவரான ஷாய்பானிகான் என்பவர் முன் பெபரும் எதிர்த்து நிற்கமுடியாமல் முதுகுகாட்டிப் போம்படி நேர்ந்தது.

இவ்விதம் பல்வேறுவகையாரும் தங்கருத்து முற்ற விளைத்த குழப்பமும் சண்டையும் நிறைந்த காலத்தில் பதினொரு வயதும் முற்றாத இளஞ்சிறு

வர் சிங்காதன மேறினர். அவரே பேபர் எனப் பிற் காலத்திற் புகழுடன் விளங்கியவர்.

பேபர் இளம்பருவத்தை பற்றிய வரலாறு விளக்கமாக எதுவும் தெரிய வில்லை; கி—பி 1483-ம் வருஷம் இவர் பிறந்தார். இச்செய்தியைத் தூதர் மூலம் கேட்ட யூனஸ்கான் (தாய் வழிப்பாட்டன்) துன்பத்தைப் பொருட்படுத்தாமல் பெர்கானவுக்கு வந்து தமது பேரனைக் கண்டார்; பிறந்த நாட்கொண்டாட்டம் விமரிசையாக நடைபெற்றது. ஏழைகளுக்கு உணவு உடைகள் அளிக்கப்பட்டன. பிரபுக்கள் உறவினர் முதலானேர் விருந்துண்டு களித்தனர்.

கல்வியாலும், உயர்குணத்தாலும் திருந்தாத மங்கோலியருக்குப் பேபரின் இயற்பெயர் உச்சரிக்கக் கூடவில்லை; ஸாஹிர்-உதீன்-மஹமத் என்று உச்சரிப்பதைக் காட்டிலும் பேபர் என்னும் செல்வப் பெயரால் வழங்குவது எளிதாயிருந்தது.

பேபர், ஐந்தாண்டு முடிந்தவுடன் சாமர்க்கண்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பிறகு அவர் ஆறு வருடம் கல்வியிற் செலவழித்திருக்கக் கூடும். ஏனெனில், பிற்காலத்திற் கல்வி பயில்வதற்கு இடமே அவருக்குக் கிடைத்திலது. அவருணர்ந்த மொழிகளிரண்டும் அக்காலத்திலேயே பயின்றிருக்கலாம்.

அவர், எவ்வாறு கல்வி பயின்றூர் என்பது நன்கு புலனுகாவிடினும் ஒன்றுமட்டில் உறுதியாய்ச் சொல்லலாம்; அவர் கல்விப் பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும்

காரணமாய் இருந்தவர் மங்கோலிய மகளிரே யாவர். இந்த மகளிர் செல்வத்திற் சிறந்திருந்தும் செருக்கற்றவர்; தைரியமுள்ளவர்; கணவனே தெய்வமென்னும் கொள்கையுடன் தத்தம் புருடரை எவ்வித ஆபத்துக்காலத்திலும் கைவிடாமல் தொடர்ந்தவர். ஊண், உடை முதலியவற்றிலும் ஆடம்பர மில்லாதவர். பேபருக்கு நேர்ந்த ஆபத்துக் காலங்களில் அவரைச் சேர்ந்த மங்கோலியப் பெண்டிர் அவருடனிருந்தே உதவி புரிந்தனர். ஆனால், துருக்கியப் பெண்கள் அவரை விட்டு விலகலாயினர்.

மேற்கூறிய மங்கோலிய மகளிருள்ளும் பேபரின் தாய் வழிப்பாட்டியை நிகர்ப்பார் ஒருவருமே இல்லையெனலாம்; இஸான் டௌலத் பேகம் (பாட்டியின் பெயர்) இறந்த யூனுஸின் மனைவி எல்லோரினும் சிறந்து விளங்கினள். அவள் ஆலோசனையில் மிக்கவள்; சமயத்திற் சோர்வடையாத ஆழ்ந்த அறிவுள்ளவள்; அவள் கற்பும், பொறப்பும், ஆண்மையும், மாண்பும் மிகக் கொண்டவள் என்பதைப் பேபர் கூறுவதிலிருந்தே நன்கறியலாம். ஒருசமயம் யூனுஸ் பகைவரிடையே அகப்பட்டுக்கொண்டான். அவனைப் பகைவர் சிறை செய்தனர். அவன் மனைவியான இஸான் தௌலத்தைப் பகைவர் தம்மைச்சேர்ந்த வீரனொருவனுக்கு மனைவியாய் அளித்தனர். அப்பொழுது இஸான் டௌலத் வாய் திறக்கவில்லை. தன் புதிய கணவனை முறைப்படி உபசரித்து வரவேற்றாள் அவ்ன் தன் அறைக்குள் புகுந்ததும் பேகம், அவனைக்கபிற்றாற் கட்டி வாளாற் குத்திக் கொன்று தெருவில் எறிந்துவிட்டாள். இதையறிந்த

தலைவன் அவனைக் கொன்ற காரணத்தை தெரிந்துவர ஒரு தூதுவனை அனுப்பினான். பேகம் சிறிதும் அஞ்சாமல் தூதுவனை நோக்கி, "நான் யூனூஸ் மனைவி. என் கணவன் பிழைத்திருக்கையில் சட்டத்திற்கு மாறாக, ஷேக்ஜமால் என்னை வேறொருத்தனுக்கு மனைவியாக்கக் கருதினான். ஆகவே, நான் அவனைக் கொன்றேன். விரும்பினால் என்னை ஜமால் கொல்லட்டும்" என்று கூறினாள். அசையாத அவள் கற்பைக் கண்ட ஜமால் திடுக்கிட்டு அவளை மரியாதையுடன் யூனூஸிடம் சேர்ப்பித்தான். இருவரும் ஓராண்டு கழிந்தபின் விடுதலையடைந்தனர்.

பெருங் கற்பும் பேராண்மையும் கொண்டவளே, அனுபவமில்லாத இளம் பருவத்தில் பேபருக்குப் பெருந்துணையாக இருந்தாள். இவர் தம் பாட்டியுடன் அண்டிஜானில் வாழ்ந்து வந்தார். அங்குள்ள சதுர்வனத்தின் (Four Gardens) வசந்த மண்டபத்தில் பேபர் இருக்கையில் (1494 ஜூன்மீ) அவர் தந்தை திடீரென இறந்த செய்தி வந்தது. வேட்டை நாய்களைப்போல் தம் நாட்டை விரும்பியலையும் பகைவரிடையே தமக்கு அது கிடைக்குமா என்னும் ஐயமே அவருக்கு முதலில் தோன்றியது. ஒரு சிற்றப்பன், ஒரு அண்ணன், அல்லது துரோகத் தலைவன் ஒருவன் இச்சமயமறிந்து நாட்டைக் கைப்பற்றத் தடையேதுமில்லை; எனினும் தைரியத்தைக் கைவிடாமல் உடனே சிலருடன் பேபர் கோட்டைக்குப் புறப்பட்டார். கோட்டையை நெருங்கியதும் காரியஸ்தன் ஒருவன், பேபரை நிறுத்தி, "கோட்டைத் தலைவன் ராஜ விசுவாசம் உள்ளவனென்பதை

எப்படி நம்பமுடியும்" என்று கேட்டான். பேபர் சிறிது தயங்கினர். அப்பொழுது கோட்டைத் தலைவன் ஒரு கோஜாவைப் பேபரிடம் அனுப்பி நாட்டுரிமையை ஒப்புக்கொள்ளும்படி கூறச் சொன்னன். கோஜாவின் சொல்லை ஐயமின்றி நம்பலாமாதலால் பேபர் கோட்டைக்குள் நுழைந்து சிங்காதனம் ஏறினர். உடனே கோட்டை பழுது பார்க்கப்பட்டது. பகைவர் வரின் அவர்களைத் தாக்கத் தக்க முயற்சிகள் கோட்டையில் செய்யப்பட்டன.

அம்முயற்சிகள் மிக விரைவில் நடந்தேறுவது இன்றியமையாததாயிற்று; ஏனெனில் ஒவ்வொரு விநாடியும் பேபரின் பகைவர் மூன்று பக்கங்களிருந்தும் நெருங்கி வந்தனர். சிற்றப்பன்மார் இருவரும் தக்க உதவிகளுடன் புறப்பட்டு விட்டனர். இவ்விருவருக்கும் உமார்ஷேக்கிடம் (பேபரின் தந்தையார்) தீராப்பகை இருந்து வந்தது. உமார்ஷேக் இயற்கையிலேயே செருக்குள்ளவர் என்பது இவர்கள் கருத்து. அவர் செருக்கை அடக்கப் பலமுறைகளில் முயன்றும் பலனின்றிப் போயிற்று. உமார்ஷேக் புறக்கூடுடன் தம் உடலை நீத்த பின்னரும் அன்னர் அவர் மேற்கொண்ட பகைமையை மறந்திலர்; எனவே, அவர் இறந்த சமயமே தக்க சமயமெனக்கொண்டு படைதிரட்டிப் போர் தொடுக்க முற்படுவாராயினர்.

ஏன்—தந்தை முறையினரே படைகூட்டி வருகையில் மண்ணசைகொண்ட பிற மன்னரைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? அஹமத்-மிர்ஸா சாமர்

கண்டிலிருந்தும், அவன் மைத்துனன் மஹமத்கான் டாஷ்கண்டிலிருந்தும் படையுடன் வந்துகொண்டிருந்தனர்.

தடுப்பாரின்றிப் போக்காறு நோக்கி வரும் அஹமத் படையை, உரேதிபா, கோஜெண்ட், மார்ஜினன் முதலான சிற்றூர்த் தலைவர் தடுக்காமல் வழிவிட்டு நின்றனர். பேபர், சிங்காதனம் ஏறக் கோட்டையிற புகுந்தபொழுதே அகமத் அண்டிஜானை நெருங்கி விட்டான். அவனை எதிர்த்துப் போர்புரிவது எளிதன்று; எனவே, சிறுவரான பேபர் ஒரு தூதுவனை அஹமதிடம் அனுப்பி, "உன் மகனும் வேலைக்காரனுமாகவுள்ள நான் அரசாட்சி செய்ய உரிமையுள்ள இந்நாட்டிற்கு உன் பிரதிநிதியாக இருக்கிறேன்" என்று வணக்கமான செய்தியைச் சொல்லச் செய்தார்; ஆனால் அஹமதின் காதில் அம்மொழிகள் ஏறவில்லை. மேல்நோக்கிச் செல்லப் படைவீரரை ஊக்கினான். பேபரின் அதிர்ஷ்டமென்னும்படி காட்டாறொன்று பெருவெள்ளத்தோடு குறுக்கிட்டது. அதைத் தாண்டிச் செல்லக் குறுகிய பாலம் ஒன்றேயுண்டு. காலாட்களும் குதிரைகளும் நெருக்கின; பலர் ஆற்றில் வீழ்ந்து நீரில் அமிழ்ந்தனர்; பலர் நசுக்குண்டனர்; குதிரைகளிற் பலவும் அழிந்தன; முன்னொருகால் இங்ஙனமே நடந்ததும், அதுவே அப்பொழுது சேனையின் சீரழிவுக்குக் காரணமானதும் அஹமத் மனக்கண்முன் தோன்றின. உடனே அவன் இத்தடை தீயதென முடிவு செய்தான். சேனை வீரரும் தைரியங் குன்றி முன்னேறிச் செல்ல மறுத்தனர்; அவர்களை நோயும் வாட்டியது; இக்கா

ரணங்களால் அஹமத் பேபருடன் சமாதானம் செய்து கொண்டு திரும்பிச் செல்லுகையில் வழியில் இறந்தான்.

அஹமது இவ்வாறாக, மகமத்கான் காஸானைச் சொந்தமாக்கிக் கொண்டு, பேபரின் இரண்டாவது பட்டணமாகிய ஆக்ஷியை முற்றுகையிட்டான். அந்நகரக் கோட்டை பலமாகக் காக்கப்பட்டிருந்து. உமார் ஷேக்கின் வீரர் மகமதிற்குப் பெருந் தடையாக நின்றனர் அவ்வீரர் தம் உயிரையும் பொருட் படுத்தாமல் மகமதைத் துரத்தி அடித்தனர். சூரனான மகமத் அவர்கள் முன்னிற்க முடியாமல் தன் இருப்பிடம் சென்றான்.

இவனகன்றதும், காஷ்கர், கோடான் தலைவன், உஸ்கண்டைப் பிடித்துக் கொண்டு ஒருகோட்டையையும் கட்டினான்; ஆனால் பேபரின் வீரர் அவனைத் துரத்துவதற்குப் பெருமுயற்சி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

பேபரின் இடையூறுகள் இங்ஙனம் ஒருவாறு ஒழிந்தன; எனினும், துன்பம் முற்றும் நீங்கவில்லை. பேபர், ஆண்டிஜானுக்கும் ஆக்ஷிக்கும் இடையிலுள்ள நிலப்பகுதியான பர்க்கானாவிற்கே அரசராயிருந்தார். பிறநாடுகளை வன்மைவாய்ந்த பகைவரிடமிருந்து பெறவேண்டியிருந்தது. இந்த ஆவல் பேபரின் மனத்திலேயே பல்லாண்டுகள் நிலைப்பதாயிற்று. இழந்த நாடுகளைக் கைப்பற்றுவதன்றி, தைமூர் அலங்கரித்த சிங்காதனத்தில் அமர்ந்து

சிறந்து விளங்கும் விருப்பம் பேபருக்கிருந்தது; ஆனால், இஃது எளிய செயலன்று; இதற்காகப் பேபர் தம் இளமை யின்பத்தை விட நேர்ந்தது.

பேபர் தம் வாழ்வின்பத்தை விட்டேனும் சாமர்க்கண்டைப் பெற ஆவல்கொண்டதற்குப் போதிய காரணங்கள் இருந்தன; ஆக்ஸஸ் நதிக்கு அப்பாலுள்ள நிலப்பகுதி மணற் பாங்கான வறண்ட வெளி என்று கருதுபவர் சிறந்ததோருண்மையை மறந்துவிடுகின்றனர். ஸாக்டியானு, மார்ஜியானு, பாக்ட்ரியானு என ரோமரும் கிரேக்கரும் பெயரிட்டழைத்த நாடுகள், அலெக்ஜாண்டர் ஆளுகைக்குட்பட்ட பெரிய நாடுகள். சாமாக்கண்ட், பால்க், போகாரா முதலிய நாடுகள், அக்காலத்திலிருந்தே கண்ணைக் கவரும் கட்டிடங்களுடன் சிறந்து விளங்கின. அந் நாடுகளில் வியாபாரமும் கல்வியும் செல்வ முதலியனவும் தலைசிறந்திருந்தன. தைமூர் கொள்ளையிட்ட அரும்பெரும்நிதிகள் சாமர்க்கண்டின் எழிலைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டின. சிற்பிகள் தம் திறமையின் பேரெல்லையாக அமைத்துள்ள மாளிகைகளின் மாண்பு இன்றும் தெள்ளிதின் புலப்படும். அக்காலத்தில் ஆசியாவின் நகரங்களெல்லாவற்றிலும் சாமர்க்கண்டே சிறந்து விளங்கிற்று. உலகம் புகழும் பாராபி (Farabi) என்னும் தத்துவ ஞானியும் பர்கானி (Farghani) என்னும் வான சாஸ்திரியும் சாமர்க்கண்டில் நிலைத்துத் தத்தம் நூலாராய்ச்சியைச் செய்து வந்தனர். சாமர்க்கண்டில் நக்ஷத்திரச்சாலையும் இருந்தது.

பொதுவாகக் கல்வி சிறந்துள்ள நாடுகளிற் செல்வம் பெருகியிருத்தல் இயல்பு; ஏனெனில் செல்வச் செழிப்பு இல்லையேல் மக்கள் வாழ்வுக்கு வேண்டிய வழிகளிலேயே மனத்தைச் செலுத்திப் பாடுபட முற்படுவர். கல்வி வளர்ச்சிபெறல் அறிது. செல்வச் செழிப்பால் சாஸ்திர ஆராய்ச்சியில் ஈடுபட மக்களுக்கு ஊக்கம் உண்டாகும்; எனவே செல்வம் பெருகியிருக்கும் நாடுகளில் கல்வி தலைசிறந்து விளங்கும் என்பது உறுதி.

பேர்க்காணுவும் அதைச்சூழ்ந்த உஷ் மார்ஜிணன், அண்டிஜான் முதலான நகரங்கள் நீர்வள நிலவளம் மிகுந்தவை. ஆமு, ஸர் எனும் ஆறுகளும் அவற்றின் கிளையாறுகளும் பாய்ந்து பேர்க்காணுவைச் செழிமையுறச் செய்து பலவகைப் பழங்களும், தானிய வகைகளும் நிரம்பியிருந்தன. சாமர்க்கண்டும் இவைகளுக்குச் சிறிதும் தாழ்வுடையதன்று; அந்நிலப் பகுதிக்கே சாமர்க்கண்ட் ஒரு சிங்காரவனமாக விளங்கியது. பலவகைப் பழங்களும் மலர்களும், செறிந்து, பல்நாட்டினரையும் பரிவுடன் ஓடிவரச்செய்யும் வளமை பெற்றிருந்தது.

சிறுவராகிய பேபர், பல்வகைப்பட்ட பழக்க வழக்கங்களையுடைய பல சாதியாருடன் பழக நேர்ந்தது. அங்கிருந்தவரிற் பெரும்பான்மையோர் பாரசீகர்களே. அவர்களே அந்நாட்டின் ஆதிக்குடிகள். அந்நாட்டை வென்ற மங்கோலியருக்கும், துருக்கருக்கும் பணிபாட்களாயவர்கள் அமர்ந்திருந்தனர். நிலத்தை உழுது பயிரிடுவதும், கட்டை வெட்டி

விற்பதும் அவர்கள் வாழ்வுக்குரிய தொழில்களாகும்; அவர்களுட் சிலர் வியாபாரமும் செய்து வந்தனர். அவர்களிற் 'சிலர் மத்திய ஆசியாவிலிருந்து வந்து இங்குள்ளவருடன் கொள்வினை செய்து கொள்ள லாயினர்; ஆதலால், இந்நாட்டை ஆண்டுவந்த மன்னர் ஒருகுலத்தாரல்லர். ஒருநாட்டினரல்லர்; கலப்புடையவர்களே.

அக்காலத்தில் ஒருகான், வேறொருகானை வென்றவுடன் தோல்வி யடைந்தவனது பெண்ணையோ மனைவியையோ வென்றவன் மனைவியாக்கிக்கொள்ளல் வழக்கமாயிருந்தது. இத்தகைய மணத்தால் கலப்புச்சாதிகள் பெருகின; பழக்க வழக்கங்களும் கலந்தன.

உதாரணமாக யூனஸ்கான் (பேபர் பாட்டனார்) தந்தை வழியில் மங்கோலியர்; ஆனால், அவரிடம மங்கோலியருக்குள்ள குணம் எதுவுமே இல்லை; ஆகலால் அவர் தாய் வேறு வம்சத்திற் பிறந்த பெண்ணாகவேண்டும்; அதனால் தாயின் குணம் யூனஸ்கானிடம் இருந்ததென எண்ண இடமிருக்கிறது.

பேபர் தாய் வழியில் மங்கோலியரே; ஆனால் தந்தை வழியில் துருக்கியர். மங்கோலியர் அவரைத் தம் உறவினரென்று கருதி வந்தனர்; ஆனால் பேபர் தம்மைத் துருக்கியர் என்று சொல்லிக் கொண்டார். மங்கோலியரை இகழ்ச்சியாய்ப் பேசிவந்தார். அவர் அப்படிப் பேசுவதற்குக் காரணமில்லாமற் போகவில்லை. பெர்க்கானவின் கிழக்

கிலும் வடக்கிலும் உள்ள புல்வெளிகளில் வாழ்ந்து வந்தவர் அநாகரிகமுள்ள மக்கள்; கல்வியறிவில்லாதவர்; அவர்களே மங்கோலியக் கூட்டத்தார்.

ஆனால், நகர்களில் வாழ்ந்து வந்தவர்களோ, நாகரிகம்மிகுந்து நடை உடை பாவனைகளிற் சிறந்து விளங்கினர். கல்வி கேள்விகளிலும், சாஸ்திரப் பயிற்சியிலும் மேம்பாடடைந்திருந்தனர். ஓரளவிற்குக் கவிபாடும் திறமையையும் அவர்கள் பெற்றிருந்தனர். மங்கோலியரைப் போலன்றி ஒரேயிடத்தில் நிலைத்திருப்பதே இவர்களுக்கு இன்பமாகத் தோன்றியது. பாலைவனத்திற் செல்லுவதின கொடுமையை இவர்கள் வெறுத்து உறுதியான கட்டிடங்களில் வாழ்ந்து வந்தனர்; இவர்கள் கலப்புச் சாதியினரேயாயினும் தம்மைத் துருக்கியர் எனச் சொல்லிக்கொண்டனர்; இவர்களே ஆரும் இனத்தார். நுண்ணறிவும் ஆண்மையும், சுறுசுறுப்பும் எவ்வளவுக்கெவ்வளவு சிறந்திருந்தனவோ அவ்வளவுக்கவ்வளவு தந்திரம், வஞ்சகம், பொய், தீமைசெய்ய அஞ்சாமையாகிய குணங்களும இவர்களிடம் நிறைந்து விளங்கின. இவர்கள் பொருளைப் பெறுவதற்கு எத்தகைய இழி தொழிலையும் செய்யப் பின் வாங்காதவர்.

# இரண்டாம் அத்தியாயம்

பேபர் பட்டத்திற்கு வந்ததும் குடிகள் அவரை அன்புடன் வரவேற்று அவர் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தனர்; அவரும் குடிகளின் கருத்தறிந்து அவர்களுக்குப் பல வழியில் நன்மையையே செய்து வந்தார். பேபர் தம்மளவிற் குன்று ஊக்கமும், தளரா ஆண்மையும், வற்றுச் செல்வமும் கொண்டவராயினும் அவரைச் சூழ்ந்துள்ள மக்கள் மனம் கோணுவண்ணம் நடத்தலே அவர் நெடுங் காலம் நிலைத்திருக்கப் போதியதாயிருந்தது. இங்ஙன ன்றி சூழ்ந்துள்ளவர் வெறுப்புக்கு இடமாக நிற்பின் சிங்காதனத்தில் அபாயமின்றி நீடித்திருக்க அவரு க்கு இயலாது. தம்மைச் சேர்ந்தோரையும் பிற ரையும் தம் மயமாக்கிக்கொள்ளும் அரிய வல்லமை பேபருக்கு இருந்தது. இஃது ஒன்றே அவரைக் கடைசிவரையும் நண்பரின் உதவியோடிருக்கச் செய்தது.

பன்னிரண்டு வயதினரான பேபர் தாமே அர சாட்சியைத் திறமையுடன் நடத்தினரென்பது பொருத்தமற்ற செயலென இக்காலத்தாருக்குத் தோன்றுமாயினும் சரித்திர உண்மை அதுவே. அப்போதைக்கப்போது அவர் பெரியோர் சிலரிடம் யோசனை கேட்டு நடப்பதுண்டு; ஆனல் அவர்கள் கூறும் யோசனை எவ்வளவுவரையில் நம்பக்கூடிய தென்பது பேபருக்குத் தெரியும்; ஏனெனில் பேபர்

தந்தையின் சபையில் இருந்தவர்களுள் ஒருவராயினும் நேர்மையுள்ளவரல்லர்; பெரும்பாலோர் சுயநலப் புலிகள். எவ்வளவுக் கெவ்வளவு பதவியில் உயர்ந்தவர்களோ அவ்வளவுக் கவ்வளவு வஞ்சனையிலும், சதிச் செயலிலும் முதன்மையடைந்தவர்கள். பொருளாசைகொண்ட பித்தர்; பரிதானம் பெறுவதே அவர்கள் மேற்கொண்ட சிறந்த தொழில். கொள்ளையும், கலகமும் தோன்றினால் அவற்றில் இவர்கள் கலவாமல் இருப்பதேயில்லை; ஆபத்துக் காலத்தில் அரசனைக் காட்டிக்கொடுத்து விட்டோடுவர்.

இவர்களிவ்வாறாகப் பேபரின் மந்திரிகளும், சேனைத்தலைவரும் நல்ல சமயத்திற் கட்சிமாறுமியல்பினர். எப்பக்கம் வெற்றியுண்டாகு மெனத் தெரியாவிடின் தயங்கிநிற்பவர். பகைவரிடம் சென்று தம்மரசையழிக்க ஆலோசனை செய்பவர். தம்தலைவனைத் தக்கசமயத்தில் கைவிட்டு விலகுபவர்; ஆனால், பேபர் இவர்களுக்கெல்லாம் அஞ்சியவரல்லர். எவர் கைவிடினும் அவரைக் கைவிடாத் தைரியம் ஒன்றேகொண்டு எப்போதும் தொடங்கும் செயலில் முனைந்தே நின்றார். எவர் விலகினும், எவர் சதிச் செயினும், அவர் தைரியத்தை இழக்கவில்லை; அவர் மனவுறுதி அசைவற்றது. தம்மைச் சேர்ந்தோர் எவ்வளவு உண்மையுடன் உழைத்தனரோ அவ்வளவுக்கு ஏற்பக் கௌரவிக்கப் பட்டனர். இச்சிறந்த குணத்தால் பேபர் அவர்கள் உபகாரத்தை எளிதிற் பெற்றார். அவர்களிற் சிலர், தம்மைவிட்டு விலகினவுடனே தக்கவரைத்தேடி அப்பதவிகளில் நிறுத்துவார். எல்லோருமே கைவிட்டபோதும் அவர் சிறி

தும் அஞ்சவில்லை. "மக்கள் தன்னம்பிக்கை கொள்வதைவிட மாற்றானிடம் அவ்வளவு அதிகமாக நம்பிக்கை வைக்கமுடியாது" என்ற உண்மையை அவர் நன்கு அறிந்திருந்தார். அவர் வாழ்நாள் முழுதும் நடந்தபோராட்டத்தில் அவரைக்காப்பாற்றியது இவ்வுயரிய தன்னம்பிக்கையொன்றே; அவர் பிற்காலத்தில் அடைந்த வெற்றிக்கும், பிறநன்மைகளுக்கும் பேபர் தம்மிடம் தாம் வைத்திருந்த நம்பிக்கையே காரணம். பேபரைப்போல வேறு ஒருவரை உதாரணம் கூறவேண்டுமானால் உலக சரித்திரத்திலேயே அக்பரொருவரையே கூறலாம்.

பேபர் சிங்காதனம் ஏறியவுடன் யாகூப் ஹாஸன் என்பவன் முதன் மந்திரியாக நியமனம் பெற்றான். இவன் போலோ ஆட்டத்தில் புகழ்பெற்றவன். எப்படிப்பட்ட குணமுடையோரிடமும் விரைவில் நட்புக்கொள்ளும் இயல்பினன். செயலாற்றுவதில் மிகவும் திறமைசாலி. இவனே பேபர் நாடாட்சி செய்ய உதவி வந்தவன் எனலாம். பேபருக்கு இளைய சகோதரன் ஒருவன் உண்டு; அவன் பெயர் ஜிஹாங்கீர்; அவனைச் சிங்காதனத்தில் அமர்த்தவேண்டுமென்பது யாகூபின் விருப்பம். அப்படிச் செய்தால் கேட்பாரெவருமின்றித் தனித்தலைவனாய்த் தானிருக்கலாமென்பதே அவன் கருத்து. அவன் கொண்ட இத்தீய எண்ணத்தைப்பேபரின் பாட்டியார் அறியாமலில்லை. தன் வஞ்சகவெண்ணம் வெளியாயிற்றென்று உணர்ந்ததும் யாகூப் உயிர்தப்பி ஓட நேர்ந்தது. அவன் தன்னைச்சேர்ந்தோருடன் ஓடுகையில் சிறு கலகம் தோன்றியது; அச்சமயம் எங்கிருந்தோ ஓர்

அம்பு பறந்து வந்து யாகூபின் மார்பில் தைத்தது. அவன் செய் தீவினைக்கு அவனே இரையாயினன்.

யாகூப் ஒழிந்தபின் பேபர் ஜாக்கிரதையுடன் வாழ்ந்து வரலானார். ஆராயாமல் உணவையுண்ணுவதும் அபாயமாக விருந்தது. பேபர் முடிந்தவளவு கலகங்களையடக்கி, துன்பங்களிலிருந்து விடுபெற்றோமென நினைத்தபோது சாமர்க்கண்டில் எதிர்பாரா வழியில் ஒரே குழப்பம் தோன்றியது; அதையாண்ட அஹமத் மிர்ஸா இறந்தான்; அவன் தம்பி மகமத் அரசனானான். இவனோ கொடுமையே வடிவெடுத்தாலொத்தவன்; உறவினரையும் கொலை புரிந்தோன்; தெய்வநம்பிக்கையற்றவன்; மகளிர் கற்பையழிப்பவன்; நம்பியவர்களை நல்ல சமயத்திற் கெடுப்பவன்; சொல்ல முடியாத தீமைகளுக்கெல்லாம் இருப்பிடமானவன்; இக்கொடுங் கோலரசனிடம் மக்கள் எப்படி நிலைத்து நிற்கக்கூடும். இவன் வீரர்கள் இவனை பொப்பவே எக்கொடுமையையும் செய்யப் பின்வாங்காத் தீயோர்.

குடிகளின் தவப்பேற்றால் இவ்வரசன், ஆறுமாதத்தில் இறந்தொழிந்தான். அவன் இறந்தபின்னும் கலகங்கள் ஓயவில்லை. ஒவ்வொருவரும் தத்தமக்குக் கிடைத்தவற்றைக் கைப்பற்றலாயினர். ஆனால், தோன்றிய கலகங்களை அடக்கி ஒழுங்கையும், அமைதியையும் நிலைநிறுத்தும் பேராற்றல் படைத்தவரொருவரும் அங்கு முன்வரவில்லை.

இந்நிலையில் அயல்நாட்டரசர் வாளாவிருப்பாரென்று எதிர்பார்ப்பது முறையல்லவே? நான்கு

திககுக்களிலிருந்தும் வெவ்வேறு நாட்டுச் சேனைகள் சாமர்க்கண்டை நெருங்கலாயின. ஹீராட் ஸுல்தானான ஸுல்தான் ஹுஸேன் பர்ஷியாவினின்றும் வந்துகொண்டிருந்தான்; மஹ்மதின் பிள்ளை தன் சேனையை நடத்திவந்தான்; போகாரவும் அச்செயலிற் பின்னடையவில்லை. இவர்களிடையே பேபர் தம் அதிர்ஷ்டத்தைப் பரீக்ஷிக்கப் புறப்பட்டார்.

புறப்பட்டவர் வழியிலிருந்த அஸ்பரா, கோஜண்ட் நாடுகளைக் கைப்பற்றினர் பின்னர்ச்சேனைகள் தலைநகரை முன்னோக்கிப் போயின; ஆனால், அவ்வாண்டில் பயன் எதுவும் உண்டாகவில்லை. பேபரும், அவர் சகோதரன் ஸுல்தான் ஆலியும் ஒருவரையொருவர் சந்தேகித்தனரேனும் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டனர். அடுத்த ஆண்டு சாமர்க்கண்டின் மேல் பேபர் படையெடுத்துச் செல்லுகையில் ஸுல்தான் ஆலி உதவிசெய்ய வேண்டுமென்பதே அவ்வுடன்படிக்கையின் உள்ளடக்கம்.

உடன்படிக்கையின்படி பேபர் மறுவருஷம் மேயீ சாமர்க்கண்டின்மேல் படையெடுத்துச் சென்றார். ஆனால், ஸுல்தான் ஆலி எக்காரணத்தாலோ உடன்படிக்கைப்படி உதவ முன்வரவில்லை. அவன் உதவாததைக் குறித்துப் பேபர் சிறிதும் மனமழியவில்லை; தைரியத்தைக் கைவிடாமல் அவர் சாமர்க்கண்டிற்கருகில் பாளையமிறங்கினர். அவ்வூர் டாஜிக்ஸ் குடிகள், பேபரின் சிறந்த குணமுதலியவற்றைக் கண்டும் கேட்டும் அவரே தமதரசராதல் நலமெனக் கருதினர். அதே சமயம் இரக்கத்தையும், நடுநிலை

பிறழா நீதியையும், குடிகளிடம் கொண்ட அன்பையும், வெளியிடப் பேபருக்குச் சமயம் வாய்த்தது.

ஒருநாள் திடீரென்று எங்கும் குழப்பமும் சத்தமும் தோன்றின; பேபர் காரணத்தை விசாரித்தார்; தம்மைச் சேர்ந்த வீரர் சிலர், ஊராரைக் கொள்ளையிட்டதாகச் செய்தி கிடைத்தது. பேபர் நெஞ்சம் கோபத்தாற் கொதித்தது. "கொள்ளையிட்ட பொருளை நாளை விடிவதற்குள் அவரவரிடம் ஒவ்வொரு உண்மை வீரரும் சேர்க்கக் கடமைப் பட்டவராவர்" என்று கட்டளையிட்டார்; மறுபேச்சின்றிக் கட்டளைப்படி செய்யப்பட்டது. ஒடிந்து போன ஊசி முதல் ஒவ்வொன்றும் உரியவரிடம் சேர்ப்பிக்கப்பட்டன. இதுகண்ட மக்கள் அளவிலா மகிழ்ச்சியும், பேபரிடம் மட்டற்ற பற்றும் கொண்டனர். அவரிடம் இருந்த அன்பு பின்னும் பெருகிற்று. ஒவ்வொரு நாளும் கணக்கற்ற மக்கள் பேபர் சேனையில்வந்து சேரலாயினர். வியாபாரிகள் சேனைக்கு வேண்டுவனவற்றை விரும்பிக் கொடுத்துதவினர்.

இங்ஙனம் குடிகளின் அன்பையும் ஆதரவையும் பெற்ற பேபர், சாமர்க்கண்டை எளிதிற் கைப்பற்றி விடலாம் என்று கருதினர்; ஆனால் அஃது அவ்வளவு எளிதாகக்காணப்படவில்லை. மஹ்மூதீன் மகன் பேய்ஸன்கர் என்பவன் கோட்டையைப் பலமாகக் காத்து வந்தான்; கலகங்கள் பலதோன்றின; ஒன்றிலும் வெற்றி கிடைக்காமற் போகவே பேய்ஸன்கருக்கு அச்சம் தோன்றியது; துருகிஸ்தானிலிருந்து ஷாய்பானிகானை உதவிக்கு வரும்படி மன்றாடினன். அவன்

அனுப்பிய தலைவர்கள், பேபர் தம்மை ஆயுதங்களால் வரவேற்பதைக்கண்டவுடன் வந்தவழி திரும்புவதே நல்லது என்று தம் ஊர் திரும்பிச்சென்றனர்; அவர்கள் அகன்றசெய்திகேட்டவுடனே பேய்ஸன்கர் மனமழிந்தான்; தைரியம் குலைந்தான்; நடுக்கம் கொண்டான்; உயிர் தப்பி ஓடினுற் போதுமென்று தன்னையொத்த இருநூறு வீரருடன் பிறருக்குத் தெரியாமல் ஓடிவிட்டான். எதிர்ப்பாரின்றிப் பேபர் வெற்றியுடன் (1497 நவம்பர் மீ) சாமர்க்கண்டில் நுழைந்தார்.

பேபரின் மனக்கருத்து நிறைவேறிற்று; பேபர் அரண்மனையுட்புகுந்தார். முடிமன்னர் மூவரும், பிரபுக்களும், கோஜாக்களும், புகழ்படைத்த குடிமக்களும், மகிழ்ச்சியுடன் அவரை வரவேற்றுத் தம் பணிவைக்காட்டினர். பின்னர், தைமூருக்குரிய சிங்காதனத்தில் பேபர் அமர்ந்தார். அவர் கனவு கண்டுகொண்டிருந்த சாமர்க்கண்டு அவருக்கு உரியதாயிற்று. தமது காலால் அக்கோட்டையின் சுற்றளவை அளந்தார். சிதைந்த இடங்களைச் சீர்திருத்தச் செய்தார். பொக்கசத்திற்குச் சென்று சேமநிதியைப் பரிசோதித்தார். ஒரு கோட்டையிலிருந்து மறுகோட்டைக்கும், ஒரு அரண்மனையிலிருந்து மற்றொன்றிற்கும் திரிந்தவண்ணமே இருந்தார். தோட்டங்களிலெல்லாம் உலாவிப் பார்த்தார்.

சாமர்க்கண்டு, போகாராவரையிலும் ஒரு தோட்டம்போல் பரவியிருந்தது. பலபடச் சொல்வா

னென்; அஃதொரு பழத்தோட்டம்; தானியக்களஞ்சியம்; கைத்தொழிற்சாலை; கண்கவர் காட்சிக்கிருப்பிடம்; ஒவ்வொரு வீடும் அரண்மனையே; ஒவ்வொரு புதரும் பூஞ்செடியே. இவற்றினடுவில் கோஹிக் என்னும் அழகிய நதி, தவழ்ந்து விளையாடி எவற்றையும் பொலிவுறச் செய்து ஓடிற்று. தென் பகுதியில் தர்காம் என்னும் நதி, தன் கால்வாய்களுடன் நிலத்தைச் செழிக்கச் செய்தது. இவ்விரு ஆறுகளையும் பல கால்வாய்கள் பிணைத்தன. இக்கால்வாய்களின் கரையோரம் தோட்டங்கள் பல அமைக்கப்பட்டிருந்தன. ஆற்றோரங்களில் உல்லாச வனங்களும், அவற்றினடுவில் சிறந்த மாளிகைகளும் விளங்கின. நாட்டின் கீழ்ப்பகுதி அழகிலும் வளத்திலும் குறைந்ததன்று. அரண்மனைகளும், சிங்காரத் தோட்டங்களும் மிகுந்திருந்தன. இரும்பு வாயிற் (Iron Gate) படிக்கருகில் தைமூரின் மசூதி கட்டப்பட்டிருந்தது. ஹிந்துஸ்தானத்துச் சிற்பிகளும், பர்ஷிய ஓவியப் புலவரும், ஆசியா மைனர் சிற்றுளி வேலைக்காரரும் தத்தம் திறமையை அளவிட்டு அறிய விழைந்த இடமொன்றிருக்குமாயின் அஃது அவ்விடமே. கட்டிடத்தின்மேல் தோரணியிலிருக்கும் அரிய பெரிய கருத்துக்களைக்கொண்ட தொடர்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. அம்மசூதிக்கருகில் சர்வகலாசாலை ஒன்று கட்டப்பட்டிருந்தது. அண்மையிலிருந்த கோஹிக் குன்றில் உலுக்பேக் கட்டிய நக்ஷத்திரசாலை அழகாக அமைந்திருந்தது. அங்கு வான சாஸ்திரக் கருவிகள் பாதுகாக்கப்பட்டு வந்தன. மலையடிவாரத்தில் அழகிய தோட்டம் ஒன்றுண்டு. அதனடுவில் நாற்பது கால் கோபுரம் காணப்பட்டது.

இவையேயன்றி 'எதிரோலி மசூதி' நெடுந்தூரத்தி லுள்ள யாத்திராவாசிகளின் வியப்பிற்கும், ஆழ்ந்த யோசனைக்கும் காரணமாயிருந்தது. உலகில் வேறெங்கும் காணுத சிறந்த காகிதமும், சல்லாத் துணியும் அப்போது அங்கு எல்லையின்றிக் கிடைத்தன வென்ருல் சாமர்க்கண்டின் அக்கால நாகரிகச் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமோ?

இவ்வித வளங்களையும், அழகையும் பேபர் நூறு நாட்களே அனுபவிக்கும் பேறு பெற்ருர். அதன் பின் சாமர்க்கண்டை அவர் இழக்க நேர்ந்தது. பேபர் சாமர்க்கண்டிற்கு அரசரானபோது அவர் கீழ் அளவற்ற படைவீரர் இருந்தனர். அவர்கள் சாமர்க்கண்டைக் கொள்ளையிடலாமெனக் கருதி வந்தவர்; அதனுல், சாமர்க்கண்டு சிறுகச் சிறுகக் கொள்ளையிடப்பட்டு வறியதொரு நகரமாகவிருந்தது. குடிகளுக்கு உழுது பயிரிடும் கலப்பையும், காளைமாடும், விரையும், பேபர் கொடுக்க நேர்ந்ததென்ருல், மக்களின் வறுமை நிலையை எங்ஙனம் வருணித்துச் சொல்வது. ஆகவே படைவீரர்களுக்குப் பேபர் மாதவேதனம் அளிப்பது எளிய செயலாக இல்லை; அந்நிலையில் குடிகள் வரி கொடுப்பார்கள் என்று எதிர் பார்ப்பது அறிவின்மையாகுமன்ருே? வரியில்லாமல் பேபர் செலவுக்கு வேறு பணம் ஏது? எனவே, படைவீரரில் ஒவ்வொருவரும் தத்தம் தாய்நாடு, ஊர், மனை முதலியவற்றைத் தேடிச் சென்றனர். மிகவும் அன்புள்ள தம்பல் என்னும் தளபதியும் தன்னுட்களுடன் அகன்ருன்.

இந்நிலையில் பேபருடன் 1000 வீரரே நிலைத்திருந்தனர். திடீரென்று பேபருக்கு நோய் கண்டது; நான்கு நாட்கள் அவர் பேச்சு மூச்சின்றிக் கிடந்தார்; அவரைக் கண்டோர் யாவரும் இறந்தவராகவே கருதினர். வேலைக்காரர் மட்டில் பாலில் நனைந்த சுரப் பஞ்சினால் அவர் நாவை நனைத்துக்கொண்டிருந்தனர்.

இங்கு இவ்விதமிருக்கப் பேபரைவிட்டகன்ற தம்பலும், பிறபடை வீரரிற் சிலரும் கலகம் செய்யலாயினர். அவர்கள் பேபருடன் பிறந்த ஜஹாங்கிரைப் பர்க்காணாவிற்கு அரசனாக்கினர். அண்டிஜானில் பேபரின் தாயும், பாட்டியாரும் பகைவரால் சூழப்பட்டிருந்தனர். அவர்களைக் காக்க வரும்படி பேபருக்குச் செய்திமேல் செய்தி வந்தது; ஆனால் பேபர் எழுந்திருக்கவும் வல்லமையற்றுப் படுக்கையிலிருந்தார்.

நாட்கள் பலவாகியும் பேபர் வராதுபோகவே அண்டிஜான் கவர்னர், பகைவர் துன்பத்தைப் பொறுக்க முடியாமல் சமாதானம் செய்துகொண்டார். அவரைச் சமாதானம் செய்யத் தூண்டியதற்கு வேறொரு காரணமுமுண்டு; பேபரைப் பேச்சு மூச்சற்ற நிலையில் பார்த்த ஒருவன் பேபர் இறந்ததாகவே கூறிவிட்டான்; அதனாலும், கவர்னர் தைரியமிழந்து பகைவருக்குக் கீழ்ப்படிய நேரிட்டது.

பேபர் உடல் நலம்பெற்றஉடனே கோஜெண்டிற்குப் புறப்பட்டார். வழியிலேயே அண்டிஜான் கவர்னர்

பகைவருக்குப் பணிந்த செய்தி எட்டிற்று. 'பட்ட காலிலேபடும் கெட்டகுடியே கெடும்' என்பதற் கேற்பப் பேபர் அண்டிஜானை அடைவதற்குள் **ஸுல்தான் அலி,** சாமர்க்கண்டைக் கைப்பற்றி விட்டான்; பேபர் சாமர்க்கண்டைப் பிடித்தமை, 'வாய்த்தவிடும் போய் அப்பு நெருப்பும் அவிந்த' கதையாய் பெர்க்காணவும் சாமர்க்கண்டும் கை நழுவின.

ஆனாலும், தைரியத்தைக் கைவிடாமல் இரண்டையும் கைப்பற்ற அவர் பன்முறையும் வீணில் முயனார். தம்மளவில் முயல்வதில் பயனில்லாது போகவே தம் சிற்றப்பனான மகமத்கான் உதவியை நாடினார். தமக்குதவியாக மங்கோலிய சேனைகளுடன் அவனைவரும்படி கேட்டார். மகமத், படைகளை நடத்தும் திறமை பெற்றவனல்லன்; நின்று போராற்றும் தைரியமும் இல்லை; ஆனாலும் எப்போதும் ஏதேனும் செய்து கொண்டே இருப்பதில் விருப்பமுள்ளவன்; அவன் பேபர் வேண்டுகோளுக்கிணங்கித் தன் சேனைகளுடன் புறப்பட்டு ஆக்ஷியை அடையும் முன்னரே கலகக்காரரால் வழி மறிக்கப்பட்டான். அவ்விடத்திலேயே அவர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டு திரும்பி விட்டான்.

மகமத்கான் திரும்பிவிடவே பேபர் நம்பிக்கை யிழந்தவரானார். படைவீரர் மனைவிமக்கள் எல்லோரும் அண்டிஜானில் இருந்தனர். அண்டிஜானை இனிக் கைப்பற்ற முடியாதெனக்கண்ட அவர்கள்

ஒவ்வொருவராகப் பேபரை விட்டு நழுவலாயினர்; பெரிய தளபதிகளும், காலாட்களுமாகச் சுமார் 800 வீரர் அவரைவிட்டு விலகினர். இறுதியில் 200 வீரர்களே அவரோடு தங்கினர். பேபர் துன்பத்தின்கே இரையாய்க் குழந்தையைப் போல் சில சமயங்களில் அழுது அழுது வருந்தலானர்.

பேபர் அரசபதவியை இழந்து எளிய மனிதனானர். அவராளுகையில் இருந்தது கோஜண்ட் ஒன்றே; பகைவரிடமிருந்து வந்த இவர் தாயும், பாட்டியும் கோஜண்டில் பேபருடன் வந்து சேர்ந்தனர்.

பேபர் ஒன்றைக் காக்கப் போனவிடத்தில் எதிர்பாராத வழியில், இரண்டு நாட்டையும் இழந்ததால் அவர் மனமழிந்தாரேயன்றி, எளிதில் அவர் துயரத்திற் காளாகாதவர் என்பதில் ஐயமில்லை. "வெற்றியும் பரந்த ஆட்சியுமே என் மனத்தைக் கொள்ளைகொண்டிருக்கையில் ஒன்றிரண்டு தோல்விகளா என்னைப் பின்னடைச் செய்யும்? இன்று சண்டையில் தோல்வியடைந்தேன்; பகைவர் என்னை வென்றனர்; ஆனல், என் மன வலிமையும், உறுதியும் அவர்களுக்குக் கீழ்ப்படிய இணங்குமா?" என்று பேபரே எழுதியிருக்கின்றார்.

பேபர் டாஷ்கண்டிற்குப் போய் அங்குள்ள கானிடம் சிறுபடை யொன்றை உதவியாகப் பெற்றார். அம்மங்கோலியப் படையின் உதவியினல் நாஸிக் என்னும் ஊரைக் கைப்பற்றினர்; ஆனல், அந்த ஊரில் நெடுநாளிருந்து தம் படையைக் காக்க முடியவில்லை;

குடிகளை வீணில் வருத்துவது முறையன்றென்று கருதி அங்கிருந்து புறப்பட்டார். உராதிபாவின் அரசனான துக்ளாத்தினிடம் ஒரு ஊரைப் பெற்று அங்கிருந்துகொண்டு சாமர்க்கண்டிற்கும், கோஜண்டிற்கும் இடையிலுள்ள கோட்டைகளைக் கைப்பற்ற உறுதிகொண்டார். சுல்தான் ஆலி பேபரைத் தன் நிலத்தைவிட்டு விலகும்படி சொல்லி யனுப்பினான். உடனே பேபர் செய்வது இன்னதெனத் தோற்றாமல் ஐலாக் குன்றுகளிடையே போய்த் தங்கினார்.

பல உறவினரிருந்தும் பேபர் வீடு வாசல்களின்றிக் காட்டிலும், மேட்டிலும் அலைந்து திரிய நேர்ந்ததைப் பார்க்கையில் மிக்க வியப்பாகத் தோற்றலாம்; எனினும்; 'அரச பதவி உறவறியாது' எனத் துருக்கி மொழியில் வழங்கும பழமொழியையும், உறவினர் மனப்பான்மையையும் உய்த்துணர்வோர்க்கு வியக்க இடமிராது.

வடக்கிலுள்ள தம் சிற்றப்பனான மகமத்கானிடமிருந்து சிறிதளவு உதவியேனும் கிடைக்குமென எதிர் பார்ப்பதிற் பயனில்லை. சகோதரனான சுல்தான் ஆலியோ, பேபர் அரும்பாடுபட்டுக் கைப்பற்றிய சாமர்க்கண்டைச் சமயம் பார்த்துத் தனக்குரியதாக்கிக்கொண்டான்; மேலும் அவரைத் தன் நாட்டு எல்லையிலும் நிற்கவொட்டாமல் மலைக் குகைக்கு மருட்டியடித்தான்; அவனிடம் உதவி கேட்பது பாம்பினிடம் பால் கேட்பதை யொக்குமன்றோ? கிழக்கிலும் தெற்கிலும் நெஞ்சாலும் நினைக்க முடியாத ஷான் குஸ்ரு பேபரின் அழிவொன்றையே தன்

கொள்கையாகக்கொண்டு அற்றம் நோக்கி யிருந்தான். மகமத் மிர்ஸாவின் முதன் மந்திரியே, மிர்ஸா இறந்தபின் அரசனாக வந்தவன். அவனுடைய கொடுமையை வாசகர்களுக்கு விளக்கும் சொல் தமிழில் கிடைத்திலது; எனினும், பேபரே கூறுவதை நோக்குவோம்.

"வேளை தவறாமல் தெய்வங்களைத் தொழுது வருவதிலும், ஏழைகளுக்கு உணவு அளிப்பதிலும் அவன் தவறினதில்லை; எனினும், அவனைப்போல் பழி பாவத்திற்கு அஞ்சாத் தீயோர் இனிப் பிறக்கப் போவதில்லை. விலக்கப்பட்ட உணவுகளை விலக்கினும் உலகில் அழியும் இன்பானுபவங்களுக்காக அவன், மகமதினது இருகுமாரர்களுள், ஒருவனைக் குருடாக்கியும், மற்றொருவனைக் கொன்றும் அழித்தான். கடவுளால் சபிக்கப்பட்டும், மனிதரால் வெறுக்கப்பட்டும் தன்னலமொன்றையே கருதி வந்தவன்; விடுதலையின்றி நரகில் கிடப்பானாக! அவனைப்போல் வஞ்ச நெஞ்சம் படைத்தவர் தலையில் ஆயிரம் இடி இடிக்குமாக. அவன் பெயரைக் கேட்போரெல்லாம் அவனைச் சபிப்பாராக. இல்லாவிடில் அவர்கள் கடவுளின் சாபத்தைப்பெறுவது திண்ணம்."

"பேபர் சபிக்கும் குஸ்ருவின் குணங்களை நாம் வர்ணிக்கவேண்டியதில்லை. அவனிடம் பெரும் படை இருப்பினும், கை தூக்கியவுடன் ஓடும் ஈயைப்போல் கத்தியைத் தூக்கியவுடன் ஓடும் வீரன்." என ஷய்பானிகான் வேடிக்கையாகச் சொல்வதுண்டாம்.

இத்தியனிடம் சென்று உதவிகேட்கப் பேபர் மனம் ஒருப்படவில்லை; அவனிடம் இரப்பதை விடக் கடும்புலி வாழும் காட்டில் வாழ்வது மேலென நினைத்து ஐலாக்குன்றுகளிடை வாழும் இடையர் களோடு தங்கலானார்.

ஒருநாள் கற்பாறையின்மேல் தனி இடத்தில் அமர்ந்து தம் பழைய செல்வத்தையும், இப் போதைய ஆதாரவற்ற நிலைமையையும், நினைத்துக் கண்ணீருகுத்தவாறிருந்தார்; அப்போது ஒரு பெரி யவர் அவர் முன்தோன்றினார்; பேபரின் மன வருத் தத்தை யுணர்ந்தவர்போல் 'என்னினும் உன் வருத் தம் அதிகமா? நாடாண்ட நான் காடாள வர வில்லையா?' எனலும், பேபர் தம்மைப்போன்ற வரும் உலகில் உண்டென நினைத்து அவரை அன் போடு வரவேற்றுத் தம் வரலாற்றைக்கூறிச் சற்றே மனவாறுதலடைந்தார். அன்றுமுதல் இருவரும் ஒன்றாகவே கடவுளைத் தொழுவதும், உண்ணுவது மாக வாழ்ந்துவந்தனர்.

ஒருநாள் மாலை ஒரு தூதுவன் பேபரிடம் வந்து வணங்கி "அரசே! தங்களிடம் விசுவாசமுள்ள அலிடாஸ்ட் பின்வரும் செய்தியைக்கூறிவர என்னை அனுப்பியுள்ளார். அண்டிஜானைப் பகைவர் முற்று கையிட்டபோது அதனைக் காப்பாற்றும் வழி, சம தானத்தைத் தவிர்த்து வேறொன்றுமில்லையெனக் கண்டு அவர்களுடன் உடன்படிக்கை செய்துகொண் டாராம். பகைவர் அவரை மெச்சி மார்ஜினன் என்னும் சிறந்த பட்டணத்தை அவருக்குக் கொடுத்தனராம்!

அலிடாஸ்டு மகிழ்வோடு வாழ்ந்தாரேனும் தங்களுக்குச் செய்யத்தகாத செயலால் நெஞ்சம் புண்பட்டு வருந்துகிறார்; உடனே, தங்களை அந்நகருக்காயினும் அரசராக்கி அவர் உங்கள் அடிமையாக இருக்க உறுதிகொண்டுளார்; ஆதலால் தாங்கள் சிறிதும் சந்தேகமின்றி மார்ஜினுக்கு வரவேண்டும்" என்று கூறினன்.

தூதுவன் கூறிய செய்தியைக் கேட்டதும் பேபர் மகிழ்வோடு துள்ளிக் குதித்தார். ஒரு நொடி தாமதியாமலும், இரவென்று பாராமலும் புறப்பட்டார். குதிரை, காற்றினும் கடிது சென்றது; பேபர் தம் களைப்பைப் பொருட்படுத்தாதவராயினும் விலங்கின் நன்மையைக் கருதி ஓரிடத்தில் தங்கினர்; கதிரவன் மேற்கடலில் மூழ்கும் நேரம், பேபர் திரும்பவும் புறப்பட்டார்; மறுநாட் காலை மார்ஜினுக்கு நான்கு மைல் தூரத்தில் வந்துநின்றார். அப்போதுதான் அலிடாஸ்டினிடம் அவருக்கு ஐயந் தோன்றலாயிற்று; 'அவன் ஏன் தீய வெண்ணத்துடன் செய்தியனுப்பி யிருத்தலாகாது'. என எண்ணித் தயங்கி நின்றார்; நிற்கையில் அண்டிஜானிலிருந்து பேபரைத் தொடர்ந்தவர் அவருக்குத்தைரியம் ஊட்டவே அவர் கோட்டையுட்புகுந்தார்; கோட்டைக் கவர்னர் மிக்க ஆவலுடன் பேபரை வரவேற்றான்; பர்க்கானு திரும்பவும் தனக்குரிய அரசனைப் பெற்றது. ஆனல், பேபர் அதை நிலையாகக் காக்கப் பல ஏற்பாடுகள் செய்ய நேர்ந்தது. கலகமும் குழப்பங்களும் எங்கும் நிலைத்தன. குடிகள் திருடரிடம் அஞ்சியே வாழ்ந்து வந்தனர், பகைவர் சேனை

கொள்ளையடிப்பது வேறொரு வழியில் துன்பமளிப்ப தாயிற்று; இச்சமயத்தில் பேபர் அறிவற்ற செய லொன்றைச் செய்து விட்டார். "நாட்டில் அமைதி யுண்டாவதன் முன் எந்த அறிவிலியும் நான் செய்த செயலைச் செய்ய எண்ணுன்" என்று பேபர் வருந்து கின்றார். அடிக்கடி நேர்ந்த சண்டைகளால் ஊரில் எங்கும் வறுமையே குடிகொண்டிருந்தது. குடிகள் காப்பின்றி இருந்தனராதலின் அவரவரிடம் இருந்த பொருளையும் பறிகொடுத்து வருந்தினர். இந்நிலையில் பேபர் குடிகளிடம் எவ்விதம் வரிவசூலிக்கமுடியும். வருவாய் இல்லாமல் பேபர் படையை எங்ஙனம் காக்கவியலும்; ஆதலால், அவர் தம்மிடம் இருந்த 2000 வீரரை அவரவர் ஊருக்கு அனுப்பி விட்டார். அன்றுமுதலே பேபர் தம் தவற்றை உணர்ந்தவரா ஞர். கலைக்கப்பட்ட வீரர் பலர் தம்பலை அடைந்த னர். சிலர் ஊர்களைக் கொள்ளையடித்தும், வேறு அடாதகாரியங்களைச்செய்தும் குடிகளை வருத்துவா ராயினர்.

தம்மை வெல்லக்காலங் கருதியிருந்த தம்பலுக்குப் பேபரே ஏற்ற தருணத்தை வருவித்துக் கொடுத் தார். பேபர் கலைத்த சேனுவீரர் நேரே தம்பலை யடைந்தனர். அவன் அவர்கள் உதவியினுல் பேபரை இருமுறை எதிர்த்தான். ஆனல் பேபர் இருமுறையும் அவனைததோற்கடித்துத் துரத்தினர். வழியிலிருந்த 'மாது' என்னும் கோட்டையைக் கைப்பற்றினர். பின்னர் இருதிறச் சேனைகளும் எதிரெதிரே பாசறையிற்றங்கி யிருந்தனர். அடிக்கடி சிறு சண்டைகள் பல நடந்தன. கடைசியில் தம்பல்

நேருக்கு நேர் நின்று போர் செய்ய உறுதிகொண்ட பேபர் அதற்கும் அஞ்சிலர். இதுவே பேபர் செய்த சண்டைகளில் முதலாவதாகும். தம்பல் தோல்வியுற்று ஓடினான். அவனுடைய கூடாரங்களும் போருக்குரிய பிறபொருள்களும் பேபர் வசப்பட்டன; அப்பொழுது தம்பலை முற்றும் அடக்க முடியவில்லை. அவன் திரும்பவும் சண்டைக்குப் பேபரை அழைத்தான். பேபரின் வீரர் மனத்தளர்வெய்தலாயினர். அவரவர் தத்தம் ஊருக்குப்போக விரும்பினர். இந்நிலையில் பேபர் எங்ஙனம் போர் தொடுத்து வெற்றி பெற வியலும். சிலதளவாய்களின் விருப்பத்தின்படி பேபர் தம்பலுடன் உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்வுடன்படிக்கையின்படி பேபருக்கு ஸர்நதிக் கரையில் உள்ள அண்டிஜான் கிடைத்தது. தம்பி ஜிஹாங்கீரும் ஆட்சியைப் பெற்றான். இருதிறத்தாரும் கைதிகளை மாற்றிக் கொண்டனர். இருவரும் தத்தம் தலைநகரையடைந்தனர்.

# மூன்ரும் அத்தியாயம்

தம்பலேப் பக்க பலமாகக் கொண்ட ஜிஹாங்கிருடன் பேபர் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்ட போது சாமர்க்கண்டைக் கைப்பற்றுவதைப் பற்றிய பேச்சு நடந்தது; இருவரும் சேர்ந்து சாமர்க்கண்டை ஸுல்தான் அலியினிடமிருந்து தம்வசப்படுத்திக் கொள்வதென்றும் பேபர் அதன் அரசராவதென்றும், அதற்குப் பதில் பர்கானு முழுவதும் ஜிஹாங்கீர் ஆளுவதென்றும் உறுதி செய்யப் பட்டது.

அஃது ஒருபுறமிருக்க, பேபர் மனம் சாமர்க் கண்டைக் கைப்பற்றுவதிலேயே ஆழ்ந்திருந்தது. முன்னொருகால் தாம் அதை நூறு நாட்கள் ஆண்ட சிறப்பை மனக்கண்முன் கண்டு ஆனந்த முறுவார். அப்படியே என்றும் அதன் அரசராய் அமர அவர் விழைந்தார். சாமர்க் கண்டின் முன் அண்டிஜான் அவருக்கு ஒரு பாழ்பட்ட நகரமாகவே தோன்றியது. மேலும் நாற்புறமும் அச்சுறுத்தும் பகைவர்களை யடக்கும் படைவீரரைக் காக்கத் தக்க வருவாய் அவ் வூரில் வசூலாக இல்லை. பேபர் ஊக்கமற்றிருப்பதை ஒருவாறுணர்ந்த அலிடாஸ்டு தானே எல்லா இராஜ்ய வியவகாரங்களையும் கவனிப்பதானுன்; உண்மையில் அவனே அரசன்; நாளாக நாளாகப் பேபர் அவன் கைப்பம்பரம் போலானுர். பேபரின் உயிர் நண் பரையும் உண்மை வீரரையும் அவன் பலகாரணங்க

ளால் வேலையினின்றும் விலக்கி வந்தான். சிலநாட்களில் பேபர் பெயரளவில் 'அரசர்' என்ற பட்டந் தாங்கித் தனியரானார். அப்பொழுது அலிடாஸ்டுடன் அவர் மனப்பிளவுடன் பழகுவது, காத்துக்கொண்டிருக்கும் தம்பலைத் தாம்பூலம் வைத்தழைப்பது போலாகும் என்று தம்விதியை நினைத்து அவர் மௌனமாகவிருந்தார். அவனிடம் அவர் அனுபவித்த துன்பங்களும் அவமானங்களும் அளவிறந்தன; ஆயினும் பேபர் நற்காலத்தை எதிர்பார்த்து நின்றார்.

வானோக்கி வாடிய பயிருக்கு நீரை வழங்கும் மேகம்போல, சாமர்க்கண்டிலிருந்து சிலர் வந்து பேபரை வாழ்த்தி உடனே அவரைச் சாமர்க்கண்டிற்கு வரப்பிரார்த்தித்தனர். தர்கான் வம்சத்திலுதித்தவர், வழிவழியாகப் பெரும்பதவிகளைத் தாங்கி வந்தவர்கள். அவர்களிடம் ஸுல்தான் அலி பகைமை கொண்டு சாமர்க்கண்டிலிருந்து அவர்களைத் துரத்திவிட்டான். நாடிழந்த அவர்கள், அலியைப் பழிக்குப் பழிவாங்க வெண்ணினர். தம் விருப்பத்தை எளிதில் நிறைவேற்றத்தக்கவர் பேபரே என உணர்ந்த அவர்கள், பேபருக்குப் பின்வருமாறு நிருபம் ஒன்று எழுதி அனுப்பினர்.

"தயைமிகுந்த அரசே! கொடுங்கோலர்க்குச் செங்கோலாட்சி பொருந்துவதன்று. சாமர்க்கண்டு கொடுங்கோன்மையால் வாடுகின்றது. இச்சமயம் தாங்கள் சாமர்க்கண்டைக் காக்கமுன்வருவது தங்கள் கடமை. தங்களுடன் கலந்துகொள்ளுவது

எங்கள் உயிர்த்தொண்டு; கருணைகூர்ந்து உடனே புறப்பட்டு வரவேண்டுகின்றோம."

இதைப் படித்தவுடன் பேபருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை; பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் ஆனார்; காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும் என்னும் ஆன்றோர் மொழிக் கேற்ப, பேபர் உடனே சாமர்க்கண்டு செல்ல ஆயத்தமானார்; தம்மைச் சேர்ந்த சிலருடன் புறப்பட்டார். வழியில் ஆலிடாஸ்டு பேபரைக் கண்டான். அவன் மனத்தில் ஐயந் தோன்றியது; உடனே அவரைத் தொடர்ந்தான். இருவரும் உரேதியாவை யடைந்ததும் கம்பர்ஆலி ஓடோடியும் வந்து "பிரபுவே! தாங்கள் செய்த உடன்படிக்கைக்கு மாறாக தம்பல், என்னை அடித்துத்துரத்தி விட்டான். நான் உணவும், உடுக்கையும் இன்றி அலைய நேர்ந்தது." என்று மனம்வருந்தி முறையிட்டான். பேபர் அவன் படும் கஷ்டத்திற்கு மனம் நொந்து, அவனைத் தம்முடன் அழைத்துக் கொண்டு சென்றார்.

இவர்களெல்லோரும் தங்களாற் கூடிய அளவு விரையச் சென்று சாமர்க்கண்டை அடுத்ததாகிய யூரட்கான் என்னும் ஊரில் தங்கினர். அவ்வூரில் முக்கியமானவர் பேபரை மரியாதையுடன் வரவேற்று உபசரித்தனர். அவர்கள் குருவும், தம் ஆசீர்வாதம் பேபருக்கு இருப்பதாகக் கூறினர்; அவர் உதவியைக் கொண்டு பேபர் சாமர்க்கண்டை வென்று விடலாமென்று நம்பினர்.

ஆனால் அவர்கள் கூறியபடி அப்பொழுது சாமர்க் கண்டைக் கைப்பற்றுவது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. ஸுல்தான் அலி தான் தனியாகப் பேபரோடு எதிர்த்துப் போராட முடியாதெனக் கருதி ஷேய்பானிகானைத் தனக்குத்துணையாக வருவித்துத் தன்னூரிலேயே வைத்துக் கொண்டான். ஷெய்பானி, தன் மனக்கருத்து நிறைவேறுங்காலம் கிட்டியது என்று உள்ளுக்குள் மகிழலானான். நாட்கள் செல்லச் செல்ல அலியின் தாயாரை ஷெய்பானி பழிக்கலானான். அவள் தூண்டுதல்மேல் தான் வந்ததற்குத் தக்க மரியாதைகள் செய்யப்பெறவில்லையென்று குறைகூறினான். இவ்வதூறு பெருகவே ஒருநாள் அவன் அலியைக் கொன்றுவிட்டான்; அவனோடு ஆக்ஸஸ் பிரதேசத்தில் தைமூர் வம்சம் பூண்டற்றுப் போயிற்று.

அலி, பெண்ணின் சொல்லைக்கேட்டுத் தானே அழிந்ததைப் பேபரே கூறியிருத்தல் கேட்கத்தக்கது; "நிலையில்லா அரச இன்பத்தை எண்ணித் தன் வம்சத்திற்கு என்றைக்கும் அழியாப் பகையைத் தேடிக்கொண்டவன். பின்புத்தியுள்ள பெண்ணின் வார்த்தையைக்கேட்டு அழிவைத்தேடிக்கொண்டவன் இவனே. உற்றாரையும், உறவினரையும் வஞ்சித்து ஊரானுக்கு இடங்கொடுப்பவர் அனுபவிக்கத் தகுந்த தண்டனையே இவனுக்கும் கிடைத்தது."

ஷேய்பானிகான் அரசுரிமையை கைக்கொண்டதால் பேபர் முழுநம்பிக்கையுடனும் சாமர்க் கண்டை நோக்கிச் சென்று, அவனுடன் போர்

கொடுக்கும் எண்ணமற்றவரானார். திரும்பவும் கைகொடுத்துதவுவார் ஒருவருமின்றிப் பேபர் அலைய நேர்ந்தது. அவரை முதலில் கைவிட்டுச் சென்றவர்கள் அலிடாஸ்டும் அவனுடைய ஆட்களுமே.

"ஆரம்பமுதல் அவனிடம் தோன்றிய பகைமையும், வெறுப்பும் என் உள்ளத்தில் வேரூன்றிவிட்டன. பாதி அச்சத்தாலும், பாதி வெட்கத்தாலுமே அவன் என்னோடு வந்தான். என்னைப்பிரிய விடை கேட்டான். நானும் உடனே விடை கொடுத்தனுப்பினேன்; அவன் தம்பிலை அடைந்து, அவன் கொடுஞ்செயலிற் சேர்ந்துழைத்து எனக்குத் தீங்கிழைக்க முயன்முன் ; ஆனால், நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறது; கெடுவான் கேடு நினைப்பான் என்னும் பெரியோர் வாக்குப் பொய்க்குமோ? என்னையழிக்க நினைத்த அலிடாஸ்ட் பிள்ளையின் கண்கள் குருடாக்கப்பட்டன," எனப் பேபரே கூறுகிறார்.

பேபரை, சாமர்க்கண்டிற்கு வரும்படி அழைத்த பெரியோர் ஷெய்பாணிகான் வந்ததும் அவனுக்கும் உதவி செய்யாமல், பேபருக்கும் உதவி செய்யாமல் ஹிஸ்ஸாரிலுள்ள பேபரின் வழிப்பகைவரான குஸ்ருஷாவை அடைந்தனர். இவர்கள் தன்மை இருந்தவாறென்னே !

யாவராலும் கைவிடப்பட்ட பேபர் தங்க இடமும் அற்றவரானார் ; தமக்கு உதவி புரிவதாக வாக்களித்த கோஜாவும் உஸ்பேக்கரால் கொல்லப்பட்டார்.

அவர் உதவியும் பேபருக்குக் கிடையாததாயிற்று; அவர் திரும்பவும் ஐலக் குன்றுகளுக்கே திரும்பக் கருதினார். ஆனால், ஐலக் குன்றுகளுக்குச் செல்லுவது எளிய செயலன்று; எனினும் வேறு வழியில்லை; ஆகவே, அவர் தம் சிறு படையுடன் புறப்பட்டார்; அஞ்சத்தக்க மலை வழிகளையும், காடுகளையும், காறுறுகளையும் அவர் கடக்க நேர்ந்தது. பல இடையூறுகளையும் ஒருவாறு தாண்டிக் காம்ரூத் பள்ளத்தாக்கை அடைந்தனர். சில விடங்களில் செங்குத்தான பாறைகளில் ஏறி வழிநடக்க நேர்ந்தது. அவ்விடங்களில் உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு தொத்தித் தொத்தியும், தாண்டியும், வளைந்தும், நெளிந்தும் செல்லலானார். வழிநெடுகக் கால்தவறிப் பன்னூறு அடிகள் கீழே விழுந்திறந்த குதிரை எலும்புகளும்; மனிதர் எலும்புக் கூடுகளும் பேபருக்கும், அவர் வீரர்களுக்கும் பார்க்கப் பயங்கரக் காட்சிகளாயிருந்தன. இத்தோற்றங்களாலும், பாதையின் கஷ்டத்தாலும் உடன் வந்த சிலர் மனச் சோர்வுறலாயினர். ஆனால் பேபர் தளர்ச்சி சிறிதுமின்றி உற்சாகத்துடன் தம் வீரர்களை நடத்திச் சென்றார். ஆதலின் அனைவரும் களைக்காமல் ஊக்கத்துடன் வழியைக்கடந்தனர்.

இவர்கள் ஐந்துநாட்கள் நல்ல உணவும் உறக்கமும் இன்றித் துன்பங்களை நிறைந்த மலைக்காட்டில் அலைந்து, வழியைக்கடந்தனர். 'ஸர் இ. தாக்' என்னும் இடத்தை அடைந்தனர். இஃதொரு மலைக்கணவாய்; இதைப் போன்றதை அவர்கள் அதுவரை பார்த்ததில்லை; கேட்டதுமில்லை; மிகவும் குறுகியது; நீண்டுயர்ந்து செங்குத்தானது; நெட்டுக் குத்தலாக விருந்து ஏறும்வழி காடு

முரடாகவில்லாமல் ஊன்றியகால் நிலைக்கவொட்டாமல் வழுக்கிற்று. நாவரட்சியால் மக்கள் இறக்கநேரினும் அங்கு நீரில்லை; புல்பூண்டையும் அங்குக் காண்பதரிது. இதைக்கடப்பது மக்களுக்கு இயலாததென்றே எல்லோரும் கருதினர்; துன்பக்காலத்தில் உற்சாகம் காட்டுபவனே உண்மை வீரன் என்பர்; பேபர் இத்தகையரே; அவர் ஊக்கமும் உற்சாகமும் பன்மடங்கு வளர்ந்தன. மனம்தளர்ந்து சோர்வடைந்த வீரர், பேபரைச் சட்டமாகக் கருதி ஊக்கங்கொண்டு உயிரையும் பொருளாக எண்ணுமல் கடமையொன்றையே கருத்தில் வைத்துப் அவரைத் தொடர்ந்தனர். முதலில் பேபர் சென்றூர்; மற்றவர் அவரைப் பின்பற்றினர். எவரும் கீழ்நோக்க அஞ்சினர்; ஏனெனில், பார்ப்பவர் கண்கள் இருண்டு ஆயிரமடிகளுக்குக் கீழுள்ள இருண்டபாதளத்தில் சுருண்டு விழுவார் என்பதில் ஐயமேயின்று; அவர்களை பின்னிருந்து தள்ளியது கடமை யொன்றே; அவர்கள் ஒவ்வொரு நொடியும் முன்னும் பின்னும் பக்கத்திலும் பார்த்தது மரணமே. மேலும் கீழும் மரணதேவதை அவர்களை விடாது தொடர்ந்து சென்றது. அவர்கள் எவ்வளவோ எச்சரிக்கையுடன் சென்றும் இரண்டொருவர் அப்பாதளத்திற்கு இரையாகமல் தப்பவியல இல்லை. ஆனல் பிற வீரர், இறந்தோரைப் பற்றி நினைக்கவும், துக்கச்செறியவும் நேரமில்லாமல் உயிரை அந்தரத்தில் கொண்டு போவது போல் கடந்தனர்.

மரணதேவதையால் அழைத்துக் கொண்டுவரப் பெற்ற அவர்கள் பரந்துஅழகியதோர் ஏரிகரையில்

விடப் படின் எத்தகைய மகிழ்ச்சியுறுவர்; அப்படியே எங்கும் பச்சைப் பசேல் என்னும் புல்லும், மலர்க்கொடிகளும், செழுமை துள்ளி ஓடுவதெனத் தரும் தென்றலில் அசைந்தாடும் பழமரங்கள், உயிர் நிலைச்சாதாரமான சிற்ருேடைகளாகியவற்றைக் கனவிற்காணும் காட்சிகளோ கானலில்காணுந் தோற்றமேயென மருண்டு பின்னர் உண்மையே எனத்தெளிந்தனர் மனங்கொண்டமட்டும் நீரருந்திப் புல்வெளியில் புரண்டு இளைப்பாறித் தந்தம் அச்சத்தையும். சோர்வையும் முற்றுங் களைந்தனர்; களைப்பகன்றபின் கோஹி யாற்றின் வழியே நடந்து ஐலக் குன்றுகளை அடைந்தனர்.

அங்குச் சென்றதும் வழியில் நேர்ந்த துன்பங்கள் நீங்கினவேயன்றி, சாமர்க்கண்டை வசப்படுத்தும் மனத்துன்பம் பேபரை விட்டு அகலவில்லை. அஞ்சாமையும், துணிவும், குன்ருஊக்கமும், உண்மை வீரமும் கொண்ட சிலவீரர் பின்நிற்பினும் பேபர் எத்துணிகரச் செயலையும் மேற்கொள்ளக்கூடியவர். அப்போது அவருடன் இருந்தவர் அத்தகைய வீரரே. அவர்களுடன் பேபர் கலந்து யோசித்தார்; அவர்களும் சரி என ஒப்பினர். திரும்பவும் பேபர் சாமர்க்கண்டின் மீது படையெடுத்துச் செல்லலாஞர்.

இச்செய்கையைக் காண்போருக்குப் பேபர் அறிவிலி என்ருே பைத்தியக் காரரென்ருே தோன்றும்; ஆஞல், சாமர்க்கண்டின் நிலைமையையும், அந்நாட்டு மக்களின் மனப்பாங்கையும் கூர்ந்து நோக்குவோர்க்குப் பேபர் செய்கை நியாயமெனத் தோன்றும்; ஷெய்பானி, கான் சாமர்க்கண்டைப் பிடித்துச் சில நாட்களே ஆயின.

அவன் ஸுல்தான் ஆலியைக் கொலைச் செய்து அக்ர மமாக அந்நாட்டைத்தனதாக்கிக் கொண்டான்; ஆத லின் குடிகளின் நட்பை விரைவிற் பெற அவ னால் முடியவில்லை. நாளேறவேறக் குடிகள் ஷெய்பானிகான் கூறிய பசப்புவார்த்தைகளில் மயங்கி அவன்செய்த கொடுமையை மறத்தலும் கூடும். பின்னர் அவனுக்குத் துணை புரிய முற்படுதலும் இயற்கை; இவ்விதம் ஷெய்பானிகான் நிலைக்குமுன் பேபர் அவனை வெல்ல எண்ணிப் படை எடுத்தார். இச்சமயம் தவறினால் எச்சமயமும் வாய்க்காது என் பது பேபருக்கும் அவர் வீரருக்கும் ஆழ்ந்த யோச னையின் பயனாகத் தோன்றியது. திடீரென்று சாமர்க் கண்டில் தாம் நுழைந்தாரானால் மக்கள் பழைய விசு வாசத்தை மறவாமல் தம்மை வரவேற்பர் என்பதும் மற்றொரு காரணம்.

இச்சந்தர்ப்பத்தையே தக்கதெனக் கொண்ட பேபர் தம்சிறுபடையுடன் சாமர்க்கண்டு சென்று அதை முற்றுகையிட்டார்; ஆனால், கோட்டைக்குள்ளிருந் தோர் ஆண்மையுடன் எதிர்த்தனர். பேபர் அப்போது போரிட்டுத் தம் சிறுபடையும் அழியச்செய்யாமல் யூரட் காலை நோக்கிப் போனார்; ஆனால், கள்ளிரவாகி யும் யூரட்காலின் வீரர் பேபருக்கு இடங்கொடாமல் எதிர்க்க முற்பட்டனர். அதைக்காணவே பேபர் போர் தொடுக்காமல் காலங்கருதி அங்கிருந்தகன்றார்; ஆனால் அவர் நோக்க முற்றும் சாமர்க்கண்டை கைப் பற்றுவதிலேயே இருந்தது. ஒவ்வொரு விநாடியும் தாம் அதை வெல்லும் காலம் வருமோவென நினைத்து க்கொண்டிருந்தார்.

நாட்கள் சிலகழிந்தன. பேபர் மறுபடி சாமர்க்கண்டை நோக்கிப்புறப்பட்டார். அதுபொழுது காஜா அப்துல் மகாரிம் என்பவர் இவரைத் தொடர்ந்தார். இருவருமாகச் சாமர்க்கண்டைத் தாக்கினர். பேபருடன்வந்த வீரருள் வீரதீரம் பொருந்திய எண்பதின்மர் கோட்டைச் சுவரிலேறிக் குதித்தனர்; பிராஸா என்றபெயர் பெற்ற வாயிற் கதவுகளை திறந்தனர்; பேபர், எஞ்சிய வீரருடன் கோட்டைக்குள் நுழைந்தார். நள்ளிரவாகையால் ஒலியடங்கியிருந்தது. கடைக்காரர் சிலர்மட்டில் உண்மைநிலையை யுணர்ந்து கொடியவன் காலங்குறுகி விட்டதென்று உவகையுற்றுக் கடவுளை மன்மாரத் தொழுதனர். பேபர் வருகை விரைவில் மக்களுக்கு எட்டியது; அவர்கள் உடனே அளவுகடந்த மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றுர்கள். பேபருடன் வந்த வீரர், அஸ்பெக்கரைத் தெருக்கடோறும் துரத்திச் சென்று விலங்குகளை வேட்டையாடுவதே போல் கொன்றனர்.

அப்பொழுது சாமர்க்கண்டு பேபர் வசமாயிற்று. இருநூற்று நாற்பது வீரர் துணையாக நிற்க, பேபர் அந்நகரைக்கைப்பற்றி வெற்றிமுழக்குடன் சிங்காதனம் ஏறினார்; மக்கள் பரிவுடன் அவரை உபசரித்துத் தங்கள் வணக்கத்தைச் செலுத்தினர்; நிற்க,

அஸ் பெக்கர் பேபர் வருகைக் கேள்வியுற்று, இரும்பு வாயிற்படியண்டை கூடி மக்களை எதிர்த்தனர். அவர்களை, மக்கள் எளிதிலடித்துத் துறத்தி விட்டனர்.

இந்தச்சமயத்தில் ஷெய்பானிகானே தன் இருப்பிடத்திலிருந்து நூறுவீரரடங்கிய குதிரைப் படையோடு

நகருக்கு வெளியே வந்தான். அவனை எளிதிற் கொல்வதற்கு அதுவே தக்க சமயம் என்று பேபர் எண்ணினார்; ஆனால், இவருடன் வந்த வீரர் மிகச்சிலர்; ஆதலால் ஷெய்பானிகான் துன்பமின்றி எளிதில் தப்பியோடிப் போய்விட்டான். சபையிலுள்ள பெரியோரும் பிறரும் பேபரை முறைப்படி யுபசரித்துத் தங்கள் வணக்கத்தைச் செலுத்தினர்.

"சுமார் நூற்று நாற்பதாண்டுகள், சாமர்க்கண்டை என்முன்னோராண்டனர்; அயல்நாட்டுக் கொள்ளைக்காரன், படுகொலைபுரிந்து சிங்காதன மேறினான்; எப்பொருளுக்கும் உயர்வாய் நின்ற பரம்பொருள் தீயோனைத் தண்டித்து நாட்டை எனனிடம் சேர்ப்பித்தது" என்று பேபரே கூறுகின்றார்.

இவர் கி. பி. 1500 ஆம் ஆண்டில் சாமர்க்கண்டைக் கைப்பற்றினர். இவரது தாயாரும் பிறவுறவினரும் அண்டிஜானிலிருந்து இவரைத் தொடர்ந்து வந்தனர். வரும் வழியில் இவருக்கு நேர்ந்த துன்பங்கள் பல. நாடு நகரமின்றி மனக்கவலையுற்றுத் துன்பம் மேலிட்ட காலத்தில் உறவினரின் வற்புறுத்துதலின் மேல் இவர் விவாகஞ் செய்துகொள்ள நேர்ந்தது. இளமை முதல் இவரிடம் அன்பு கொண்ட 'அயேஷா' என்னும் பெண்மணியைக் கோஜண்டில் பேபர் மணம்புரிந்து கொண்டார். அவள் சாமர்க்கண்டையடைந்ததும் ஒருமகவை யீன்றாள். இதுவே இவரது முதல் மகவு. இம்மகவுக்கு பாக் ரன்னிஸா என்று பெயரிட்டனர். [இதன் பொருள்: தன்பேரழகினால் மகளிரினத்தை விளங்கச் செய்பவள் என்பதாம்] பிறந்த

நாற்பதாம் நாளில் அஃது இறைவனையடைந்தது. அப்போது பேபருக்குப் பத்தொன்பது வயது. இல்லறவின்பத்தைத் துய்க்கும் எண்ணம் அவருக்குச்சிறிதும் இல்லை. அயேஷா, பேபரோடு சிலநாள் இருந்து பிறகு அவரை விட்டு விலகினாள். அதற்குத் தாமே காரணமென்று பேபர் கூறுகிறார்.

"காதல் கோபம் பிடிவாதம் முதலிய தீக்குணங்களைப் படைத்த மகளிரை, நல்லொழுக்கம் வாய்ந்த முகமதியரிடமிருந்து கடவுள் விலக்குவாராக" என்று அவர் தம் தெய்வத்தை தொழுது வந்தார்.

அரசுகட்டிலேறியவுடன் பேபர் அயல் நாட்டார் அன்பையும் ஆதரவையும் பெறும் முயற்சிகளைச் செய்யலானார்; தமது தூதுவரை அங்கங்கே யனுப்பித் தம் விருப்பத்தையும் நட்பையும் தெரிவித்து மேன்மேலும் ஓங்கிவளரும் அஸ்பெக்கரின் அதிகாரத்தைக் குலைக்க வேண்டுமென்றும், அதற்கு அவர்கள் உதவியும் அன்பும் இன்றியமையாதவை என்றும் அவர்களுக்குத் தெரிவித்தார்; ஆனால் சிலர் பேபரை அரசரென மதியாமல் இருந்தனர். வேறு சிலர், இவரோடு சேர மறுத்தனர். இவர் தம்பியான ஜிஹாங்கீர் பெர்கானாவிலிருந்து நூறு வீரரை யனுப்பினார். இவர் சிற்றப்பன் சில வீரரை யனுப்பினான். தைமூர் வழியிற் பிறந்து பலத்திலும் ஆண்மையிலும் சிறந்து விளங்கிய ஸுல்தான் ஹுஸேன் இவரை அவமதித்தான்; ஆயினும், பேபர் தம் படையைப் பலப்படுத்திக் கொள்ளத்தக்க முயற்சிகளைச் செய்துவந்தார். நகரங்களும் மாகாணங்களும் இவரைச் சேர்ந்தன.

சாமர்க்கண்டைச் சேர்ந்த தார்த்தாரிய பிரபுக்களிற் சிலர் இவரை மிக விரைவில் தஞ்சமடைந்தனர். கி. பி. 1501 ஆம் ஆண்டு மேமீ இவர் ஷெய்பானியை எதிர்த்துப் போர்புரியச் சென்றார்.

திடீரென்று பேபர் சாமர்க்கண்டின்மீது படையெடுத்தது கண்ட ஷெய்பானி போகாராவிற்கு ஓடி, அங்கிருந்து 'தபூஸி' என்ற ஊரை யடைந்தான். சாமர்க்கண்டிலிருந்து இது நெடுந்தூரமன்று; பேபர் தம்படையுடன் போர்க்களங் குறுகினார். கவசம் பூண்ட வீரர் அணியாக வகுக்கப் பெற்றிருந்தனர். ஷெய்பானியும் போரை எதிர்பார்த்து நின்றான்; இருதிறத்தினரும் தத்தம் படையைக்காட்டிலும் அயல்சேனை மிகப்பெரிதென்றெண்ணினர். கடும்போர் நடந்தது; எவர் வெற்றி பெறுவர் என்று உறுதிகூற இடமில்லை. அப்பொழுது ஷெய்பானி தன் சேனையின் ஒரு பிரிவைப் பேபர் படையின் இடப்பக்கமாகச் செலுத்திப் பின்புறம் வந்து சேர்ந்தான். எதிர்பாரா இந்நிகழ்ச்சியைக் கண்ட பேபர் திடுக்கிட்டார். பேபர் நிலை, இருதலைக்கொள்ளி யெறும்புபோ லாயிற்று. முன்னும் பின்னும் பகைவர் சரமாரி பொழிந்தனர். பேபர் திகைப்புற்றார்; அந்நிலையிலிருந்து அவர்காலதாமதமின்றி முன்புறமாகத் தப்பவேண்டும். பேபர் சேனையின் ஒரு பகுதி, சட்டெனப் பின்பக்கந் திரும்பிற்று, அப்பொழுது இவர் வலப்பக்கமிருந்த வீரர் மற்றவர்களினின்றும் விலகிவிட்டனர்; ஆதலால் இவருக்கு அவர்களுடன் தொடர்பில்லையாயிற்று. இடப்பக்கம் இருந்த பகைப்படைப் பகுதியைத்தாக்கிப் பகைவரைச்

சின்னபின்னமாக்கினர்; இவர் பின்புறமிருந்த சேனை பகைவருடன் சண்டையிட்டது. குழப்பமேலிட்டு வீரர் நிலைதவறினர்.

அந்நிலையில் பேபருடன் வந்த மங்கோலிய வீரர், சண்டைசெய்வதை நிறுத்திவிட்டுக் கொள்ளையிடலாயினர். பேபர் மிக்க இகழ்ச்சியுடன் அவர்களைப்பற்றிக் கூறுகிறார் :—

"இம்மங்கோலிய வீரர், மானத்தைப் பெரிதாக நினைப்பாரல்லர்; வெற்றிபெற்றால் பகைவரைக் கொள்ளையிடுவர்; தோல்வியடைந்தால் தம்மவரையே கொன்று அவர்கள் பொருள்களைச் சூறையாடுமியல் பினர்."

முன்னும் பின்னும் பகைவர் துன்புறுத்தவும் மங்கோலிய வீரர் தந்நயங்கருதித் தம்மைச்சேர்ந்தோர் பொருளைக் கொள்ளையிடவும் பேபர் நிலை பரிதவிக்கத் தக்கதாயிற்று. வீரரிற் பலர் அவரை விட்டு ஓடுவாராயினர்; எஞ்சியிருந்தவர் மிகச்சிலரே.

பேபர் தோல்வியடைந்து சாமர்க்கண்டு திரும்பலானார்; ஆண் சிங்கத்தைப்போன்ற ஆறு வீரர் போரில் மடிந்தனர். பிறர், இருக்குமிடந் தெரியாமல் ஓடிவிட்டனர். அந்நிலையில் குடிகளின் உதவியைக்கொண்டே சாமர்க்கண்டைக் காக்க நேர்ந்தது; குடிகள், பேபரின் நன்மைக்கு உண்மையுடன் உழைப்பவரே, எனினும், போர்த்திறமை யற்றவர்; ஆயினும் பேபர் இனிய மொழிகளால் அவர்களை

ஊக்கினர். ஷேய்பானியின் சேனை மிகப் பெரிதாயினும் ஏழுமாதம்வரை பேபர் கோட்டையைத் தீரத்துடன் காத்துவந்தார். தலைவரின் ஊக்கத்தைக் கண்டு குடிகளும் உவகைகொண்டு சில சமயத்தில் வெளியேவந்து பகைவரைத் தாக்கலாயினர். ஒரு சமயம் அஸ்பெக்கர் சுவரின் மேலேறிவிட்டனர். இதையறிந்த குடிகள் அவர்களை வெட்டிச் சாய்த்தனர். இரவு முழுதும் பயங்கரமா யிருந்தது. ஷெய்பானியின் சேனையில் முழக்கம் பலமாயிற்று. நாளேற வேற உணவுப் பொருள்களும் குறைந்து கொண்டே வந்தன. வீரர் உற்சாகமும் குறைந்தது; பேபர் நேசதேச வரசருக்குத் தம் நிலையை விளக்கி யுதவி கேட்டார்; ஆனால் அவர்கள் திரும்பிப்பாராமலே வாளாவிருந்தனர். வறுமை மேலிட்டு மக்கள் நாய்களையும் கழுதைகளையும் கொன்று உண்ணலாயினர். தலைவர் அனுமதியின்றிக் குடிகளிற்பலர் கோட்டைமதிலேறிக் குதித்தோடிவிட்டனர். அந்நிலையில் பேபர் உயிர் தப்பிப் பிழைக்கும் வழியைத் தேட நேர்ந்தது. அவர் தம் தாயாரும் வேறு இருமாதரும் அவரோடு பிழைத்தோடினர்.

இந்நிலையில் வேறொருவரா யிருந்தால் மனவேக்கமுற்று உயிர் துறப்பாரென்பதில் ஐயமில்லை; இத்துன்பங்களினால் பேபர் சிறிதளவும் ஊக்கங் குன்றவில்லை? இரவு நேரம் இளைப்பாறிவிட்டு, பொழுது புலர்ந்ததும் ஓடலாயினர். கம்பராலி இவரைத் தொடர்ந்து சென்றார்; இருவரும் பந்தயம் போட்டுக் கொண்டு குதிரைச் சவாரி செய்தனர்.

அரசிழந்த மன்னர் வழக்கமாய்ச் செய்யுஞ் செயல் இதுவோ என்று பார்ப்போர் எண்ணும்படி நான் தோல்வியினல் ஏக்கஞ் சிறிதளவுமின்றி முக மலர்ச்சியுடன் குதிரைப்பந்தயத்தில் முழுமனத்தைச் செலுத்தினேன். என் குதிரை வாயுவேகம் மனோ வேகமாய்ப் பறக்கக் கம்பராலி பின்தங்கி விட்டான். நான் திரும்பிப் பார்த்தேன்; தவறித் தலைகீழாக வீழ்ந்தேன். தலையில் பலமான புண்பட்டதேனும் அரைநொடி கூடத் தாமதியாமல் குதிரைமேலேறி னேன்; அன்றுமாலையே என்மனம் தெளியப் பழைய நிலையை அடைந்தேன். அதுவரையில் நான் செய்தது இன்னதென எனக்கே தெரியவில்லை; காண்பன வெல்லாங் கனவோ நனவோ என்னும் ஐயங்கொண் டேன்; அன்றிரவு வான்ஊதி என்ற ஊரையடைந் தேன்; குதிரை யொன்றைக் கொன்று அதன் மாமி சத்தைப் புசித்தேன்; நாள்முழுதும் இடைவிடா மற் சவாரிசெய்து பசிப்பிணியால் வருந்திய எங்க ளுக்கு அதன்மாமிசம் அமிழ்தமாயிற்று.'' என்று பேபர் எழுதியவற்றல் அவர் பட்ட துன்பமிகு தியை நன்கு உணரலாகும்.

'உண்டவிளைப்புத் தொண்டனுக்கு முண்டு' என்ற படி சாப்பிட்டவுடன் சிறிது நேரம் அவர் களைப் பாறினர். குதிரைகளையும் களைப்பாற விடுத்தனர். பிறகு தமது பிரயாணத்தைத் தொடங்கினர். பொழுது புலர்ந்தது; காலிலா (Khalila) என்னும் ஊரைக் குறுகினர். அங்கிருந்து புறப்பட்டுச் சிறிது தூரத்திற்கு அப்பாலுள்ள 'டிஸாக்' என்னும் ஊரை யடைந்தனர்.

இவ்வூர் செழுமையுற்று விளங்கியது; இங்குப் பலவகைப்பழங்கள் நிரம்பியிருந்தன. போரில் தோற்று வழியிற் பல்வகைத் துன்பங்களையடைந்த பேபருக்கு இவ்வூர்த் தேவலோகமெனத் தோன்றியது. அவர் தாமடைந்த மகிழ்ச்சியைத் தாமே கூறுகிறார்:—

"என் வாழ்நாட்களில் இப்படிப்பட்ட இன்பத்தை என்றும் அடைந்ததே இல்லை. துன்பம் நீங்கி இன்பமும், வறுமையின் முடிவில் செல்வமும் அடைந்த ஒருவர் மனமகிழ்ச்சியைக் கூற வல்லார் யாவர்? நானும் இதுவரையில் நாலைந்து முறை படாதபாடுகளைப் பட்டு இறுதியில் இன்பம் பெற்றேன். ஆனால் பகைவர் கொடுமையினின்றும் விலகி வறுமை நீங்கி மனக்கவலையின்றி இருந்தசமயம் இஃது ஒன்றே".

# நான்காம் அத்தியாயம்.

ஆண்டுகள் பல கழிந்தன; பேபர் சாமர்க்கண்டை எட்டிப் பாராமலே இருந்துவிட்டார்; எனினும் அதன்மீது வைத்த ஆசையை இவர் அப்பொழுதும் ஒழித்திலர். ஷெய்பானியை வெல்ல எவ்வளவோ முயன்றார்; பயன்படவில்லை; ஆதலால், 'உரேதியா' என்னும் நாட்டிற்கு அருகில் உள்ள குன்றுகளையடைந்து நற்காலத்தை எதிர்பார்த்திருந்தார்.

பேபரிடம் அரிய வல்லமையொன்றுண்டு; இடத்திற்குத் தகப் பழகித் தாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்குந் தன்மையே அது. இப்பொழுது மலையருகில் வாழ்ந்துவந்த இடையரோடு தாமும் கலந்து காலங் கழித்தார். அவர்களது ஆடு மாடுகளைப் புல்வெளிகளுக்கு ஓட்டிப்போய் மேய்ப்பார். அவர்கள் மனங்கனிந்து கூறும் கதைகளைக் கேட்டு அக மகிழ்வார். 'பகைவரை வென்று பேர்க்கானை, சாமர்க்கண்டு முதலிய இடங்களை யாண்ட மன்னர் இவர் தாமா? எளிய குலத்திலுதித்துப் புல்லுள்ள இடங்களில் ஆடுமாடுகளை மேய்க்க அலைந்து திரியும் இடையரா இவர்?' என்று கண்டோர் ஐயங்கொள்ளும்படி இவர் அங்குப் பழகி வந்தார். எந்நிலையிலும், எவ்விடத்திலும் ஏக்கமின்றி மகிழ்ச்சியுடன் இருப்பவருக்கு உலகில் துன்பமே தோன்றாதன்றோ? இதுவே, பிறரிடமிருந்தும் பேபரைச் சிறக்கச் செய்தது; இம்மனோநிலையையே அறிஞர் பரிபக்குவம் என்று அழைக்கின்றனர்.

பேபர் இடையரோடு வாழ்ந்து வருகையில் இவர் தாய்வழிப்பாட்டியும் வேறு சிலரும் சாமர்க் கண்டிலிருந்து தப்பிப் பிழைத்து இவரை யடைந்த னர். இவர் ஷெய்பானியை எதிர்க்கச் சமய நோக்கி நின்றார். குளிர்காலம் வந்துவிட்டது. ஷெய்பானி சா நதிக்கு அருகில் உள்ள நிலப்பகுதியைக் கொள்ளை யிட்டான்; அவனை வெல்லுஞ் சமயம் அதுவே எனப் பேபர் கருதினார். அவர் தம் சிறு படையுடன் பாஞ்கேண்ட் எனனும் ஊரை யடைந்தார். ஷெய் பானிகான் அவ்விடத்தைவிட்டுச் சென்றனென் பதைக் கேட்டு அவன் போன வழியைத் தொடர லானார். இடையில் ஓராறு குறுக்கிட்டது. இவ ருக்கு நீநதுவதிற் பிரியம் மிகுதி. தம் வீரருடன் ஆற்றிற் குதித்தார்; குளிரின் கொடுமை பொறுக்க இயலவில்லை. பாலைவனத்திலிருந்து கடுங்காற்று வீசி யது; ஆற்றின் இருகரைகளில் உள்ள நீர் உறைந்து விட்டது. ஓடுகின்ற ஆற்றின் நடுவில் உள்ள நீர்மட்டில் உறையாமல் இருந்தது; உறைபனியைத் தாண்டும்போது வீரரிற்பலர் குளிர்தாங்காமல் உயிர் துறந்தனர்; எஞ்சிய வீரருடன் பேபர், மறு கரையேறிப் பகைவர் சென்றவழியைத் தொடர்ந்த னர். ஷெய்பானி தங்கியிருந்த இடந்தெரியவில்லை. தேடுவதில் இனிப்பயனில்லை யென்று நினைத்து அங் கேயே நின்று தம் நிலையை ஆராயலானார். நாடு நக ரம், வீடு வாயில்களில்லாமல் ஊரூராய்த் திரிவதனாற் பயனில்லை என்பதை யுணர்ந்து தம் சிறியதந்தையா கிய மகமத்கானையடைந்தார். தாம் பட்டபாடுகளைக் கல்லுங்கரைய அவனுக்கு எடுத்துரைத்தார். மகமத் கான் இவர் கூறியனவற்றைக் கேட்டுங் கேளாதவன்

போல் வாளா நின்றான். பேபர் துன்பங்களைத் தாமே வருவித்துக் கொண்டாரென்பது அவனெண்ணம். பேபர், சிலநாள் அவனுடன் தங்கியிருந்தார். மகமத்கான் பேபருதவியால் தன் வழிப் பகைவனை தாம்பலை வெல்ல வெண்ணினான். ஒரு பெரும்படையைக் கூட்டிக்கொண்டு மகமத்கான் பேபருடன் சர்நதியை அடைந்தான். அவ்விடத்தில் அவன் வீரருக்கு ஒரு விருந்தளித்தான். மறுநாட் காலையில் நன்றிகெட்ட வீரரிற் சிலர், தாம்பலை யடைந்தனர்; இருதிறத்தாருக்குங் கடும்போர் நடந்தது; தாம்பலின் வீரர் தைரியமாகப் போராற்றினர். அப்போரில் தோல்வியடைவது உறுதியெனக் கருதிய மகமத்கான், தன் ஊர் நோக்கித் திரும்பினான். ஊக்கமும் உற்சாகமும் நிரம்பிய பேபருக்கு அங்ஙனஞ் செய்ய விருப்பமில்லை; அவர்தம் எழுத்துப் பின்வருவது:—

"நான் டாஷ்கண்டில் மகமத்கானுடன் இருக்கையில் பட்டபாடுகளுக்கு அளவே இல்லை; நாட்டை இழந்தேன்; திரும்ப அதைப் பெறலாமென்று எண்ணுவதற்குச் சிறிதும் இடமே இல்லை. எனது வீரரிற் பலர் வறுமையால் வாடி என்னை விட்டகன்றனர்; எஞ்சிய சிலரும் விலகச் சமயம் நோக்கி நின்றனர்; நாட்டைப் பறிகொடுத்துத் தங்க இடமின்றித் திரிவது என் மனத்தைப் புண்படுத்தியது. வாழ்க்கையில் வெறுப்புண்டாயிற்று. இப்படிக் காலங் கழிப்பதைவிட மனிதர் கண்ணிற்படாமல் எங்கேயாவது ஓடியொளித்துக்கொள்ள நிச்சயித்தேன்."

பேபர் சீனதேசம் போக எண்ணினார்; அங்குச் செல்லுமுன் தம்சிறிய தந்தையாகிய அகமத்கானைப் பார்த்துச்செல்ல உறுதிகொண்டார். எதிர் பாரா நிலையில் அகமத்கான், தன் சகோதரனாகிய மகமத் கானைப் பார்க்க அங்குவரப் போவதாகக் கேட்டுத் தம் பயணத்தை அச்சமயம் நிறுத்திவைத்தார்.

நீண்டநாளாக அச்சகோதரருக்குள் மனப் பொருத்த மில்லாமலிருந்தது. அவர்கள் ஒற்றுமையின்றி வாழ்வதை யுணர்ந்த தாம்பல் அவர்களுக்குரிய நாடுகளைக் கொள்ளையிட்டான். இனிச் சும்மா இருந்தால் தாம்பல் படைப்பலம் மிகுந்து தம்மை அடியோடு அழித்துவிடக் கூடுமென்பதை அவ்விருவரும் உணர்ந்தனர்; தமக்குள் இருந்த மன வேறுபாடுகளை மறந்து, பகைவனை நசுக்கும் வழியைத் தேடலாயினர். அச்சமயம் தாம்பல் அண்டிஜானில் இருந்தான்.

சகோதரர் இருவரும் ஒரு பெரும்படையுடன் தாம்பலை எதிர்க்க அண்டிஜானை நோக்கிப் புறப்பட்டனர். படையில் ஒரு பிரிவைப் பேபர் வசம் ஒப்பித்து, 'உஷ், உஸ்கண்ட்' என்ற ஊர்களை யடைந்து பகைவனைத் தாக்குமாறு கூறினர். பேபரும் உஷ் என்ற ஊரை யடைந்தார். பகைப் படையை எளிதில் தோல்வியுறச்செய்து அவ்வூரைக் கைப்பற்றினார்; தாம்பலிடம் தீராப்பகைகொண்ட அவ்வூர்க்குடிகள் பேபரை அன்போடு வரவேற்றனர்; அண்டி-ஜானொன்றைத்தவிர, சர் நதியின் தென்கரையிலுள்ள பிற நிலப்பகுதிகள் யாவும் பேபர் வசமாயின; நிற்க,

தாம்பல், கவலை சிறிதுமின்றி ஆக்ஷி, சார்மான் என்னும் நகர்களுக்கு இடையே பாசறையில் தங்கி யிருந்தான்; அண்டிஜானிலுள்ளவர் தமக்கு உதவி யாயிருப்பரென்று பேபர் உறுதியாக நம்பினர்; ஒரு நாள் மாலை உஷ்ஷிலிருந்து புறப்பட்டார்; அங் கிருந்து இரண்டுமைல் தூரத்திலேயே அண்டி ஜான் இருந்தது; கம்பராலியை அனுப்பி அவ்வூரி லுள்ள காஜாக்களையும் கனவான்களையும் கண்டு கலந்துபேசி வருமாறு அவர் உத்தரவிட்டார். உள வறியச்சென்ற கம்பராலி முதலியோர் விரைவில் வரக்கூடுமென்று பேபர் ஆவலோடு எதிர்பார்த்தார்; இரண்டு நாட்கள் கழிந்தன; அப்பொழுதும் அவர் கள் வந்திலர்.

மூன்றுநாள் இரவு சுமார் பன்னிரண்டுமணியிருக் கலாம்; பேபருடன்வந்த வீரரிற்பலர் தூக்கக்கலக்க மேலிட்டு அறிவழிந்திருந்தனர். மற்றையோர் மெய்ம்மறந்து தூங்கிவிட்டனர். திடீரெனப் போர் முரசம் ஒலித்தது. எல்லோரும் எழுந்திருந்தனர். கலக்கத்திற் பகைவர் எத்தனைபேர் என்று அறிந்தி லர்; அவர்கள் திக்குத்திசை தெரியாமல் ஓடலாயி னர்; அவர்களை அழைத்து ஒற்றுமைப்படுத்த நேரமில்லை. டாஸ்ட் வலிமைமிகுந்த மூவரை யழைத் துக்கொண்டு பகைவரைத் தாக்கலாயினர். பேப ரைச் சேர்ந்த நால்வரை யொழிந்த வீரர் ஓடி விட்டனர். பகைவர் போர் முழக்குடன் சர மாரி பொழிந்தனர். குதிரை வீரனொருவன் பேபரைத் தாக்கினன்; பேபர் அவன்மேல் அம் பொன்றை விடுத்தார். அஃது அவனேறியிருந்த

குதிரைமேல் தைத்தது; அது கீழே விழுந்து உயிர் விட்டது. மற்றவர் சிறிது பின்வாங்கினர். இருள் மிகுதியால் பகைவர் தொகையை கணக்கிட்டறியக் கூடவில்லை; ஆதலால், பேபருடன் இருந்த மூவரும் அவரை நோக்கி, "பகைவர் திறன் தெரியாமல் சண்டைசெய்ய முற்படுவது அறிவின்மையாகும்; நம்மைச் சேர்ந்த வீரர் போன இடந் தெரியவில்லை; நம்மளவிற் பகைவரை எப்படி வெல்ல முடியும்; ஆதலால் ஓடிய நம் வீரரை அழைத்துவந்து போர் செய்ய முற்படுவதே நலம்" என்று கூறினர். பேபரும் அதற்கு இசைந்தார். தம் வீரர் சென்ற திசையை நாடினர். விரைவிற் கண்டனர்; முதலில் தம்முடன் வந்து சேரும்படி அவர்களை நயமாக அழைத்தனர்; அஞ்சியோடிய வீரர், அதற்கு இணங்கவில்லை. அவர்களை நையப்புடைத்தனர்; அப்பொழுதும் அவர்கள் வந்திலர். ஆதலால், பேபர் முதலிய நால்வரும் வந்தவழியே திரும்பித் தம்மைத் தொடர்பவர்மீது அம்பு மழை பொழிந்தனர்; அவர்கள் அஞ்சிச் சிறிது தயங்கினர். சிறிது நேரங் கழிந்ததும் நால்வரே தம்மை எதிர்ப்பவரென அவ்வீரர் அறிந்தனர்; பேபரைத் தொடரலாயினர்; மூன்று நான்கு முறை பகைவரை வழிமறித்து தம் வீரரைக் காப்பாற்றினர்; ஆயினும் அவர்கள் துரத்துவதை விடவில்லை. இப்படித் துரத்திக்கொண்டே வீரர் ஐந்து மைல் தூரஞ் சென்றனர். முடிவிற் சில குன்றுகளை யடைந்தனர்; பேபர், பகைவர் மிகச் சிலரே என்பதையுணர்ந்து தம்மைச் சேர்ந்த வீரரை நோக்கி, "இதுவே தக்க இடம்; வாருங்கள்; பகைவரைத் தாக்கலாம்" என்று கூறினர். அவர்களும்

அவ்வாறே செய்ய இணங்கினர்; அம்பு மழை பெய்தது; பகைவர் ஒன்றுஞ் செய்ய வியலாமல் வாளா நின்றனர்; அருகிற் சென்று பார்த்தபொழுது அவர்களும் பேபரைச் சேர்ந்த மங்கோலிய வீரராகவே இருந்தனர். எல்லோரும் வெட்கித் தலை குனிந்தனர். இருட்டில், மங்கோலிய வீரர் பேபரையும் அவருடனிருந்த மூவரையும் பகைவர் என்று தவருக எண்ணித் தொடர்ந்தனர். திரும்பவும் யாவரும் உஷ்ஷை அடைந்தனர்.

பேபர், தாம்பலைத் தோல்வியடையச் செய்யாவிட்டாலும் அவன் மனஞ் சோர்ந்து தளர்ச்சி யடையச் செய்துவிட்டார். மக்கள் அவனை மிகவும் வெறுத்து, பேபர் வருகையை ஆவலுடன் நோக்கி நின்றனர்; இந்நிலையில் நெடுநாள் காலந்தள்ள முடியாதென்பதை அவன் உணர்ந்தான். பேபர் அவனிலையை நன்குணர்ந்து அண்டிஜானை நோக்கிப் புறப்பட்டார்; அங்கே சென்றதும் அவர் கோட்டைக்கு வெளியே இருந்த வீரரை உள்ளே செல்லத் துரத்தினர்.

பேபருக்கு அறிமுகமுள்ள சில அஸ்பேக்கர் இருளிற் பகைவர் வலியை யுணராமல் கோட்டைக்கு உள்ளே செல்வதனுல் தீமை நேரினும் நேரலாமென்றனர். பேபர் அவர்கள் சொல்லைக்கேட்டு வெளியில் தங்கினர். வெளியே இவர் கவலையற்றுத் தூங்கிக் கொண்டிருந்தபொழுது தாம்பல் பெரும்படையுடன் வந்து அவரைத் தாக்கினுன்.

கம்பர் ஆலி, சரேலெனவெழுந்து "பகைவர் வந்துவிட்டனர்; எழுந்திருங்கள்" என்று கூக்குரலிட்டுக்

கொண்டே சென்றான்; பேபர், உறக்கத்தினின்றும் எழுந்து குதிரைமேலேறினார். அப்பொழுது இவருடன் பத்து அல்லது பதினைந்து வீரரே இருந்தனர். பகைவரிடம் விரைந்து சென்று மிக்க ஆண்மையுடன் அவர்கள்மேல் அம்பெய்தனர். எதிரிகளிற் பலர் உயிர் துறந்தனர். சிலர் புண்பட்டனர். தாம்பல், நூறு வீரரோடு கடும்போர் செய்யவந்து நின்றான். அவன் வீரரை நோக்கி, "வெட்டுங்கள்; குத்துங்கள்" என்று கூவிக்கொண்டிருந்தான்; அதனால் வீரர் தயங்கி நின்றனர்; அவர்கள் அப்படி நின்றது, "நாம் ஓடிப்போவோமா? நிற்போமா ?ஓடுவதே நலம்" என்று கூறுவதுபோலிருந்தது. அப்பொழுது பேபருடன் இருந்த வீரர் மூவர்; பேபர் அம்பொன்றைத் தாம்பல்மேல் விட்டார்; ஆனால், அஃது அவன் தலைமேலாகச் சென்றுவிட்டது. மற்றொன்றை விடுத்தார். அதற்கும் அவன் தப்பினான். வேறொன்றை எடுத்து நாணேற்றி விடுஞ் சமயம் இரண்டு வீரர் பேபரெதிரில் வந்தனர்; முதலில் வந்தவன், தாம்பல்; பகைவனை வீழ்த்தத்தக்க காலம் அதுவே என அகமகிழ்ந்து அவ்வம்பை அவன்மேல் விடுத்தார். அதே சமயத்தில் பேபரது வலத்தொடையில் கூரிய அம்பொன்று பாய்ந்தது; உதிரவெள்ளம் ஆறாகப் பெருகியது. தாம்பல் ஓடிவந்து தன் வாளால் இருப்புக் கவசம் பூண்ட பேபர் தலையில் வெட்டினான். அவ்வெட்டின் அதிர்ச்சியால் நினைவு தவறிப் பேபர் கீழே வீழ்ந்தார். தலையில் கடுமையான புண்பட்டு அவர் உயிரே உடலைவிட்டு நீங்கிவிடும்போலிருந்தது. பேபர், தம் வாளைச் சுத்தம் செய்யாதிருந்ததால் அது துருப்பிடித்திருந்தது; ஆதலால், அதை எடுத்துப் பயன்படுத்த இயல

வில்லை. அப்பொழுது பேபர், பகைவருக்கு இடை யில் உதவுவாரெவருமின்றித் தன்னந்தனியே நிற்க நேர்ந்தது. அவர் வாளாவிருக்க அது சமயமன்றாத லால் புண்ணைப் பொருட்படுத்தாமல் தீரமாகச் சரே லென்றெழுந்து வாளை உருவினார். தாம்பல், தன் உடைவாளால் இவரைக் குத்த முயன்றான்; ஆனால் அது தம்மேற்படாதபடி தடுத்துக்கொள்ளச் சிறிது பின் வாங்கினார். அப்பொழுது மூன்று காலாட்கள் பேபருக்குதவ வந்துவிட்டனர். அவர்களில் ஒருவ னைத் தாம்பல் தன் உடைவாளால் வெட்டினான். பேபரும், அவர் நண்பர் மூவரும் தாம்பலிடமிருந்து தப்பி ஓடி ஆழமுள்ள ஓராற்றிற் குதித்து மறுகரை சேர்ந்தனர். இடையிலிருந்த குன்றுகளைக் கடந்து உஷ்ஷை யடைந்தனர்.

பேபரின் சிறிய தந்தைமார் (அகமதுமத்கான், மக மத்கான்) இருவரும், பேபரை நடத்திய முறை அவ ருக்குப் பிடிக்கவில்லை; பேபர் பகைவரை வென்று பிடித்த நாடுகளை மகமத்கான் தன் தம்பியான அகமது க்குக் கொடுத்துவிட்டான்; தமக்குரிய நாடுகளைத் தம் மிடம் ஒப்பிக்கும்படி பேபர் மகமதைக் கேட்டார்.

மகமத்கான்:—"குழந்தாய்! ஷெய்பாணியின் அதி காரம் வன்மைபெற்று வருகிறது; அவனைப் பணிய வைக்காவிட்டால் மிக விரைவில் நமது நாடுகளை அவன் கைப்பற்றக்கூடும்; ஆதலால் அவனை எப்படி யேனும் தோல்வி யடையச்செய்ய அகமத்கானுக்கு நீ வென்ற நாடுகளை வேண்டுமென்றே கொடுத்தேன். விரைவிற் சாமர்க்கண்டை முற்றுகையிட்டுக் கைப்

பற்றலாம்; நீ அதையாளலாம்; பொர்க்காணுவின்மேல் நீ கொண்டிருக்கும் ஆசையை ஒழித்துவிடு" என்று கூறினான்.

அவன் கூறிய சொல்லில் பேபருக்கு நம்பிக்கை சிறிதும் பிறவாவிடினும் அப்பொழுது வேறொன்றும் செய்ய இயலாதவரானார். அவரது அப்போதைய நிலை விருப்போ வெறுப்போ அவன் சொற்படி செய்ய வேண்டியிருந்தது. அவர் அகமத்கானிடம் சென்றார். பேபர் ஊன்றுகோலின் உதவியால் மெள்ள நடந்துவருவதை அகமத்கான் கண்ணுற்று, கூடாரத்திலிருந்து ஓடிவந்து அவரைத் தழுவியபடியே, "குழந்தாய்! உன் வீரத்தைப் புகழாதார் யாவர்? பகைவரைப் போரில் வீழ்த்தியவன் நீயே; உண்மை வீரன் நீயே" என்று அவர் மனமகிழ்க் கூறி, புகழ்பெற்ற வைத்தியனொருவனை அழைத்துவரச் செய்து பேபர் காலைச் சோதித்துத் தக்க மருந்துகளால் வாசிப்படுத்தினான்; பேபர் சிலநாள் அவனோடு அங்கேயே தங்கினார்.

# ஐந்தாம் அத்தியாயம்

பேபர், அகமத்கானிடம் வாழ்ந்து வருகையில் தாம்பலின் சகோதரனுன ஷேக்பயாசித்தினிடமிருந்து நிருபம் ஒன்று வந்தது. அதில் பேபரைப் புறப்பட்டு ஆக்ஷிக்கு வரும்படி எழுதப்பட்டிருந்தது. அங்ஙனம் எழுதியதற்குத் தக்க காரணமும் உண்டு; அகமத்கான், மகமத்கான் ஆகிய இருவர் கட்சியிலும் தலைமைவகித்து வீரத்தோடு சண்டை செய்து பகைவரை வெல்லக் கூடியவர் பேபர் ஒருவரே; ஆதலால், அவரைக் கான்களிடமிருந்து பிரித்துவிட்டால் அவர்கள் இருவரும் சேர்ந்து பேர்க்கானுமீது படையெடுக்க முயலார். அப்படிவந்தாலும் தோல்வியடைவது திண்ணம்: பேபரை நயவஞ்சகமாக வருவித்தால் அவர் பேர்க்கானுவை மறுபடி முற்றுகை செய்யாதபடி பார்த்துக் கொள்ளலாம்.

இவற்றை மனத்திற் கொண்டே ஷேக்பயாசித் பேபருக்குக் கடிதம் எழுதலானுன். பேபர், இச் செய்தியைத் தம் சிறிய தந்தையார் இருவருக்குந் தெரிவித்தார். அவர்கள் இதையே உதவியாகக் கொண்டு வஞ்சகமாய்த் தாம்பலை அழிக்க முற்படுமாறு பேபரிடம் கூறினர். ஆனல், இயல்பிலே வஞ்சகத்தையறியாதவர் பேபர்; ஆதலால், அதற்கு அவர் ஒப்பவில்லை; எனினும் தம்மால் இயன்ற வளவில் ஷேக்பயாசித்தைத் தம் கட்சியிற் சேருமாறு செய்ய முயல்வதாகக் கூறி ஆக்ஷியை நோக்கிச் சென்றூர்.

சிலநாட்களில் ஆக்ஷியை அடைந்து தம் தந்தை வாழ்ந்துவந்த கற்கோட்டையில் தங்கினர் பேபர். பயாசித், உள்ளன்புடையவன் போல் நடித்து அவரைப் பணிவுடன் வரவேற்றான். பேபரும் அவனை நம்பினர்; சிறிது நேரத்திற்கெல்லாம் ஷெய்பானிகான் படையெடுத்து வந்ததாகவும் கான்களிருவரும் (பேபரின் சிறியதந்தைமார்) புறங்காட்டி ஓடிவிட்டதாகவும் பேபருக்குச் செய்தி கிடைத்தது. பேபர் பகைவர்கையிலகப்பட்டுக் கொண்டு தனியானர்; தாம்பல் 3000 வீரரை உடனழைத்துக் கொண்டு பேபரிருக்குமிடம் வந்து கொண்டிருந்தான். தாம்பலும் பயாசித்தும் செய்த வஞ்சகம் பயனளிப்பது போலிருந்தது. பேபர் அக்கோட்டையைக் கைப்பற்ற முயற்சிக்கவில்லை. தாம்பல் வரமுடியாதபடி பாலத்திற் காவலாளரை நியமிக்கவுமில்லை. பேபருடன் நூறு வீரரே வந்திருந்தார்கள். கோட்டையைக் கைப்பற்றாமல் ஆக்ஷியை அடைய முடியாது; ஆயினும் பேபர் தம்சகோதரன் ஜிஹாங்கீரின் உதவியைக் கொண்டு கோட்டையைக் காக்க முயன்றார்; அது முடியவில்லை. ஜிஹாங்கீர் உயிர்தப்பி ஓடிவிட்டான்; பேபரும் பிழைக்க வேண்டுமேல் ஓடுவதைத் தவிர வேறுவழியில்லை. இந்நிலையில் பேபர் தப்பியதே வியப்பைத் தரும்; ஆதலால், பேபர் தம்முடன் வந்த வீரரை அழைத்துக் கொண்டு கோட்டைக்கு வெளியே செல்லமுயன்றார். வெளியேறுஞ் சமயத்தில் பயாசித் சில குதிரை வீரருடன் இவரை நோக்கி வந்து கொண்டிருந்தான்; பேபர் அவனோடு சண்டையிட்டு அவனை அடித்துத்துரத்தி விட்டு, தம் வீரருடன் ஓடலானர், பகைவர் அவரைத்துரத்திவந்த

னர். ஆக்ஷிக்கு இரண்டுமைல் தூரத்தில் அழகிய தோட்டம் ஒன்றுண்டு; பேபர் அதையடைந்ததும் வீரரில் ஒருவன் தனக்குதவுமாறு உரக்கக் கூவினன்; பேபர் திரும்பிப் பார்த்தார்; பயாசித்தின் வேலையாளொருவன், தம்வீரனை அடித்துத் துன்புறுத்துவது தெரிந்தது; திரும்பிப்போய்த் தம்மவனைக் காக்கக் கருதினர்; ஆனல் பேபருடன் வந்த வீரர், 'காலதாமதஞ் செய்யின் பகைவர் ஒன்று சேர்ந்து தம்மை அழித்து விடக் கூடுமென்று கூறி அவரைப் போகவொட்டாமல் தடுத்து விட்டனர்; சிறிது நேரத்திற்கெல்லாம் ஆக்ஷியிலிருந்து மூன்று மைலுக்கு அப்பாலுள்ள ஸாங் (Sang) என்ற ஊரையடைந்தனர். இதற்குள் பகைவீரர், பேபரைச் சேர்ந்த வீரர் பலரைக் குதிரையினின்றும் கீழ் வீழ்த்தினர். எஞ்சியவர் பின்னேக்காமல் மனத்தளர்ச்சியின்றியோடிக்கொண்டே இருந்தனர்.

பகைவர் களைத்தனர்; தூரத்துவதை நிறுத்தினர்; அப்பொழுது பேபருடன் எட்டே வீரர் இருந்தனர். அவர்களோடு ஸாலங் நதிக்கரைவழியே பேபர் சென்றனர். வழியிற் காடுகளையும் மலைகளையும் கடக்க நேர்ந்தது. மிக்க சிரமத்துடன் சமவெளியையடைந்தனர். சேய்மையில் கறுப்பாக ஏதோ ஒன்று காணப்பட்டது; அஃது என்னவென்றறியப் பேபர் அருகிலிருந்த ஒரு சிறு குன்றின்மேல் ஏறினர்; திடீரென்று குதிரை வீரர் பலர், பின்வந்து அவர்களைத்தாக்கினர்; பகைவரால் எதிர்பாராநிலையில் தாக்கப்படவே இன்னது செய்வதென்றறியாமல் பேபர் திகைத்தனர். இருள் மிகுந்திருந்ததனுல்

பகைவர் எத்துணையரென்றறியக் கூடவில்லை. ஓடுவதைத் தவிர உயிர்தப்ப வேறு வழியில்லையென்றுணர்ந்து குதிரைமீதேறி ஓடலாயினர். பேபருடன் வந்த வீரரில் இருவர் அவரை நோக்கி "நம்மால் இப்படி ஓடிக்கொண்டே இருக்கமுடியாது; எவ்வளவு தூரந்தான் ஓடமுடியும்? பகைவர் நம்மெல்லோரையும் பிடித்தே விடுவார்; ஆதலால், எங்கள் குதிரைகளிற் சிலவற்றை கைக்கொண்டு நீங்கள் மட்டிலாவது உயிர் தப்பும் வழியைப் பாருங்கள்" என்றனர். ஆனால் தம் வீரரைப் பகைவரிடம் ஒப்பித்துவிட்டுத் தாம்மட்டில் உயிர் தப்புவதில் பேபருக்குச் சிறிதும் விருப்பமில்லை; ஆதலால் அவர் அதற்கு இசைந்திலர். முடிவில் எல்லோரும் ஓடலானார்கள். சிறிது தூரம் செல்வதற்குள் பேபரைச் சேர்ந்த வீரரிற் சிலர் பின் தங்கினர். அவர் குதிரைகளைப்படைந்து நின்றது. ஜான்கூலி என்னும் வீரன், தன் குதிரையை அவருக்குக் கொடுத்துதவினான். அவன் அவர் குதிரை மேலேறிக்கொண்டான். அப்பொழுது பகைவர் ஓடிவந்து பின் தங்கிய வீரரைக் குதிரையினின்று கீழே தள்ளினர். எஞ்சியவர் அதைப் பாராமலே ஓடிக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் ஜான்கூலி களைப்பால் மூர்ச்சித்துக் கீழே வீழ்ந்தான். அவனுக்கு உதவினால் பகைவரிடம் அகப்பட்டு வருந்த நேரும்; இதையுணர்ந்த பேபர், பின் நோக்காமலே தம் குதிரையை மிகவிரைவாகச் செலுத்தலாயினர். இடைவிடாது ஓடிக்கொண்டிருந்த குதிரைகள் களைப்பால் மெல்லச் செல்லுவதாயின.

டாஸ்ட்பேயின் குதிரை கீழே வீழ்ந்து உயிர் துறந்தது. பேபரின் குதிரையும் களைப்பு மேலிட மெல்லச் செல்லுவதாயிற்று. கம்பராலி தன் குதிரையைக் கொடுத்து பேபரது குதிரையைத் தான் பெற்றுக் கொண்டான். அவன் சிறிது அளவு சென்றதும் குதிரை வீழ்ந்து இறந்தது.

அப்பொழுது பேபரைத் தொடர்ந்து சென்றவன் கூலிகுகில்தாஸ் என்பவனே; அவன் குதிரையுஞ் சோர்வடைந்து மெல்ல மெல்லச் செல்வதாயிற்று. பேபர் அவனை நோக்கி, "இப்பொழுது என்னுடன் இருப்பவன் நீ ஒருவனே; உன்னையுந் தனியே விட்டு விட்டு நான் எங்குப் போவது? மரணமும் வாழ்வும் எனக்கு இப்போது சமமே; நாம் இருவரும் சேர்ந்து செல்வதே நலம்" என்றார்.

கூலிகுகில் தாஸ் :— " அரசே! பகைவரெப்படியும் நம்மைச் சிறைசெய்யக் கூடும்; நாமிருவரும் இறப்பதைக் காட்டிலும் நம்மில் ஒருவரேனும் பிழைப்பது மேலன்றோ? என்குதிரை இனிப்பிழைப்பது அரிது; ஆதலால், தாங்கள் தாமதமின்றித் தப்பிப் பிழைக்க வழி தேடுங்கள்" என்று சொல்லி முடிக்குமுன் களைப்பு மிகுதியாற் கீழேவிழுந்தான்.

அப்பொழுது பேபர் தனித்து நிற்க நேர்ந்தது; பகைவீரரிருவர் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தனர். பேபரின் குதிரை முன்நோக்கிச் செல்ல மறுத்தது. இரண்டு மைலுக்கு அப்பால் குன்றொன்று தோன்றியது; அதையடைந்தால் தப்பலாமெனக்

கருதிக் குதிரையை விரைவாகப் பேபர் செலுத்தினார்; ஆயினும், நெடுநேரம் இடைவிடாமல் ஓடிவந்த குதிரை களைப்புற்று மெல்லவே சென்றது; அந்நிலையில் அவர் என்செய்வார் பாவம்! கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போலிருந்தது; ஆயினும் வருந்துவதனால் என்பயன்! குதிரையைத் தட்டிக்கொடுத்து விரைவாகச் செலுத்த முயன்றார்; ஆனால் ஓடுவதற்கு வல்லமையற்ற குதிரை முன்னினும் மெல்லவே சென்றது. தெய்வாதீனமாய்ப் பகைவரும் களைத்தனர்; அவர்கள் விரைவாக வரக்கூடவில்லை. பேபர் மிக்க வருத்தத்தோடு குன்றைக் குறுகினார்; அப்பொழுது மாலை ஆறுமணி யிருக்கலாம்; பகைவர் பேபரை அழைத்து, இப்படி இடைவிடாமல் எங்கு ஏன் ஓடுகிறீர்? தங்கள் தம்பி ஜிஹாங்கிர் மிர்ஸாவைப் பிடித்தாய்விட்டது; நாஸர் மிர்ஸாவையும் சிறை செய்து விட்டோம்" என்று மொழிந்தனர். அச்சொல்லைக் கேட்ட; பேபர் திடுக்கிட்டார்; ஏனெனில் அம்மூவரும் பகைவரிடம் அகப்பட்டால் தப்புவதரிது. பேபர் யாதும் மறுமொழி கூறாமற் சென்று குன்றையடைந்தார். பகைவீரர் தத்தமது குதிரையினின்றும் இறங்கிப் பேபரை நோக்கி, "இருட்டிற் பாதையில்லா மலையில் ஓடுவதால் தங்களுக்கு உண்டாகும் இன்பம்யாது? எதைக் கருதி இப்படி ஓடுகின்றீர்? சுல்தான் அகம்பே தங்களை அரசராக்க விரும்பியுள்ளார்; இஃது உண்மை" என்றனர்.

பேபர்:—"அவரிடத்தில் ஒருநாளும் எனக்கு நம்பிக்கை உண்டாகாது; அவரிடம் நான் வர மனமொப்பேன்; நீங்கள் எனக்கு உண்மையில் உதவிரு

ம்பினால் அதற்குத் தக்க காலம் இதுவே; என் சிற்றப்பன்மார்களை யடைய நான் எவ்வழியிற் செல்ல வேண்டும் என்பதை எனக்குத் தெரிவியுங்கள்; அதற்குத் தக்க வெகுமதியை உங்களுக்கு நான் கொடுப்பேன்; அஃது இயலாதென்றால் நீங்கள் வந்தவழியே திரும்பிச் செல்லலாம்; இதுவே தக்கசெயல்''.

பகைவீரர் :—தங்களை இப்பொழுது இவ்விடத்தில் தன்னந்தனியே விட்டு விட்டுச் செல்லுவதனால் நாங்களடையும் நன்மையென்ன? தாம்பவிடம் தாங்கள் வரவிரும்பாவிடில் நாங்கள் தங்களுக்குப் போகுமிடமெல்லாம் உதவத் தொடர்ந்து வருவோம்.

பேபர் அவ்வீரர் கூறியதை எள்ளளவும் நம்பிலர்; நம்பாததைக் கண்ட பகை வீரர், தங்கள் வழிபடு கடவுள்மீது தாஞ்சொல்லியதை நிறைவேற்றுவதாக ஆணையிட்டனர். அப்பொழுது பேபருக்கு ஒருவாறு அவர்களிடம் நம்பிக்கை தோன்றியது. அவர்கள் முன்னே வழிகாட்ட அவர் தொடர்ந்து பின் சென்றார்; ஆனால் அவ்வீரர் நல்லெண்ணத்துடன் வந்திலர்; நய வஞ்சகமாகப் பேபரை, தாம்பவிடம் சேர்ப்பிப்பதே அவர்கள் கருத்தாகும். சிறிது தூரஞ் சென்றதும் அவர்கள் ஓரிடத்தில் உட்கார்ந்து இளைப்பாறலாயினர்; அவர்கள் தாம் கொண்டுவந்த கோதுமை ரொட்டியைப் பேபருக்கும் சிறிது கொடுத்தனர். அவர்கள் ஏதோ கவலையுடனிருப்பவர்களைப்போல் எப்பொழுதும் நாற்றிசையும் பார்த்தபடியே இருந்தனர். ஆதலால்

பேபருக்கு அவர்களிடம் சிறிது நம்பிக்கைக் குறைவு தோன்றலாயிற்று; அவர்கள் செயல்களை அவர் கூர்ந்து கவனிக்கலாயினர். இரண்டு நாட்கள் கழிந்தன. அவர்கள் குதிரைகளைப் புல்மேயவும் களைப்பாறவும் விடுத்தனர். அவ்வூர்த் தலைமைமையதிகாரியைப் பேபர் கண்டார். பேபருக்கு அவனை நன்றாய்த் தெரியும். அவர் அவனுடன் சிறிது நேரம் பேசி அவன் மனத்தைக் கவர்ந்தார்; இரவு வந்தது. குளிரின் கொடுமை பொறுக்கக்கூடவில்லை. அவர்கள் கம்பளமொன்றைப் பேபருக்குக் கொடுத்துதவினர். உணவும் அளித்தனர்; நெடுநேரம் அவர்கள் அங்குத் தங்கியதைக் கண்ட பேபருக்கு ஐயம் தோன்றியது; ஆனால் அவ்வீரர் கிராமாதிகாரியைப் பார்ப்பதற்காகவே அங்குக் காத்திருப்பதாகப் பேபரிடம் கூறினர்; ஆயினும், உண்மையில் அதற்காக அவர்கள் தங்கவில்லை. அவர்கள், அவ்வூரிலிருந்து தூதன் ஒருவனைத் தாம்பலிடம் அனுப்பிப் பேபர் தம் வசப்பட்டிருப்பதைத் தெரிவிக்கச் செய்தனர். சிறிது நேரங்கழிந்தது. அருகில் இருந்த ஒரு வீட்டை யடைந்து நெருப்பை மூட்டினர். களைத்திருந்தமையாற் சிறிது நேரம் உறங்கும்பொருட்டுப் பேபர் கண்ணை மூடினார். உடன் வந்த பகைவீரர் பேபரைநோக்கி உள்ளன்புடையவர்போல் நடித்தனர். அவர்கள் பேபரிடம் "தலைவரிடமிருந்து செய்தி வருமளவும் நாம் இவ்வூரைவிட்டு அகலலாகாது; இப்பொழுது நாம் தங்கியிருக்கும் இடம், பல வீடுகளுக்கு இடையே இருப்பது. சிறிது தூரத்தில் அழகியதொரு தோட்டம் உண்டு; நாம் அவ்விடம் சென்றால் சந்தேகத்திற்கு இடமிராது" என்று

பணிவுடன் தெரிவித்தனர்; பேபரும் அதற்கு இணங்கினர். யாவரும் குறித்த தோட்டத்தை அடைந்தனர்; இரவை அங்குக் கழித்தனர்; பொழுது புலர்ந்தது; எல்லோரும் புறப்படலாயினர். அப்பொழுது யூஸப் என்னும் வீரன் வந்து பேபரை நோக்கி, "பிரபுவே! ஆக்ஷி வாயிலருகில் நான் காலாளொருவனைக் கண்டேன்; நான் 'அரசர் எங்கே இருக்கிறார்' என்றேன், அவன், "இவ்வூரில் தங்கியிருப்பதாகச் சொன்னான். நான் கேட்டதைத் தாம்பலிடம் தெரிவியாதிருக்கும் பொருட்டு அவனைச் சிறைசெய்து வந்தேன்; ஆக்ஷிநகரத்தார், தங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். தங்கள் பகைவராயிருந்த ஷேக்பயாசித் இப்பொழுது தங்களுக்கு உதவக் காத்திருக்கிறார்; அவரே என்னை இங்கு அனுப்பினார்" என்று மொழிந்தான்.

இவற்றையெல்லாங் கேட்ட பேபர் நடுக்கமும் கவலையுங் கொண்டார். "என்னிருப்பிடம் ஷேக்பயாசித்திற்குத் தெரிந்து விட்டது. அந்நயவஞ்சகன் தன்வீரரை அழைத்துவந்து நம்மை அழிக்கவும் கூடும். தாமதித்தால் உயிர்போவது உறுதி" என்று எண்ணினர்; அந்தத் தோட்டத்தில் சிற்றருவியொன்று ஓடிற்று; அங்குச் சென்று கடவுளை மனமொழி மெய்களால் துதித்தவாறே களைப்பின்மிகுதியால் உறங்கிவிட்டார். அப்பொழுது கனவொன்று கண்டார்; அக்கனவில் முகமதியருள் புகழ்பெற்றுப் புனிதமாக விளங்கும் காஜா யாகூப் தம்வீரரோடு பேபர் முன்தோன்றி அவரைப்பார்த்து, "குழந்தாய்! வருந்தாதே; அல்லா உனக்கு அருள்புரிவார்; மிகவி

ளாவில் நீ அரசு கட்டிலேறிப் புகழுடன் வாழ்வாய்; உனக்குக் கவலைநேரும் போதெல்லாம் நீ அல்லாவை த்தியானித்தால் அவர் உனக்கு எல்லா உதவியையும் புரிவார்; இதில் ஐயங் கொள்ளாதே" என்று கூறி மறைந்தார்.

பேபர், சரேலென விழித்தார்; ஆண்டவன் திருவருளை வழுத்தினர். அப்பொழுதே யூஸப்கான், பேபரைச் சிறைபிடித்துக் கொல்லுவதைப் பற்றித் தன் நண்பருடன் ஆலோசிப்பதைக் கேட்டார்; பேபர் முகஞ் சிவந்தது; கண்களில் தீப்பொறி பறந்தன; உதடு துடித்ததது.

பேபர், பகைவீரரை நோக்கி, "தீயோரே! உங்களில் வீரமுள்ள எவர் என்னைப் பிடிக்க வல்லமையுள்ளவர்; வாருங்கள்; பார்க்கிறேன்" என்று கர்ஜித்தார். இவர் இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதில் குதிரைகள் ஓடிவரும் ஒலி அவர் காதில் விழுந்தது.

யூஸப்கான் அவரை நோக்கி, "நாங்கள் உம்மை சிறைசெய்து தாம்பலிடம் சேர்த்திருப்போமானல் நலமாக இருக்கும்; ஆயினும் இப்பொழுதும் எங்களை மீறிப்போக முடியாது; தாம்பல் உம்மைப் பிடித்துச் சிறை செய்யப் பெருஞ்சேனை யொன்றை இதோ அனுப்பியிருக்கிறர்; ஆதலால் நீர் தப்ப முடியாது; ஏன் வீண்வாதம் பேசுகிறீர்" என்று கூறினன்.

பேபர் தாம் செய்யத்தக்கது இன்னதென்று தோன்ருமல் திகைப்புற்ருர்; வந்து கொண்டிருந்த

குதிரை வீரர் அச்சமயம் தோட்டவாயிலை யறியாமையால் சுவரின் ஒருபுறத்தை இடித்து உள்ளே நுழைய லாயினர்; புகுந்தவர், குதிரைகளினின்றும் கீழிறங்கிப் பேபரை வணங்கி ஒதுங்கி நின்றனர். வந்தவர் தமது வீரர் என்றுணர்ந்த பேபர் அளவற்ற மகிழ்ச்சியடைந்தார்; வியப்புற்றார். கனவிற் கண்டது உண்மையாயிற்றென்று உடல் பூரித்தார். உடனே அவர் வந்த வீரரை நோக்கி, "பூஸப்கானையும் இங்கே தங்கியுள்ள தீயோரையும் பிடித்துக்கட்டி என்னிடம் கொண்டுவாருங்கள்; தாமதிக்கவேண்டா" என்று கடுஞ்சினத்தோடு கூறினார். அவர்களும் அங்ஙனமே செய்வாராயினர்; பகைவீரரை நையப் புடைத்தனர்.

பேபர், தம்வீரரை நோக்கி, "நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்; இங்கு நிகழ்ந்தவை உங்களுக்கு எப்படித் தெரிந்தன." என்று அன்புடன் வினவினார். அதற்கு வீரரில் ஒருவன், "பிரபுவே! ஆக்ஷியிலிருந்து தாங்கள் வந்தவுடன் அண்டிஜானை யடைந்தோம்; தூங்குகையில் கனவொன்றைக் கண்டேன், முகமதிய புண்ணிய புருஷரான காஜா ஒபே தோன்றி, பேபர் பாதுஷா இப்பொழுது காரமான் என்னும ஊரில் தங்கியிருக்கிறார்; பகைவீரர், நயவஞ்சகமாக அவரைத் தாம்பலிடம் சேர்க்க முயல்கின்றனர். நொடிப்பொழுதும் தாமதியாமல் விரைந்து சென்று அவருக்குதவி புரிக' என்று திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்டேன்; உடனே இக்கனாச் செய்தியை என் நண்பருக்குத் தெரிவித்து அவர்களுடன் இவ்விடம் வந்தேன்" என்று பணிவுடன் கூறினான்.

யூஸப்கான் முதலியோரை அங்கேயே விட்டு விட்டு, பேபர் தம்வீரருடன் அண்டிஜானை நோக்கிப் புறப்பட்டார். இடையில் ஓரிடத்தில் தங்கியுண வாதிகளை முடித்துக் கொண்டு இளைப்பாறினர். பிறகு புறப்பட்டு அண்டிஜானையடைந்தனர்.

# ஆருவது அத்தியாயம்.

இது நிற்க, பேபரது சிறிய தகப்பஞரிருவர் நிலை யும் யாதாயிற்றென்று கவனிப்போம்.

ஷெய்பானி பெரும் படையோடு அவர்களை எதிர்த்து வந்தான்; எதிர்பாரா இந்நிகழ்ச்சியைக் கண்ட அவர்களிருவரும் திகைப்புற்றனர்; ஷெய்பானிகான், அவர்களைப் போரில் வென்று சிறைப்பிடித்தான்; ஆயினும் அவன், மகமத்கானை நோக்கி, "உன் உதவியினுலும் ஆதரவாலுமே நான் இவ்வுயர்நிலை யெய்தினேன்; ஆகலால் உன்னைக் கொல்ல விரும்பிலேன்; நீ விரும்பும் இடம் செல்ல யாதொரு தடையுங் கூறேன்; செல்க" என்றான்.

அகமத்கான், தோல்வியினுலும் அவமானத்தாலும் மனமுடைந்து சின்னுட்களில் உயிர் நீத்தான். மகமத்கான் சில்லாண்டுகள் அங்குத் தங்கிப் பிறகு பேர்க்காஞவுக்குச் சென்றான்; வழியிற் ஷெய்பானியின் வீரர் அவனைக் கண்டனர்; மனைவி மக்களோடு அவனையும் அவ்விடத்திலேயே சிறிதும் இரக்கமின்றிக் கொன்றனர்.

ஆக்ஷிச் சண்டைக்குப் பிறகு பேபர் பெர்க்காஞவுக்குத் தென்புறக் குன்றுகளில் மறைந்து காலங் கழிததார். ஓரிடத்திலும் நிலைத்திராமல் வாஞளைக் கழிப்பது அவர் மனத்தைப் புண்படுத்தியது. ஆதலால் அவர் பெர்க்காஞவை விட்டு வேறெங்காவது

ஓடி ஒளியக் கருதினர். அவர், இழந்த நாட்டைக் கைப்பற்றச்செய்த முயற்சி வீணாயிற்று. அப்பொழுது அஸ்பெக்கர் நாட்டைக் கைப்பற்றி விட்டனர். கான்கள் (அகமத், மகமத்) இருவரையும் தோல்வியடையச் செய்து தாம்பலையும் கொன்றனர். ஹிஸாரிலிருந்து வந்த கஷ்ருஷாவையும் அடித்துத் துரத்தத்தக்க முயற்சிகளைச் செய்துவந்தனர். மாரன்னா இனித் தைமூர் வழியினர் உரிமை கொண்டாட இடமில்லாததாயிற்று. பாரசீகத்தின் வடப்புறத்தை ஸுல்தான் ஹுஸேன் ஆண்டுவந்தான். அவன் பேபரைச் சிறிதும மதித்திலன்; ஆதலால் அங்குச் செல்லவும் பேபருக்கு விருப்பமில்லை.

காபூலை யாண்டுவந்த பேபரது சிற்றப்பனை உலக்பே என்பவன் இறந்தான். அவன் மகன் அப்துல் ரஸாக் பட்டத்திற்கு வந்தான். இவன் தீமைகளுக்கு நிலைக்களமானவன். குடிமக்கள் இவனை எல்லா வழியாலும் வெறுத்தனர். நாட்டிற் கலகஞ் செய்யலாயினர்; எங்கும் குழப்பமே குடிகொண்டது. காந்தஹாரிலிருந்து வந்த முகிம்பே என்னும் மங்கோலியன் அப்துல் ரஸாக்கைப் பட்டத்தினின்றும் நீக்கிவிட்டுச் சிங்காதன மேறினன். தைமூர் வமிசம் பூண்டறும் போலிருந்தது.

அப்பொழுதே பேபர் காபூலுக்குச் சென்றார்; அங்குள்ள மக்கள் தம் கட்சியிற் சேர்வரெனத் துணிந்தார். பெர்க்கானவில் பலவரசருக்கு நடுவே தைமூர் வழியினருக்குரிய இராஜ்ஜியத்தைத் தாம் நிலைநிறுத்த முயல்வது வீணேயாகுமென்பதை யுணர்ந்து காபூல்

செல்லுவதையே சிறந்ததெனக் கருதினர்; எனினும், பல ஆறுகளால் வளமையுற்ற தாய்நாட்டைவிட்டு அயல்நாடு செல்லுவதில் அவருக்குத் துணிவு பிறக்க வில்லை; வேறு வழியின்றி அவர் அப்படிச் செய்ய நேர்ந்தது. பேபருடன் பிறந்தாரிருவரும் அவருக்குத் துணையாய் நின்றனர். மகமத்கான் மகனாகிய. கான்மிர்ஸா என்பவனும் இவரைத் தொடர்ந்து வந்தான். குஸ்ருவின் சகோதரனான பாகி என்பவன் சிறுபடையோடு இவருடன் புறப்பட்டான்; எல்லோரும் காபூலைச் சிலநாளிலடைந்தனர்.

பேபருடன் இருந்த வீரர் போர்ப்பயிற்சி சிறிதும் இல்லாதவர்; ஆனல், கொள்ளையடிப்பதில் தேர்ந்தவர். பேபர் தம் வீரரை யழைத்துக்கொண்டு ஹிந்துகுஷ் மலையைக் கடந்து ஹூபியான் என்னும் கணவாயைக் குறுகினர். இதைத் தாண்ட அவர்கள் பட்டபாடு இவ்வளவு அவ்வளவு அன்று. பேபர் ஓரிடத்தில் உட்கார்ந்து போர் தொடங்குவதைப்பற்றித் தம் வீரருடன் கலந்து ஆலோசித்தார். திடீரென்று வீரரோடு சென்று நகரைத் தாக்கினல் காபூல் விரைவில் வசப்படலாமென்று பாகி தெரிவித்தான். பேபரும் அதுவே தக்கதென்றெண்ணித் தம் படையுடன் சென்று பகைவரைத் தாக்கினர். பகைவர் கனவிலும் நினையாத இந்நிகழ்ச்சியைக் கண்டு தாறுமாருக வோடத் தலைப்பட்டனர். விரைவிற் காபூல் பேபர் கைவசப்பட்டது.

முகீம்பே, தன் மனைவி மக்களுடன் நாட்டைவிட்டு ஓடலானன். பேபரின் வீரர், அவனைச் சேர்ந்தோ

ரைப் பலவாறு துன்புறுத்தினர். சொல்லத் தகாத செயல்களைச் செய்யலாயினர். பேபர் கடுஞ்சினங் கொண்டு தகாச் செயலைச் செய்யக் காரணராயிருந்த வீரர் சிலரைக் கொன்று குடிகளிடம் அமைதி நிலவச் செய்தார்.

அப்பொழுது பேபர், அப்புதிய நாட்டில் சிங்காதனமேறினார்; காபூல் என்பது, ஆப்கானிஸ்தானத்தில் உள்ளது; மலைகள் சூழ்ந்த நிலப்பகுதி; பழமரங்களடர்ந்த தோட்டம்; அங்கிருந்து ஒரே நாளில் பனியே விழாத நிலப்பகுதியை அடையலாம்; இரண்டு மணிப் பிரயாணஞ் செய்யக்கூடிய இடத்தில் எப்பொழுதும் உறைபனி மூடியிருக்கும். பழமரங்கள் மிகுந்திருப்பதனால் தானிய வகைகளைக் கஷ்டப்பட்டே பயிரிட்டு வந்தனர்.

அங்கு வாழ்ந்தவர் பலதிறப்பட்ட மக்கள்; அவர்கள் பழக்க வழக்கங்களை விரைவில் பேபர் உணர்ந்து கொண்டார்; அவர்கள் பேசிவந்த மொழிகளைக் கற்றறிந்தார்.

பேபரைச் சேர்ந்தபடை மிகப் பெரிது; அதைக் காக்க அளவற்ற செல்வம்வேண்டும்; ஆதலால், மக்களுக்கு வரி விதிக்க நேர்ந்தது. முன்னமே செலுத்த வேண்டிய இறையை இறுக்க முடியாமல் குடிகளிற் பலர் வருந்தினர்; சிலர் கலகஞ் செய்வாராயினர். குழப்பம் மேலிட்டது; கொலை கொள்ளை முதலியன எங்கும் நிறைந்தன.

பேபர் தம் படைவன்மையின் உதவியால் கலகத்தை யடக்கி வரியை வசூலிக்க முயன்றார்; அம்முயற்சி பயனளிக்கவில்லை.

படையைக் காக்கப் பொருள்தேட அயல்நாடு செல்வதே நலமெனப் பேபர் எண்ணினார்; அவர் அடிக்கடி இந்தியாவின் வளத்தைப்பற்றிக் கேள்வியுற்றிருந்தார்; ஆதலால், அங்குச் செல்லக்கருதினார்; ஆயினும் அவருடனிருந்த பாகி, ஆரியா வர்த்தத்தின்மீது படையெடுத்துச் செல்வதைப் பிறகு வைத்துக்கொள்ளலாம் என்று கூறினான். பேபர் அதற்கு இசைந்தார். ஆப்கானிஸ்தானத்திலுள்ள பிற இடங்களுக்குச் செல்லக் கருதிப் புறப்பட்டார்; எல்லோரும் ஆப்கானிஸ்தானத்தைச் சுற்றிக்கொண்டு கைபர் கணவாயை யடைந்தனர். அதைக் கடந்து சிந்துநதிக் கரைக்குவந்து சேர்ந்தனர். ஆரியா வர்த்தத்தின் வனப்பையும் வளமையையும் கண்ட பேபர் அளவிலா மகிழ்ச்சி யடைந்தார்; இரண்டு நாட்கள் நதிக்கரை வழியே சென்று உள்நாடு திரும்பி சுலைமான் மலைத் தொடர்களைக் கடந்தனர். பிறகு கஜினியை அடைந்து காபூலுக்குத் திரும்பினர். இப்படை யெடுப்பில் பேபருக்கு அளவற்ற தானியங்களும் காளைகளும் செல்வமும் கிடைத்தன. இவையல்லாமல் தாம்பழக வேண்டிய மக்கள் எத்தன்மையரென்றறியச் சந்தர்ப்பமும் பேபருக்கு வாய்த்தது. போகும் வழியெல்லாம் ஆப்கானியரோடு சண்டையிட்டுச் செல்ல நேர்ந்தது. ஒவ்வொரு சண்டையிலும் பேபரே வெற்றிபெற்றார்.

மலைகளையும் கற்பாறைகளையும் கடந்து செல்ல நேர்ந்ததால் இவர்கள் பட்டபாடுகள் கணக்கற்றவை; இடையில் இறந்த வீரர் பலர்; களைப்பின் மிகுதியால் குதிரைகள் பல இறந்தன. மழை இடைவிடாது பொழிந்தது. கூடாரங்களில் மழை நீர் முழங்காலாழம் இருந்தது; கண்ணுக்கு எட்டிய தூரம் நீரே சூழ்ந்தது. இத்தோற்றம், பேபரின் கவலைகளையும் துன்பங்களையும் மறக்கச் செய்தது. காபூலையடைந்ததும் பற்பல செய்திகள் இவர்களுக்கு எட்டின.

பேபரின் சகோதரர் நாஸிர், தொடர்ந்து வராமல் இவரைத் தனியே விட்டுவிட்டு படாக்ஷானில் உஸ்பெக்கரை வென்று புதியதொரு இராஜ்யத்தை நிலைநிறுத்தக் கருதிச் சென்றான்: ஷெய்பானி அச்சமயம் குவாரிஸிம் என்ற ஊரில் இருந்தமையால் குஸ்ரோ இழந்த நாடுகளைக் கைப்பற்ற முயன்றான்; ஆனால் உஸ்பெக்கர் அவனை எளிதில் வென்று சிறைசெய்தனர்; பிறகு அவனைக் கொலை செய்து அவன் தலையை ஷெய்பானிகாணிடம் அனுப்பினர்.

குஸ்ரோ, நாட்டை நோக்கிப் புறப்பட்டு விட்டானென்பதைக் கேள்வியுற்றவுடனே அவனிடம் முன்னமே இருந்து இப்பொழுது பேபரிடம் இருக்கும் வீரர் காபூலைவிட்டு அவனிடம் சென்றனர்; ஆனால் குஸ்ரோ இறந்தவுடன் அவர்கள் காபூலுக்குத் திரும்பினர்; என்னே இவர்கள் அன்பு! இவர்களுக்கு ஏதேனும் வேலையைச் செய்து கொண்டே இரு

க்கவேண்டும்; இல்லையேல் அவர்கள் மனம் கலகம் செய்வதிலேயே செல்லும்; இவ்வுண்மையை நன்குணர்ந்த பேபர், இவர்களுக்குத் தகுந்த வேலை கொடுத்தார். கஜினிக்கும் காண்டகாருக்கும் நடுவில் ஒருபெரியமலைக் கோட்டையுண்டு; இதற்கு, கிலட்-இ-கிலாஸி' என்று பெயர். அதைக் கைப்பற்றும்படி அவர்களைப் பேபர் அனுப்பினார்; அவர்களும் அதற்கு ஒப்பித் தங்கள் ஆயுதங்களுடன் புறப்பட்டனர். அக்கோட்டையை யடைவதற்குப் பலநாட்கள் கழிந்தன. பகைவரைவென்று கோட்டையைக் கைப்பற்றினர்; எனினும் அதைக் காக்கவியலவில்லை. பேபர், அந்நாடு தமக்கு நிலைத்துவிட்டதாகக் கருதி, சீர்திருத்தஞ் செய்ய முயன்றார். குஸ்ரோவின் சகோதரனான பாகியே பேபருக்கு ஆபத்துக் காலத்தில் பேருதவிசெய்து வந்தான்; எனினும் பேபர் செய்துவந்த ஒவ்வொரு செயலிலும் தலையிட்டு அதிகாரஞ் செலுத்த முற்பட்டான். அவன் உள்ளவரையில் தம்மதிகாரம் செல்லாதென்பதை யுணர்ந்த பேபர் அவனை வேலையில் நின்றும் நீக்கினார். அவன் பகைவர் அவனைக் கொன்றனர்.

இது நடந்த சிலநாட்களுக்குள் எப்போதும் கலகஞ் செய்வதையே இயல்பாகக் கொண்ட பேபரின் சகோதரனான ஜிஹாங்கீரும் அவரைவிட்டு விலகினான். அப்போது அவருக்கு இருந்த இடையூறுகள் ஒழிந்தன; பிறகு பேபர், முரட்டுகுணமுள்ள மக்களை அடக்கி அமைதியை நிலவச்செய்ய முயன்றார்; விலங்கையொத்த அம்மக்கள் அடிக்கடி கலகஞ் செய்துவந்தனர்; ஆனால், பேபர் ஒவ்வொரு முறையும் அதை அட

க்கி வந்தார்; திருப்தியற்ற மக்களை எத்தனை முறைய டக்கினும் நாட்டில் அமைதி தோன்றாதது வியப்பன்றே? சண்டை சச்சரவு முதலியவைகளை எதிர்பார்த்து எப்பொழுதும் சிறந்த படையொன்றிருப்பின் மக்களை ஒருவாறு அடக்க முயலலாம்; ஆனால், பேபரிடம் நிலைத்தசேனை இருந்ததாகச் சொல்ல முடியாது.

பேபரிடமிருந்த வீரர், காலம் வாய்க்கும்போது விலகும் இயல்பினர். அவர்களுட் பெரும்பான்மையர் போராற்றும் திறமையற்றவர்; ஆதலால், குடிகளிற் பலர் அரசிறை செலுத்தாமல் பேபரை ஒழிக்க வழி தேடிக்கொண்டிருந்தனர்; நிற்க,

உஸ்பெக்கர் தலைவனாகிய ஷெய்பானிகான், தன் சேனையுடன் பேபரை எதிர்க்க வந்தான், ஒருபுறம் குடிகள் கலகம்; மற்றொரு புறம் ஷெய்பானியின் படையெடுப்பு. அப்பொழுது பேபரது நிலை மிகவும் இரங்கத்தக்கதன்றோ? ஷெய்பானியின் வருகையை அறிந்தவுடன் குடிகள் அவனுடன் சேர்ந்து தம்மை ஒழித்துவிடக் கூடுமோவென்று பேபரஞ்சினார். தாமதித்தால் நாட்டை இழக்க நேருமென்றெண்ணி ஷெய்பானியை வெல்லற்குரிய வழிகளைச் சிந்திக்கலானார்; தைமூர் வழியினர் எல்லோரும் சேர்ந்து அவனை எதிர்க்காதவரையில் அவன் தோல்வியுறானென்பது அவர் துணிபு. இதைக் கருதியே அவர் ஹேராட்டிற்குச் சென்றார்.

ஷெய்பானிகான், ஏரல் கடலைச் சுற்றியுள்ள நிலப் பகுதிகளைத் தனதாக்கிக்கொண்டு தைமூர் ஆண்ட

இராஜ்யத்தில் எஞ்சியிருக்கும் நாடுகளைக் கைப்பற்றுவதில் தன் கவனத்தைச் செலுத்தலானன். மிக விரைவில் ஆமு, ஸர் முதலிய நதிகளுக்கு இடையில் உள்ள நிலப்பகுதிகள் அவன் வசமாயின. பிறகு அவன் பாரசீகத்தை நோக்கிப் படையெடுத்துச் சென்றான். குராஸானிலுள்ள பால்க் நகரத்தை முற்றுகை செய்தான்; ஸுல்தான் ஹுஸேன் முதிர்ந்த வயதில் தம் உறவினரை அழைத்துக் கொண்டு போர்புரிய ஆயத்தமா யிருந்தார். அப்பொழுது எல்லோரும் தங்கள் மனவேறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் அஸ்பெக்கர் தலைவனை முதுகுகாட்டி யோடச் செய்யாவிடில், தைமூர் வம்சம் அழிந்துவிடும் என்று தம்மினத்தாருக்கு எடுத்துரைத்தார். பேபருக்குத் தூதர் மூலம் இச்சமயம் உதவிசெய்யும்படி செய்தி அனுப்பினர். பேபர் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சாமர்க்கண்டைத் தாம் அடைவதற்குத் தடையாயிருந்த வழிப் பகைவனை ஒழிக்க அதுவே தகுந்த சமயமென்று பேபர் எண்ணினர். ஒருசமயம் சாமர்க்கண்டு தன்வசமாயினும் ஆகலாம் என்று அவர் மனமகிழ்ச்சி யடைந்தார். தம்சேனையுடன் காபூலிலிருந்து பலகணவாய்களைக் கடந்து ‘பேய்மக்’ என்னும் நாட்டையடைந்தார். இந்நாட்டில் அமைதியின்றிக் குழப்பம் மேலிட்டிருந்தது; ஒருவர் சொத்தை மற்றொருவர் கொள்ளையிட்டு வந்தனர். பேபருடன் வந்த வீரரும் குடிகளைக் கொள்ளையிடலாயினர். பேபர் இவர்களைத் தண்டித்து நாட்டில் அமைதியை நிலைநிறுத்தினர். இவர் தம்பியான ஜிஹாங்கீர் குடிகளுடன் சேர்ந்து கலகஞ்செய்து கொண்டி

ருந்தான். அவனையடக்கித் தம்கீழ்க்கொண்டுவரப் பேபர் இவ்வழியே வந்தார். இங்கிருந்து 800 மைல்கள் நடந்து ஸுல்தான் ஹுஸேனின் மக்கள் இருவரையும் அடைந்தார். போர்தொடங்கு முன்னரே ஸுல்தான் ஹுஸேன் இறந்துவிட்டார். அவர் குமாரர் இருவரும் முர்காப் எனவழங்கும் நதிக்கரையில் பாசறையில் தங்கிருயிந்தனர். போர்த்தொழில் பூண்ட வீரனுக்குரிய துன்பங்களை அவர்கள் இதுவரையில் அறிந்திலர். உடல் வருத்தமின்றிச் சுகமாகக் காலங்கழித்து வந்தவர். பேபர் அவர்களது ஆடம்பரங்களையும் சோம்பேறித் தனத்தையும் கண்டு 'இவர்களோ அஞ்சாநெஞ்சுடன் போர்த்திறமைமிக்க ஷெய்பானியோடு போரிடக் கூடியவர்' என்று கருதி வியப்பும் நகைப்பும் கொண்டார். உண்மையில் அவர்களிருவரும் போர்செய்ய வந்தவராகவே அவருக்குத் தோற்றவில்லை. வயிறு கொண்டமட்டில் குடித்துவிட்டு, அவர்கள் பொழுதைப் போக்கிவந்தனர். இவற்றை யெல்லாங் கவனித்த பேபர் மனவருத்த முற்றார்; குளிர்காலம் நெருங்கியது; இது முடியுமளவும் போர் தொடங்க முடியாது; அதுவரையில் வீணே அங்கு இருப்பதிற்பயனில்லையென்பதையுணர்ந்து தம்மூர் திரும்ப எண்ணினர். சகோதரர் இருவரும் ஹெராட்டில் சிலநாள் தங்கிப்போகப் பேபரை வேண்டினர்; பேபரும் இசைந்தார்.

பேபர், தாம் அதுவரை அப்படிப்பட்ட சிறந்த நகர்களைப் பார்த்ததில்லையென்று கூறுகிறார்:— "எங்குப் பார்த்தாலும் செழுமை வாய்ந்த தோட்டங்கள்,

பார்ப்பவர் கண்களைக் கவர்ந்தன. பசிய வயல்கள் நிரம்பி யிருந்தன. மசூதிகளும் பொதுக் கட்டடங்களும் நாட்டின் வனப்பைப் பன்மடங்கு சிறப்பாக எடுத்துக்காட்டின. அக்காலத்தில் இந்நகர் ஸர்வ கலாசாலைகளுக்கு இருப்பிடமாக விளங்கிற்று. வெவ்வேறு கலைகளில் தேர்ச்சியுற்றுக் கீர்த்தி வாய்ந்த அறிஞர் பலர் இங்கு வசித்து வந்தனர்.''

அவ்வூரில் சிலநாள் தங்கிப் பிறகு பேபர் தம்மூர் திரும்பினார். இவருடன் வந்த வீரருள் காஸிம் பே என்பவன் ஒருவன்; இவன் அறிவு மிகுந்தவன்; உலகியல் உணர்ந்தவன்; தெய்வ பக்தி நிரம்பியவன்; இவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாது; பிறர் மகிழப் பேசும் வல்லமையுள்ளவன். இவனிடம் பேபருக்கு நம்பிக்கையுண்டு; எது செய்வதாயினும் இவனைக் கலவாமற் செய்வதில்லை. இவன் மலை வழியே செல்வது நலமெனப் பேபரிடம் தெரிவிக்க அவரும் அவ்வாறே செய்தார். அப்பொழுது இவர்கள் வழியிற்பட்ட பாடுகளுக்கு எல்லையே இல்லை. குளிர் காலமானதால் இடைவிடாது பனி விழுந்து கொண்டிருந்தது. சில இடங்களிற் பனிப்பொடியிற் குதிரை வயிற்றளவு ஆழம் புதைந்தது. ஒரு வாரம் வரையில் அவர்கள் இடைவிடாது குதிரைச் சவாரி செய்தனர். அப்பொழுதும் இரண்டு மைலேனும் கடந்தபாடில்லை; குதிரைகள் களைத்தன. பேபரும் வேறு வீரர் சிலரும் கீழிறங்கிப் பனிப்பொடியில் நடந்து பின் வருபவருக்கு வழிசெய்து சென்றனர். அடியெடுத்து வைக்கும் போதெல்லாம் அவர்கள் பனிப்பொடியில் இடுப்பளவும் மார்பளவும் புதை

யச் சென்று வழி சிறிது தோன்றியவுடன் திரும்பி வந்து தமது குதிரைகளை மிக்க வருத்தத்துடன் இழுத்துப் போயினர். குதிரை மேலிருந்த வீரர், தலை குனிந்த வண்ணம் மெல்ல மெல்லச் செப்பனிட்ட வழியே சென்றனர். மூன்று நாட்களில் அவர்கள் ஒரு குகையைக் குறுகினர்; அன்று புயல் கடுமையாக வீசிற்று. பனி, மேன்மேலும் பெய்து கொண்டே இருந்தது. ஒவ்வொரு நொடியும் அவர்கள் மரணத்தை எதிர்பார்த்திருந்தனர். பனி ஆழம் மிகுந்திருந்தது; பாதை குறுகியது; ஆதலால் அவர்கள் ஒருவர்பின் ஒருவராகச் செல்ல நேர்ந்தது; பனித்தூளை யடித்துச் செப்பனிட்ட வழியே மிக்க துன்பத்துடன் குதிரைகள் வந்து கொண்டிருந்தன. இரவு நெருங்கியது; தெய்வாதீனமாய் இருள் கவியுமுன் வீரரும் குதிரைகளும் குகைவாயிலை யடைந்தனர். சிலர் குதிரையின்றும் கீழ் இறங்கவில்லை. விடியலை யாவலோடெதிர்ப் பார்த்திருந்தனர்.

பார்ப்பதற்கு அக்குகை, சிறிதாகத் தோன்றியது; பேபர் பனியைத் தோண்டித் தமக்குத் தங்குமிடம் ஒன்றைச் செய்து கொண்டார். மார்பளவு தோண்டியும் நிலந்தோன்றவில்லை. அக்குழிக்குள் உட்கார்ந்து கொண்டு காற்றின் கொடுமையினின்றும் தப்ப அவரெண்ணினர்.

வீரர், பேபரைக் குகைக்குள் போகும்படி வேண்டி நின்றனர்; ஆனால் அதற்கு அவர் சிறிதும் இசையவில்லை; தம்முடன் வந்த வீரர் குளிரின் கொடுமையால் வருந்தி நிற்க, தாம்மட்டில் இன்பம் விழை

ந்து குகைக்குட் செல்வது சிறந்த தலைவனொருவனுக்கு அழகன்று,—ஆண்மையுமன்று,— என்பது பேபர் துணிவு. தலைவனாக விரும்புபவன், எத்தகைய துன்பங்கள் நேரினும் அவைகளை அனுபவிக்கத் தானே முற்படவேண்டும்; ஆதலால் 'நட்பாளரிடையில் மரணம் நல்விருந்தென்னும்' பாரசீகப் பழமொழிக்கு ஏற்பப் பேபர் வீரர்படும் துன்பங்களைத் தாமும் அடையவிரும்பினார். சிறிது நேரத்திற்கெல்லாம் நான்கு அங்குலம் பனி அவர் தலையிற் பெய்துவிட்டது. இரவு கழியுமுன் உடலைவிட்டு உயிர் நீங்கும் போலிருந்தது. அப்பொழுது குகையைப் பரிசோதிக்கச் சென்ற சில வீரர், திரும்பிவந்து, "குகை பரப்புள்ளது. நாமெல்லோரும் துன்பமின்றி உள்ளே சென்று இரவை இன்பமாகக் கழிக்கலாம்" என்று கூறினர்; இதைக் கேட்ட பேபர் அகமகிழ்ந்தார்; அவர் தம்மீது வீழ்ந்திருந்த பனியை உதறிக்கொண்டு எழுந்தார்; எல்லோரும் குகைக்குட் சென்றனர். கையிற் கொண்டுவந்திருந்த சிற்றுண்டியை எல்லோரும் பகிர்ந்து உண்டனர்; களைப்பால் கண்ணுறங்கினர்.

தன் நயங் கருதாது தம்மைச் சேர்ந்தோர் நலத்தை நாடித் துன்பங்கள் எதுவரினும் அவற்றைப் பொறுத்ததனால் வீரர் பேபரிடம் பேரன்புகொண்டனர்; அவருக்காகத் தம்முடல் பொருளாவிகளையுங் கொடுக்க முற்படுவாராயினர். பேபரிடம் தலைவருக்குரிய சிறந்த குணங்கள் நிரம்பியிருந்தன; பொறுமையும், வீரத்தோடு சண்டை செய்யுமியல்பும் வாய்ந்தவர்; தம்மைச் சேர்ந்தோர் துன்பங்களைத்

தமதாகவே கருதும் தன்மையர். தீச்செயல்களைக் கண்டித்து நல்லனவற்றைப் போற்றிப் புகழ்பவர். வஞ்சகத்தை அறியாதவர்; உண்மையில் ஊன்றிய வர்; தம்மால் செய்ய வியலாத செயலைத் தம் வீர ரைச் செய்யும்படி வற்புறுத்தாதவர். இவ்வருங் குணங்களே வீரர் மனத்தைக் கவர்ந்து அன்பு பாராட்டக் காரணமா யிருந்தவை.

பொழுது புலர்ந்தது; காற்றின் கடுமை குறைந் தது. பனி பெய்யாவிடினும் குளிர் மிகுந்திருந்தது. வீரரிற் பலர், குளிரின் கொடுமையால் கைகால்களை யசைக்கவும் பெயர்க்கவும் முடியாதவராயினர். முடி வில் எல்லோருந் தட்டுத் தடுமாறி அதைத் தாண்டி னர்.

மறுநாட் காலையில் மலையடியில் இருந்த ஓரூரில் வாழ்ந்தமக்கள் பனி உறைந்திருக்கும் மலையிலிருந்து பேபரைச் சேர்ந்தோர் வந்து கொண்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தனர்; அவர்கள் இதுவரையில் குளிர்காலத்தில் அம்மலைச் சிகரங்களைக் கடந்து வந்த வரைப் பார்த்ததே இல்லை. பேபர், தம் வீரருடன் கீழே இறங்கினர்; அவ்வூர் மக்கள் வந்தவரைச் சூழ்ந்து கொண்டு வேண்டுவனவற்றைக் கொடுத்துதவி னர்; பேபருக்குப் பகையாயிருந்த பனியே அவரை அப்பொழுது காத்தது; ஏனெனில், பனி மூடாவிட் டால் கடக்க வியலாத செங்குத்தான பலபாறைகளைக் கடக்க நேர்ந்திருக்கும். பேபர் இதுவும் ஆண்ட வன் செயலென்று உளம் மகிழ்ந்து காபூலை நோக்கிச் சென்றார்.

நல்ல சமயத்தில் பேபர் காபூலை யடைந்தார்; இவர் இல்லாத காலத்தில் மங்கோலியர் சிலர் பேபர் குராஸானில் சிறைப்பட்டாரென்று குடிகளுக்குத் தெரிவித்து அரசனொருவனைப் புதியதாகத் தேர்ந்தெடுத்தனர். இவனே, சாமர்க்கண்டை ஆண்ட ஸுல்தான் மஹமதின் பிள்ளை; கான்மிர்ஸா என்னும் பெயரினன். அவன் தந்தையும் பேபரின் தந்தையும் சகோதரர்கள்; ஆதலால் கான்மிர்ஸா ஒருவழியில் பேபருக்குச் சகோதரனுவான்; அவனுககு நெருங்கிய உறவினர் பலர் அப்பொழுது காபூலில் வாழ்ந்து வந்தனர். அவர்களுள் ஷாபீஜம் என்பவள் ஒருத்தி. இவள் வயது முதிர்ந்தவள். இவள் கான்மிர்ஸாவின்பாட்டி. இவளன்றி மகமத்ஹுஸேன் மிர்ஸா என்பவர் ஒருவர். இவர் ஒருமுறையில் கான்மிர்ஸாவுக்கு மாமனுகவேண்டும். பேபர் நாட்டைவிட்டு, குராஸா னுக்குச் சென்றபோது இவரிடம் முழுநம்பிக்கை வைத்து இராச்சியப் பொறுப்பின் பெரும் பகுதியை இவரிடமே ஒப்பித்துச் சென்றார்; ஆனால் இவர் நம்பிக்கைத் துரோகஞ் செய்து கான்மிர்ஸாவுடன் சேர்ந்து கொண்டார். ஒருபெரும்படையுடன் கான்மிர்ஸா அரண்மனையை இருபத்து நான்கு நாட்கள் முற்றுகையிட்டான்; ஆனால், பேபரின் இராணுவ உத்தியோகஸ்தர் தம் உயிரையும் பொருளாகக் கருதாமல் மிக்க ஆண்மையுடன் அதைத் அந்நாளளவுங் காத்து வந்தனர். பேபர் அச்சமயமே திடீரென வந்து சேர்ந்தார்; கோட்டையை முற்றுகையிட்ட தீயோர், அக்கணமே ஓடிவிட்டனர்; எனினும்,

பேபரின் வீரர் அவர்களைத் துரத்திச் சென்று சிறை செய்து பேபர் முன் கொணர்ந்து நிறுத்தினர்.

கான்மிர்ஸா, தனக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என்று நடுங்கினான்; மகமத்ஹுஸேனும் அவ்வாறே அஞ்சி நின்றான். ஷாபேஜம் திகைப்புற்றாள். பேபர் இம் மூவரிடமும் கோபங்கொள்ளாமல் புன் முறுவலுடன் விசாரித்து அன்புடன் நடத்தினர். என்னே அவரது கருணை! இதைக்கண்ட தீயோர் 'இது கனவோ நனவோ' என்று ஐயுற்று, பிறகு மகிழ்ந்தனர்; எனினும் தம்முறவினர் தம்மைவஞ்சித்ததை எண்ணி யெண்ணிப் பேபர் வருந்தினர். நன்றி கொன்ற மகமது ஹுஸேன், கான்மிர்ஸா ஆகிய இருவரும் பேபரைப் பகைத்து ஷெய்பானியிடஞ் சென்று அவரை எதிர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்துவந்தனர். இப்படிச் சில்லாண்டுகள் கழிந்தன. ஹுஸேன் மகனைப் பேபர் வரவேற்று அவன் விரும்பியவற்றைக் கொடுத்துதவித் தமது மகனை யொப்பக் காப்பாற்றி வந்தார்.

ஷெய்பானி விரைவில் ஹெராட்டை வென்று அதைத் தன் நாட்டுடன் சேர்த்துக் கொண்டான். அதன் பிறகு காபூலை வெல்லுவதற்குரிய முயற்சிகளைச் செய்யலானான்.

# ஏழாவது அத்தியாயம்

பேபர் காபூலை யடைந்ததும் ஹெராட்டு நாடு அழிந்ததைக் கேள்வியுற்றார்; ஹூஸேன் வம்சமும் வன்மை யிழந்தது; தைமூர் வழியில் உதித்தவருள் அரசராயிருப்பவர் பேபர் ஒருவரே; ஹூசேன் வழியினர், ஷெய்பானியை ஒழித்துத் தம்மைக் காக்கும்படி பேபரை வேண்டி நின்றனர். காந்தஹாரை ஆண்ட, ஷாபே, முகீம்பே என்ற ஆர்கன் சகோதரர் இருவரும் ஷெய்பானியின் பலத்தை ஒடுக்க இவரையே எதிர்பார்த்தனர். முகீம்பே பேபருக்குப் பின்வருமாறு எழுதினான்.—

"அன்பார்ந்த அரசே!

நாங்கள் ஷெய்பானியின் கொடுமையினாற் படும் அல்லல்கள் சொல்லி யடங்காதன. தாங்கள் இச் சமயம் உதவி செய்யாவிடில் காந்தஹார் அக்கொடியவன் வசமாய்விடும் என்பதில் ஐயமே இல்லை; ஆதலால், தயைசெய்து தாங்கள் இங்குவந்து நாட்டைக் காத்தருளவேண்டும்."

பேபர் தாமதமின்றித் துணைபுரிய அங்குச் சென்றார். விரைவிற் காந்தஹாரைக் குறுகினார். அவர் அதை யடையுமுன்னரே மேற்கூறிய இருசகோதரரும் ஷெய்பானியுடன் சமாதான ஒப்பந்தஞ்செய்து கொண்டனர். அவ்விருவரும் பேபரைத் தமக்கு உயர்ந்தவரெனக் கருதாது, தம்மினுந் தாழ்ந்தவராகக்

கருதி நடத்தலாயினர். பேபர் கண்களில் தீப்பொறி பறந்தன; சண்டைக்குரிய முயற்சிகளை உடனே செய்தார்; பேபரிடம் 1000 வீரரே இருந்தனர்; இச் சிறு படையைப் பலவாறு வகுத்து அவரவருக்குக் குறித்த இடங்களைக் கொடுத்துப் போர் முறைகளைச் சுருக்கமாயவர்களுக்குத் தெரிவித்தார். இடி இடித்து விழுந்தாலும் இருக்குமிடத்தை விட்டு அகலக்கூடாதென்று ஒவ்வொரு வீரருக்கும் உத்தரவிட்டார்.

பகைவர் சேனை, பேபர் சேனையைக் காட்டிலும் பன்மடங்கு பெரிது; எனினும், பேபரைச் சேர்ந்த வீரர் போர்த்திறமை மிகுந்தவர்; ஆதலால் இவர்கள் பகைவரைச் சிதறவடித்துச் சின்னபின்னமாக்கினர். பேபர் அங்கிருந்து அளவுகடந்த பொருளைத் திரட்டிக்கொண்டு தம்மூர் திரும்பலானர். அவர் புறப்படுமுன் காந்தஹாரில் தமது தம்பி நாஸரிடம் தமது படையின் ஒருபகுதியை ஒப்பித்து அந்நாட்டையாளச்செய்து வந்தார்.

காபூல் வந்து ஒருவாரமாயிற்று; நாஸர் சிறைப்பட்டான் என்றும், ஷெய்பானி கோட்டையைப் பலமாக முற்றுகை யிட்டிருப்பதாகவும் கேள்வியுற்ருர். எதிர்பாராவழியில் ஷெய்பானியின் நாட்டின் ஒருபகுதியிற் கலகம் நேர அவன் அங்குச் செல்ல நேர்ந்தது; ஆதலால் நாஸர் அங்கிருந்து கஜினியை அடைந்ததும் ஆரகன் சகோதரர் திரும்பவும் அதை ஆளலாயினர்.

ஷெய்பானி காபூலை நோக்கிப் புறப்பட்டான் என்ற செய்தியைக் கேட்ட அந்நகர மாந்தர் நடுக்க மெய்தினர். அச்சமென்பது இன்னதென்றே அறியாத

பேபரும் அக்கொடியோனிடம் பன்முறை தோற்றோட நேர்ந்தது. ஷெய்பானியிடமிருந்து காபூலைக் காப்பது முடியாத செயல் என்பதை உணர்ந்த பேபர் அந்நகரைவிட்டு வேற்றூர் செல்ல எண்ணினார். தம் உறவினருள் ஒருவனிடம் அந்நாட்டரசுரிமையை ஒப்படைத்துவிட்டு அவர் இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார். செல்லும் வழியில் ஆப்கானியரோடு சண்டைசெய்ய நேர்ந்தது. அவர்கள் முரட்டுச் சாதியார்; நாடு அமைதியாயிருக்கும் காலத்திலும் வழிப்பறி செய்யும் இயல்பினர். பேபர் இவர்களோடு சண்டையிட்டு, இக்காலத்தில் ஜலாலாபாத் என வழங்கும் ஊரை அடைந்தார். அப்பொழுது அவர், காபூலை நோக்கிவந்து கொண்டிருந்த அஸ்பெக்கர் தலைவன் வேற்றிடஞ் சென்றான் என்பதைக் கேட்டுத் தைரியமடைந்து காபூலை நோக்கித் திரும்பினார். அப்பொழுதே அவர் 'பாதுஷா' என்ற பட்டத்தைப் அணிந்துகொண்டார். பட்டஞ் சூட்டிக்கொண்டாலும் நாடு அவருக்கு நிலைத்த பாடில்லை.

அவர் இந்தியாவுக்குப் புறப்படுமுன் தம் உறவினரான அப்துல் ரஸாக் என்பவரிடம் காபூலை ஒப்பித்து வந்தார். அவன் தந்தை உலக்பே என்பவன் பேபர் காபூலைக் கைப்பற்றும் முன் ஆண்டவன்.

பேபர் காபூலை யடைந்ததும் அப்துல் ரஸாக்கிற்குச் சிறு தடையுமின்றி நாட்டைக் கொடுத்துவிட்டார்; எனினும், ஒருகாலத்தில் தாம் காபூலுக்கு அரசராயிருந்தது அவர் மனத்தைவிட்டு அகலவில்லை. அரச செல்வத்தை விட்டுக்கொடுப்பதென்பது எளி

தல்லவே. அல்லலின்றித் தாம் அரசாட்சி செய்த நாடு தமக்குக் கிடைக்குமாவென்று ஆவலோடு எதிர் பார்த்திருந்தார்; அதற்கு ஏற்ப, மங்கோலிய வீரர் ஒன்று சேர்ந்து அப்துல் ரஸாக்கை அரசராக நியமித் தனர்; இம்மங்கோலியருக்குக் கொள்ளை யென்றால் கொண்டாட்டம். அவர்கள் கொலைக்கு அஞ்சாப் பாதகர். கொடுஞ்செயலுக்குக் கடுந்தண்டனை விதிக் கும் செங்கோலரசனைக் கண்டால் அவர்களுக்கு வெறு ப்பு. ஆதலால், பேபரிடம் அவர்கள் வெறுப்புற்று ரஸாக்கை அரசராக்கியது வியப்பில்லை. பேபர் இயல்பாகவே வஞ்சக மறியாதவர்; யாவரையும் தம்மையொப்ப மதித்து நம்பு மியல்பினர்.

மங்கோலியர் ரஸாக்கை அரசராக நியமித்த செய்தி பேபர் காதுக்கு எட்டியது; சிலநாள் வரையில் அவர் அதை நம்பவே இல்லை; திடீரென்று ஒருநாள் இரு ம்பு வாயிலில் மங்கோலிய வீரர் ஒற்றுமையுடன் பேபரை எதிர்த்தனர். அவர் அளவுகடந்த ஆச்சரிய முற்றார்; விரைவில் நகரிற்கு வெளியே சென்றார்; மங் கோலிய வீரர் அங்குவந்து செய்த கொடுஞ் செயல் கள் சொல்லொணாதன. அவர்கள் கடைகளிற் கொள்ளை யிடுவாராயினர். பேபரிடம் இருந்த வீரர் பலர் மங் கோலியர் கொடுமைக்கு அஞ்சி அவரை விட்டகன்ற னர்; அப்பொழுது பேபரிடம் 500 குதிரை வீரரே இருந்தனர்; எனினும், அவர்கள் மனவமைதியை இழ வாமல் போர் செய்யுந் திறமையுடனிருந்தனர். இரு திறத்தினருக்குக் கடும் போர் நடந்தது; உதிர வெள் ளம் பெருகியது; பேபரின் வீரர் வீராவேசத்துடன் சண்டைசெய்தனர் பேபர் விரைவில் கலகக்கார

ரைச் சிதற அடித்தார்; அவர்கள் ஓடலாயினர். அப்துல் ரஸாக், சிறைபிடிக்கப் பெற்றான். பேபர் அவனை அரசனுக்குரிய மரியாதையுடன் நடத்திச் சிறைவீடு செய்தார். பகைவரிடமும் அவர் காட்டிய தயைதான் என்னே! பேபரிடம் உள்ள குணங்களிற் சிறந்து விளங்கியது இஃது ஒன்றே; தஞ்சம் புகுந்தோரைக் வஞ்சமறக் காக்கும் உயர்குணம் படைத்தவரவர்; தோல்வியடைந்த பகைவரை அன்புடன் நடத்துமியல்பு வாய்ந்தவர். சில சமயம் அவர் இரக்கம் சிறிது மின்றிப் பகைவரைக் கொன்று மிருக்கிறார்; எனினும், தம் உறவினர் எத்தகையராயினும் பகைமை பாராட்டியதில்லை. ஆபத்துக் காலத்தில் தம்மைத் தனியே விட்டகன்ற வீரர்களேயாயினும் திரும்பி வந்தால் அவர்களைப் பரிவுடன் ஆதரிக்கும் பெருந்தகையர்; தௌலத் அமீர் பேபரை நம்பிக்கைத் துரோகஞ் செய்தான்; இருப்பினும், ஷெய்பானியின் கொடுமையினின்று காக்க விரும்பி அவன் மைந்தர் இவரைச் சரணடைந்தனர். அப்போது பேபர் பழைய பகைமையை மறந்து தம் குமாரரைக் காப்பதுபோல் ஆதரித்தார்; இஃதன்றோ வீரம். போர்த் திறம் மிக்குச் சரணமடைந்த வீரரை அஞ்சேல் என்று வஞ்சமற்றுக்காவாதவரும் வீரராவரோ? பேபரின் இவ்வருங் குணத்தை, தௌலத்மகன் மிர்ஸா ஹைதர் பின்வருமாறு கூறுகிறான்:—

"ஷெய்பானியின் கொடுமைக்கு அஞ்சி, கைகொடுத்து உதவுவார் யாருமின்றிச் சக்கரவர்த்தியிடம் தஞ்சமடைந்தேன். அவர் தயையை நான் எங்ஙனஞ் சிறப்பித்துக் கூறுவேன்! என்னை அன்புடன் உபசரி

த்து அமரச்செய்து இன்சொல் பல கூறித் தேற்றினார். மகன், தன் தந்தையிடம் பெறும் அன்பையும் ஆதரவையும் நான் அவரிடம் பெற்றேன்; அவர் புன்முறுவலுடன் என்னை நோக்கி, 'குழந்தாய்! உன் தந்தையும் உறவினரும் இறந்தனரெனக் கவலாதே; அவர்கள் நிலையிலிருந்து உனக்கு வேண்டுவனவற்றைச் செய்துகொடுக்க நாம் கடமைப்பட்டுளோம்; இங்கு நீ உன் விருப்பம்போல் இருக்கலாம்' என்று பரிவுடன் கூறி என்னைத் தழுவிக்கொண்டார். ஆதலால் மனம் கவலையின்றி நான் சக்கரவர்த்தியின் அரண்மனையில் வளர்ந்து வந்தேன். அவர் நயத்திலும் பயத்திலும் என்னைப் படிப்பித்தார்; தாம் செல்லும் இடங்களுக்கு என்னையும் அழைத்துச்செல்வார். என்னிடம் இருந்த நற்குணங்களைப் போற்றித் தூர்க்குணங்களைப் போக்கி நல்வழிப் படுத்தினார்; அங்கிருந்தவரையில் கவலை என்பதை யானறியேன்''.

இரண்டு மூன்றாண்டுகள் கழிந்தன. காபூலில் அமைதி நிலவியது. நாட்டைச் சீர்திருத்த அப்பொழுது அவகாசம் பேபருக்குக் கிடைத்தது. எங்கும் மலர்வனம்; பழமரம் எங்கும்; வியாபாரம் பெருகியது. குடிகள் ஒருகவலையுமின்றிச் சுகமாக வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் பேபர் பாதுஷா நாளோலக்க மண்டபத்தில் வீற்றிருந்தார். தூதுவன் ஒருவன் வாயிலாளரைநோக்கி, ''சக்கரவர்த்தியைத் தரிசிக்க வந்துளேன்; பார்ப்பதற்கு ஏற்ற சமயம் எப்பொழுது''? என்று கேட்டான். வாயிலாளருள் ஒருவன்' பாது

ஷாவினிடம் அச்செதியைத் தெரிவித்தான்; தூதனை உள்ளே அழைத்துவரக் கட்டளை பிறந்தது. வாயிலோன் தூதுவனை உள்ளே அழைத்துவந்தான்; தூதுவன் பாதுஷாவை முறைப்படி வணங்கி ஒரு நிருபத்தைக் கொடுத்தான். அவர் பின்வருமாறு படித்தார்:—

"சக்கரவர்த்திப் பெருமானுக்கு அடியேன் கான்மீர்ஸா வணக்கத்துடன் செய்து கொள்ளும் விண்ணப்பம்:

தங்கள் வழிப்பகைவனை ஷெய்பானியைப் பாரசீக மன்னராகிய ஷா இஸ்மேல் போரில் தோல்வியடையச் செய்துவிட்டார். அஸ்பெக்கர் ஓடலாயினர்: ஆதலால் தாங்கள் தாமதமின்றி இங்கு விஜயஞ் செய்தால் அஸ்பெக்கரைப் பூண்டற்றுப் போகச் செய்து பழைமையாகத் தங்களுக்குரிய நாட்டைத் தாங்களே யடையலாம்; அடிமையாலியன்ற உதவி ஸமுகத்திற்கு உண்டு என்பதைத் தனியே விண்ணப்பிக்க வேண்டுவதில்லை; தங்கள் உத்தரவை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்".

இதைப்படித்தவுடன் பேபர் புன்முறுவல் கொண்டார்; உள்ளம் பூரித்தார்; பல ஆறுகள் பாய்வதால் செழுமைவாய்ந்து பலவகைப் பழத்தோட்டங்களையுடைய சாமர்க்கண்டைத் தம்மனக்கண்ணுல் நோக்கினர். விரைவில் தாம் அதற்கு அரசராகப் போவதை நினைந்து அகமகிழ்ந்தார்.

தூதன் வந்த சமயம் குளிர்கால நடுவாம். போகும் வழியெல்லாம் உறைபனி மூடியிருக்கும். இவற்றையெல்லாம் பேபர் சிறிதும் பொருட் படுத்தாமல் பெருஞ்சேனையுடன் சாமர்க்கண்டை நோக்கிப்புறப் பட்டார். தம்வழிப்பகைவனை ஷெய்பானியை ஒழிக்கப்போவதை எண்ணி மகிழ்ந்தார்.

ஷெய்பானி, ஷா இஸ்மேல் கையால் கொலையுண்ட செய்தியும் அவன் மண்டையோட்டில் தங்க வேலைப்பாட்டைச் செய்து இஸ்மேல் நீர் பருகப் பயன்படுத்தி வருவதும் பேபருக்குத் தெரியாதவை.

இனி அஸ்பெக்கர் நிலையைக் கவனிப்போம். தமது தலைவன் இறந்தானுயினும் அவர்கள் பேபரோடு சண்டைசெய்யப் பின்வாங்கவில்லை; அவர்கள் வலிமை இன்னம் குறையவில்லை.

பிறருதவியின்றி அஸ்பெக்கரை வெல்லுவது இயலாதென்பதையுணர்ந்த பேபர் வாளா இருந்தார். பகைவர் போராற்றும் முயற்சியில் தளராதிருந்தனர்; இதையுணர்ந்த பேபர், தம்படையுடன் அருகில் இருந்த மலையுச்சிய யடைந்தார். அஸ்பெக்கர் அவரைத் துரத்தி வந்தனர்; இரவும் வந்தது; பேபரின் வீரர், தத்தம்படைகளைக் கைபிற் கொள் வாராயினர். போருக்குரியன வெல்லாம் தொகுக்கப்பட்டன. வீரர் கண்கொட்டாமல் விடியலை எதிர் பார்த்தவண்ணம் ஆவலோடு நின்றனர்; பொழுது விடிந்தது; அஸ்பெக்கர் விரைவில் வந்து கொண்டிருந்ததை வீரர் பேபருக்குத் தெரிவித்தனர். பகைவ

ருக்கு இல்லாத ஒரு அனுகூலம் பேபருக்கு இருந்தது; அது, பேபர் சேனையுடன் மலையுச்சியில் ஏறியிருந்ததே. பகைவர் கீழே நின்றனர். பேபரையடைய வேண்டுமானால் இரு குன்றுகளுக்கு இடையே செல்லும் குறுகியதொரு பாதையூடே செல்லவேண்டும்; அவ்வழியே வந்தால் பேபரின் வீரர் பகைவரை எளிதிற் சின்னபின்னமாக்கி விடலாம்; ஆதலால் அஸ்பெக்கர் இவ்வழியே செல்லுவதைத் தவிர்த்து, குன்றுகளில் ஒன்றின் மேலேறிச் செல்ல உறுதி கொண்டனர்; அவர்கள் தலைவருள் ஒருவன் பதினாறாயிரம் வீரரை, உடனழைத்துக் கொண்டு மேலேறி வந்துகொண்டிருந்தான். கான்மிர்ஸா அவர்களை எதிர்த்துச் சென்றான்; அஸ்பெக்குதிரைவீரர் தங்கள் அம்புகளை மழைபோற் பொழிந்தனர். அவர்கள் விரைவில் மிர்ஸா இருந்த இடத்தைக் குறுகினர்; தெய்வாதீனமாய் அச்சமயத்தில் ஒருசேனை வந்து மிர்ஸாவுடன் சேர்ந்துகொண்டது.

எதிர்பாரா இப்பேருதவி மிர்ஸா ஹைதரினால் கிடைத்தது. பேபர் சண்டைக்குப் புறப்படுமுன் ஹைதரை வரவேண்டாவென்று எவ்வளவோ தடுத்துச் சொல்லிவந்தார்; அவன் கேட்கவில்லை. வந்துகொண்டிருக்கையில் அவன் தந்தை காலமுதலிருந்து வந்த வீரரிற் பலர் அவனோடு சேர்ந்துகொண்டனர். பேபர், கான்மிர்ஸாவுக்கு உதவப் போர்த்திறம் வாய்ந்த இவ்வீரரை யனுப்பினார். நாள் முழுவதும் இடைவிடாது சண்டை நடந்து வந்தது. ஆயிரக்கணக்கான வீரர் போரில் மாண்டனர். போர்க்களம் முழுவதும் உதிர வெள்ளம் பரந்தது.

இருள் நெருங்கியதும் அஸ்பெக்கர் போரை நிறுத்தி விட்டு நீர்நிரம்பியதோரிடத்தில் தங்கக் கூடாரங்களை அடிக்கச் சென்றனர். பேபரின் வீரர் அவர்களை முறியடிக்கத் தக்க சமயம் அதுவே என்பதை யுணர்ந்து அவர்களைத் துரத்திச் சென்று சிதறியோடச் செய்தனர். அஸ்பெக்கர் தலைவரிற் பலர் கொல்லுண்டனர். பலர் சிறைப்பட்டனர். எஞ்சியவர் தலைவரின்றிச் செய்வகை யறியாமல் ஊக்கங் குன்றி மனமுறிந்து துருக்கிஸ்தானம் நோக்கி ஓடலாயினர்; அவ்வளவில் மாரன்னுர் நாட்டில் அஸ்பெக்கர் கொடுமை ஒழிந்தது.

தமக்குப் பேருதவி புரிந்த ஷாஇஸ்மேலின் அனுமதி பெற்று, பேபர் மறுபடி சாமர்க்கண்டில் அரசு கட்டில் ஏறினர்; இவர் வருகையைக் கேட்ட குடிகள் எல்லோரும் மகிழ்வாராயினர். தெருக்களெல்லாம் அலங்கரிக்கப் பட்டன; எங்கும் சித்திர வேலைப்பாடமைந்த பலவகைப் படங்களும் பதுமைகளும் பார்ப்பவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. தெருக்கடோறும் நறுமணம் வீசும் பலவகை மலர்த் தோரணங்கள் காற்றிலசைந்து ஆடின. அது, சக்ரவர்த்தித் திருமகனே வருக' என்று மகிழ்ந்து அழைப்பது போலிருந்தது. எங்கும் 'பேபர் பாதுஷா வாழ்க', 'அஸ்பெக்கத்தீயோாழிக' என்னும் பேரொலி காதில் வீழ்ந்து கொண்டே இருந்தது.

பேபர் நீண்ட நாளாகத் தம்மனத்திற்கொண்டிருந்த விருப்பம் நிறைவேறியது; அப்பொழுது பேபருடைய ஆளுகைக்குட்பட்டிருந்த நாடு டாஷ்கண்டிலிருந்து கஜினி வரையில் பரவியிருந்தது. சாமர்க்கண்டு, போகாரா, ஹிஸார், பேர்க்காணு முதலிய நாடு

கள் அவர் வசமாயின. அவர் இந்தியாவின்மீது வைத்த நோக்கத்தைக் கைவிட்டு விட்டார். காபூலைத் தம் தம்பி நாஸரிடம் கொடுத்துவிட்டார்.

தடை யெதுவுமின்றி இனிச் சாமர்க்கண்டில் ஏகாதிபத்தியம் வகிக்கலாமென்று அவர் எண்ணினர்; ஆனல், 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிற'தன்ருே? 'ஒன்றை நினைக்கி னதுவொழிந் திட்டொன்ருகும்' என்னும் பெரியோர் வாக்குப் பொய்க்குமோ? சிலநாளே அவர் சாமர்க்கண்டை ஆளும் பேறு பெற்ருர். பிறகு அவர் கனவிலும் நினைத்தறியாப் பல இன்னல்கள் ஒன்றன்பின் ஒன்ருகச் சூழ்ந்துகொண்டன.

அவர் ஷாஇஸ்மேல் அனுமதி பெற்று, சாமர்க்கண்டிற்கு அரசரானரென்று முன்னமே கூறினேம். உள்நாட்டிலும் அயல்நாட்டிலும் நிகழக்கூடிய எல்லா வியவகாரங்களுக்கும் ஷா இஸ்மேலே முடிவு கூறும் தலைவரானர்; அவருக்குப் பணிந்து அவர் சொற்படி பேபர் நடக்க நேர்ந்தது; இவ்விடத்தில் முகம்தியருடைய சிலகுணங்களை அறிவது இன்றியமையாததாம். முகமதியர் சிறந்த மதாபிமானிகள்; மதத்திற்காக எதைச்செய்யவும் அஞ்சாதவர்; அக்காலத்தில்அவர்களுள் ஷியா, ஸுன்னி என்ற பெரும் பிரிவு தோன்றியிருந்தது. அவர்களுக்குள் நீராப்பகை வளர்ந்தது. அதனல் அடிக்கடி மதப்போர் நடப்பதாயிற்று.

ஷா இஸ்மேல், ஷியா வகுப்பைச்சேர்ந்தவன்; பொதுவில் பேபர் மதத்துவேஷியல்லராயினும் தம்தலைவனை யொத்து நடக்குங் கருத்துடன் தாமும் ஷியா

வகுப்பிற் சேர்ந்து அவ்வகுப்பாருக்குரிய ஆடைகளை உடுத்து வந்தார். சக்கரவர்த்தியின் பலம் தமக்குண்டென்று இறுமாப்புற்ற ஷியா வகுப்பினர் ஸுன்னி வகுப்பினருக்குச் சொல்லொணுத் துன்பங்கள் இழைத்தனர்; கண்ட இடங்களிலெல்லாம் அவர்களை இகழ்ந்து பேசிப்பழித்தனர். இவர்களைக் கண்டித்துத் தண்டியாமல் இருந்த பேபரிடம் குடிமக்களுக்கு வெறுப்புத் தோன்றியது. அவரிடமிருந்த மதிப்பும் அன்பும் குறைந்தன. குடிகளிற் சிலர் அவர் அழிவை எதிர்நோக்கி நின்றனர்; அதற்கு ஏற்ற சமயமும்வாய்த்தது; அஸ்பெக்கர் தலைவரில் ஒருவன் 3000—வீரருடன் பேபரை எதிர்க்கலானுன். பேபரிடம் 4000 வீரரடங்கிய பெரும்படை யிருந்தது; என்றுலும், பகைவர் இவர்களைப் புறங்காட்டி ஓடச்செய்துவிட்டனர்; இத் தோல்விக்குக் காரணராயிருந்தவர் பேபருடைய தளபதிகளே யாவர். சக்கரவர்த்தி ஷியாவகுப்பினரை யாதரிப்பதைக் கண்ட அவர்கள், பேபரிடம் வெறுப்புற்று ஊக்கங் குன்றி அரைமனத்தோடு சண்டை செய்தனர். இதனுலேயே அஸ்பெக்கர் எளிதில் வெற்றிபெற முடிந்தது.

ஷாஇஸ்மேல் பெரும்படையைப் பேபருக்கு உதவியாக அனுப்பினுன். பேபர், தம்மாலியன்ற அளவு போர் செய்து பார்த்தார். அஸ்பெக்கர் தலைவர், பேபர் குடிகளின் ஆதரவை இழந்தாரென்பதை யுணர்ந்தனர்; தைரியங்கொண்டு வீராவேசத்துடன் போராற்றினர். சக்கரவர்த்தியின் படைவீரர் சிதறுண்டு நாலாபக்கங்களிலும் ஓடலாயினர்; இனி அங்கு இருப்பதிற் பயனில்லை யென்பதை

புணர்ந்த பேபரும் அவமானம் மேலிட ஹிஸ்ரா நாட்டை நோக்கி ஓடிவிட்டார். மங்கோலியர் அங்கு இவருக்கு இழைத்த துன்பங்களுக்கு அளவே இல்லை. அவர்கள் எப்பொழுதும் பலமற்ற கட்சியாரை எதிர்க்கும் இயல்பினர். அவர்கள் ஒரு நாள் பேபர் தங்கியிருந்த இடம் வந்து அவரைத் தாக்கலாயினர். அவர் படுக்கையை விட்டெழுந்து உயிர் தப்பக் கோட்டைக்குள் ஓடினார். மங்கோலியர், சையத்கான் என்பவனிடம் சென்று அவனுக்கு அரசுரிமை கிடைக்கச் செய்வதற்காகப் பேபரைக் கொல்லப் போகுறோமென்று கூறினர்; ஆனால் அக்கொடுஞ் செயலுக்கு அவன் இணங்கவில்லை. அவன் அவர்களை நோக்கி, "நண்பர்காள்! நான் ஷெய்பானியின் கொடுமையைப் பொறுக்க வாற்றாமல் அல்லற்பட்டலைந்த சமயத்தில் எனக்குயிர் கொடுத்துத் தஞ்சமளித்தவன் அப்புண்ணியன். அவன் செய்த உதவியை நான் என்றும் மறவேன். எனக்கு அரசுரிமை வேண்டா; உங்கள் கொடிய வெண்ணத்தை விட்டுவிடுங்கள்" என்று கூறினான். அவனும் மங்கோலியனே; அவன் இவ்வாறு பெருந்தன்மையுடன் நடந்துகொண்டது வியப்பிற்கு இடமேபாம்.

அவன் எவ்வளவோ புத்திமதி கூறியும் மங்கோலிய வீரர் அவற்றைக் கேளாமல் ஹிஸார் நாட்டைக் கொள்ளையிடலாயினர். நாட்டிற் கொடும் பஞ்சம் தோன்றியது; இருந்தவர் இறந்தவரைப் புசிப்பாராயினர். குளிர்காலம் வந்தது. இடைவிடாது பனிபெய்து கொண்டே இருந்தது. இச்சமயத்தில் அஸ்பெக்கர் அங்கு வந்து சேர்ந்தனர். திடீரென்று மங்கோலியரைத் தாக்கலாயினர். கொடி

யவரிற் பெரும்பாலோர் திடுக்கிட்டுத் திசைமணி யாற்றிற் குதித்து உயிர் துறந்தனர். எஞ்சியவர் அஸ்பெக்கரின் கூரிய வாளுக்கு இரையானார்கள்.

பேபர் அங்கிருந்து குண்டங் கூருக்குத் தப்பி ஓடிவிட்டார்; அங்கு இருந்து கொண்டே நிகழ்ந்தன வற்றைக் கவனிக்கலானார். அவர் நாடிழந்து வறுமை வாய்ப்பட்டு அலைந்து திரியலானார்; காலத்தை யாரே கடக்கிற்பார்! ஒரு சமயம் மங்கோலியரிடமிருந்து ஹிஸார் நாட்டைப் பெறலாமென்ற நம்பிக்கையும் அஸ்பெக்கர் வருகையால் பேபர் மனத்தை விட்ட கன்றது; எனினும், அவர் மனச்சோர்வு கொள்ள வில்லை. பிறகு அவர் காபூலை நோக்கிச் சென்றார்.

# எட்டாவது அத்தியாயம்

"கிட்டாதாயின் வெட்டெனமற"

என்ற மூதுரைக்கு ஏற்பச் சாமர்க்கண்டு தமக்குக் கிட்டாதென்பதையுணர்ந்த பேபர், ஆரியாவர்த்தத்தின் மீது தம் ஞாபகத்தைச் செலுத்தலானார்; முன்னமே ஷெய்பானி, காபூலை நோக்கி வந்த செய்தியைக் கேள்வியுற்ற பேபர், அவன் வலிமைக்கும் கொடுமைக்கும் அஞ்சிப் படைதிரட்டிக் கொண்டு சிந்துநதியைக் கடந்து ஜீலம் நதிக்கரையிலுள்ள பீரா வரையில் வந்தாரென்று சொல்லியிருக்கிறோம்.

அப்பொழுது பேபரது வீரர், கொள்ளை கொலை முதலியவற்றை மேற்கொண்டு அல்லவை செய்யத் தொடங்கினர்; பேபர் அவர்களைக் கண்டித்து நல்வழிப் படுத்தினார். பின்னர், அந்நாட்டுக் குடிகளுக்கு வரிவிதித்து, கிடைத்த பொருளை வீரருக்குப் பங்கிட்டுத்தந்து தமதூர் திரும்பலானார். அதுமுதல் அவருக்கு இந்துஸ்தானத்தைக் கைப்பற்றும் எண்ணம் மேலிட்டது; அதற்கேற்ற முயற்சிகளைச் செய்துவந்தார். கி.பி. 1519 ஆம் ஆண்டு இவர் தம் வீரரை அழைத்துக் கொண்டு சிந்து நதிக்கு மேற்கிலுள்ள பாஜார் நாட்டைத் தாக்கினர். இதுவே ஆரியாவர்த்தப்படை யெடுப்புக்கு அடிப்படையாகும் எனலாம்.

இந்தப் பாஜார் நகரக்கோட்டை அக்காலத்திலுள்ள கோட்டைகளுள் மிக்கவலிமை பெற்றது; அவர், தம் சேனையை அணிவகுத்து அவரவர்க்குரிய இடத்

தைக் குறிப்பிட்டு உலகம் பெயரினும் இடத்தை விட்டுப் பெயராமல் இருக்கக் கட்டளை யிட்டார். கோட்டை பலமாக முற்றுகை யிடப்பட்டது. அந் நகரமாந்தர் இதுவரையில் துப்பாக்கிகளைப் பார்த்ததே இல்லை. அவைகளைக் கண்டவுடன் நகைத்து அவைகளால் தங்களுக்குச் சிறு துன்பமும் நேரா தென்று கருதி இறுமாந்திருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் துப்பாக்கியின் வல்லோசை எங்கும் ஒலித்தது. உள்ளிருந்தவர் நடுக்குற்றனர்; அவ்வொலியால் பத்து வீரர் உயிர் விட்டனர். விரைவில் கோட்டைச் சுவர்கள் தகர்ப்புண்டன. பாஜாரிகள் அம்பு மழை பொழிந்தனர்; ஆனால் அவர்களால் துப்பாக்கிகளின் முன் நின்று போர் புரியக் கூடவில்லை; எண்ணிறந்த வீரர் மரணமடைந்தனர், தம் வாழ் நாட்களில் இதுவரையிற் புரியாத கொடுஞ் செயலைப் பேபர் இப்பொழுது செய்தாரென்று சொல்லப்படுகிறது. இயல்பிலே பெரு நோக்கமும் கருணையும் நிரம்பிய பேபர், அந்நகர மாந்தரைக் கொலைபுரிந்து அவர்கள் பெண்டு பிள்ளைகளையும் சிறைபிடித்தனர். சேனைத் தலைவரின் தலைகளை வெட்டி வெற்றிக்கு அறிகுறியாகக் காபூலுக்கு அனுப்பினு ரென்பர்.

பேபர் அங்கிருந்து (பாஜார்) கிழக்கே சிந்து நதியைக்கடந்து ஜீலம் நதிக்கு மேற்கிலுள்ள பீராவைக் கைப்பற்றும் பொருட்டுப் பஞ்சாபிற்குட் புகுந்தார். அங்கே இவரை எதிர்ப்பவர் எவரும் இலராயினர்; அந்நாட்டுக் குடிகளுக்கு 16000 பவுன் வரி விதித்து அவர்களுக்கு யாதொரு தீங்கையும் இழையாதபடி தம் வீரருக்கு உத்தரவளித்தார். தம் முன்னோராகிய தைமூர் வென்ற நாடாகையால் பஞ்சாப் தம்

மைச்சேர வேண்டுமென்று உரிமை கொண்டாடினர். பஞ்சாப் தமக்குரியதென்று தெரிவித்து வரும்படி டில்லியரசனிடம் ஒரு தூதுவனை விடுத்தார்; ஆனால் எதிர்ப்பாரா அசந்தர்ப்பத்தால் அத்தூதன் லாகூரில் தங்க நேர்ந்தது; ஆதலால் அவன் தூதுச் செய்தியை டில்லியரசர்க்குத் தெரிவியாமலே ஊர் திரும்பி விட்டான், இப்பொழுது பீரா, குஷாப் (Kushab), சீனும் நதிகளுக்கு இடையில் உள்ள நாடுகள் பேபருக்குரிமையாயின. தமக்குப் பதிலாக அந்நாடுகளை ஆளச் சிலரை நியமித்துத் தாம் காபூலுக்குச் சென்றார்.

இதுவரையில் அவரைப்பற்றாத குடியென்னுங் கொடிய பழக்கம் அவரிடம் குடிகொண்டது. எங்குச்சென்றாலும் எச்சந்தர்ப்பத்திலும் குடிப்பதென்று லவருக்குக் கொண்டாட்டம். இயற்கையழகு வாய்ந்ததோரிடத்தை அவர் காண்பார்; உடனே தம் நேயருடன் குடிக்க உட்கார்ந்து விடுவார். நீர் நிலவளங்களாற் செழித்து வளர்ந்த பயிர்களைக் கண்டவுடனே உடல் பூரித்துக் குடிக்கக் கருதுவார். சுருங்கக் கூறின் அவர் காலை தெய்வ வழிபாடு குடியே; மாலையிலும் அப்படியே. குடியில்லாச் சமயமே இல்லை; என்றாலும், இக்கொடிய பழக்கம் அவர் முயற்சிகளுக்கும் செயல்களுக்கும் இடையூறாக இல்லை. யாவரும் மதிமயங்கி அறிவிழக்கும் குடிப்பேய் அவரைமட்டில் கெடுக்கவில்லையாம். பேபரைப் போல் குடித்தவர் எவருமிலர்; எனினும், அவரைப் போல் காரியத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்தவருமில்லை. குடித்தவருள் தந்நிலைமாறாதிருந்தவர் இவர் ஒருவரே. ஏனையோர் குடிமயக்கத்தால்

தம்மை மறந்து பிதற்றுவதைக் கண்டு அவர் மனம் நோவதுண்டு; ஒருசமயம் அவருக்குச் சுரநோய் கண்டது; அப்பொழுது குடியை விட்டுவிட நேர்ந்த தாம். குடிப்பவர்க்குக் கடவுள் அருளாரென்பது இவரது உறுதியான நம்பிக்கை; ஆதலால் இவர் குடித்துவந்த விலையுயர்ந்த பாத்திரங்களைக் கீழே போட்டுடைத்துவிட்டு இனிக்குடிப்பதில்லை என்று சபதஞ்செய்தார். உடைந்த பாத்திரங்களை வறிஞருக்குக் கொடுத்து விட்டார். இவருடன் வந்த வீரரும் அவ்வாறே செய்து குடிப்பழக்கத்தை அடியோடு விட்டு விடுவதாக உறுதி கூறினர். பேபரின் வழியில் தோன்றியவருட் குடியாதவர்களே இல்லை; அப்படியிருந்தும் நீண்ட நாள் வரையில் இவர் அக் கொடிய பழக்கத்தை மேற் கொள்ளாதிருந்தது வியத்தற்குரியதே. பிறகு அதைத் திடீரென நிறுத்தியதும் அவர் மனவுறுதிக்குப் போதிய சான்றாகும்.

இப்பொழுது அவர் சிக்ரிக்கு அருகில் வந்து விட்டார்; அதை ஆண்டுவந்த ராணாசங்கரோடு போர்புரியத் தக்க முயற்சிகளைத் தாமதமின்றிச் செய்து முடித்தார்.

கி—பி. 1520 ஆம் ஆண்டில் படாக்ஷானை, பேபர் பிரதிநிதியாகவிருந்து ஆண்டுவந்த கான்மிர்ஸா இறந்து போனான். உடனே அவர் தம்மகன் ஹுமாயூனை அனுப்பி அதை ஆளச் செய்தார். தாமும் சில சமயம் அங்குச் சென்று நாட்டு வளர்ச்சிக்குரிய செயல்களைச் செய்து வந்தார்.

கி.—பி. 1522ஆம் ஆண்டில் தாம் நீண்ட நாளாக வெல்லக் கருதி இருமுறை முற்றுகை செய்த காந்த

ஹார் இவர் வசமாயிற்று. இதை யாண்டுவந்த ஷாபே என்னும் சிற்றரசன் அஞ்சி அதை அவருக்கு அளித்து, சிந்துவைக் கைப்பற்றி யாட்சி செய்யலானன். இப்பொழுது பேபருடைய ராஜ்யம் ஆக்ஸஸ் நதியிலிருந்து பாரசீக எல்லைப்புறம் வரையிலும் பரவியிருந்தது.

பீராவைத் தமக்கு உரிமையாக்கிக் கொண்ட பிறகு இவர் இருமுறை பஞ்சாபைத் தாக்கினார்; ஆனால் அதைக் கைப்பற்ற இயலவில்லை. மூன்றும் முறை பெரும்படையைத் திரட்டிக் கொண்டு சியல்கோட்டையின் வழியாகப் பஞ்சாபிற்குச் செல்லுகையில் காந்தஹாரிலுள்ள குடிமக்கள் கலகஞ்செய்து நாட்டையழிக்க முயன்று வருவதாகக் கேள்வியுற்று விரைவில் அங்குப் போய்க் கலகத்தை அடக்கி யமைதி நிலவச் செய்தார். கலகக்காரர், கடுமையாகத் தண்டனை பெற்றனர்.

இவர் கி.—பி. 1524 ஆம் ஆண்டு ஆரியாவர்த்தத்தின் மீது படையெடுத்துவந்தார்.

# ஒன்பதாவது அத்தியாயம்

பேபர், ஆரியாவர்த்தத்தின்மீது படை யெடுத்த போது, வடஇந்தியாவை லோடி வம்சத்திலுதித்த இப்ரஹிம் என்பவன் டில்லியிலிருந்து ஆண்டுவந்தான்; பஞ்சாப், வடமேற்கு மாகாணங்கள், அயோத்தி, பீஹார், இரஜபுதனத்தின் ஒருபகுதி முதலிய நாடுகள் அவன் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. அவனது சேனை மிகப் பெரியது; எனினும், நாட்டில் படையெடுத்து வரும் பகைவரைத் தடுக்கக்கூடிய வன்மை அதற்கு இல்லை. அவன், தன் நாட்டைப் பல சிறு பிரிவுகளாப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒரு பிரதிநிதியைக் கொண்டு ஆள நியமித்திருந்தான். அவர்கள் தத்தம் மனம்போல் நடந்துவந்தனர். ஒவ்வொருவரும் தனித் தனி யாளவிரும்பி அதற்குத்தக்க முயற்சிகளைச் செய்து வருவாராயினர்; பெயரளவில் இப்ரஹிம் லோடி அரசனாகவிருந்தான். பிரதிநிதிகள் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக்கொண்டது, அந்நியர் அந்நாடுகளைக் கைப்பற்றப் பேருதவியாயிற்று. இப்ரஹிம், இயல்பாகவே கடுநெஞ்சன்; குடிகளின் நலத்தைச் சிறிதுங் கருதாதவன்; தயையற்றவன்; கொடுங்கோன்மையன்; ஆதலால் மக்கள் அவனை அறவே வெறுத்தனர்.

இப்ரஹிமுக்கும் அவன் சகோதரனுக்கும் மனத்தாங்கல் உண்டாயிற்று. ஒருவருக்கொருவர் சண்டையிடலாயினர்; ஆதலால், குடிமக்கள் இருபிரிவாகப்

பிரிந்து கலகஞ் செய்பலாயினர். இப்ராஹிம் தன் படைப் பலத்தால் தம்பியைத் தோற்ரேடச் செய்தான்; சிறைப்பட்ட வீரரைக் கொன்ருன்; இவன் கொடுமையைக் கண்ட மக்கள் நடுக்குற்று இவனழிவைப் பேராவலுடன் நோக்கியிருந்தனர்; நாட்டில் கலகங்கள் பெருகின. பஞ்சாப் கவர்னரான தௌலத்கான் இப்ராஹிமுக்குக் கீழ்ப்படிய மறுத்துவிட்டான்.

டில்லி யரசவம்சத்தைச் சேர்ந்த ஆரம்கான் என்னும் இளவல் ஒருவன் பேபரிடம்வந்து தனக்கு டில்லி ராஜ்யத்தைக் கிடைக்கச் செய்யுமாறு வேண்டினன். அதேசமயத்தில் பஞ்சாப் கவர்னரான தௌலத்கான, தனக்குத துணைபுரியப் பேபரை வேண்டிக் கடிதம் எழுதினன். பேபர் நெடுநாள் தம் மனத்தில் உள்ள எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளத்தகுந்த சமயங் கிடைத்ததை நினைத்து உள்ளம் பூரித்தார். இந்திய நாட்டை மனக்கண்ணால் கண்டு ஆனந்தக் கடலில் மூழ்கினர்.

கால தாமதமின்றிப் பேபர் பெருஞ்சேனையுடன் பீராவைக் கடந்து லாகூரை நெருங்கினர். தௌலத்கானது துரோகச் செயல் விரைவில் வெளியாயிற்று. இப்ராஹிம் அவனை வேலையினின்றும் நீக்கித் துரத்திவிட்டான். இதையறிந்த பேபர், தம் வீரருதவியால் இப்ராஹிம் சேனையைத் தோல்வியுறச் செய்தார். பகைவரைத் தெருத்தோறுந் துரத்திச் சென்று கொன்ருர். வீடுகளைக் கொள்ளையிட்டுக் கடைவீதிகளைக் கொளுத்தினர்.

பஞ்சாபில் பேபர் நான்கு நாட்களே தங்கினர். அங்கிருந்து திபல்பூருக்குச் சென்று அவ்வூர்க் கோட்டையைத் தகர்த்துப் பகைவர் பலரைக்கொன்று

ஊருக்குட் புகுந்தார். இந்தச் சமயத்தில் தௌலத்கான் பேபருடன் சேர்ந்துகொண்டான்; ஆயினும், விரைவில் அவனுக்கும் பேபருக்கும் மனப்பிளவு நேர்ந்தது; தௌலத்கான், பஞ்சாப் மாகாணத்தைப் பேபர் கைப்பற்றியவுடன் தனக்கு அளிக்கக்கூடுமென்று மனக்கோட்டை கட்டியிருந்தான்; பேபர் அதற்கு இணங்கவில்லை. தமது பிரதிநிதியாய் நியமிக்கக் கருதினார். தௌலத்கான், தன்னைப் பேபர் அவமதித்ததாகக் கருதிக் கோபங்கொண்டு மனமுடைந்து மலைகளுக்கு ஓடினான். அங்கிருந்துகொண்டு பேபரை யொழிப்பதற்குத் தக்கசமயம் நோக்கியிருந்தான். 'தன்வினை தன்னைச்சுடும்' என்னும் ஆன்றோர் மொழி இவனிடம் பொருந்துமன்றோ? தௌலத்கான் பிரிவால் பேபர் டில்லிமீது படையெடுத்துச் செல்லத் தாமதமாயிற்று. பஞ்சாபைப் பகைவரிடமிருந்து காக்கும்பொருட்டு தம்மவரிற் சிலரை நியமித்து அலாவுதீனைத் திபல்பூர் ஸுல்தானுக்கிப் பெரும் படை திரட்டிவரக் காபூல் சென்றார்.

பேபர் ஊரைவிட்டுச் சென்றாரென்பதைக் கேள்வியுற்ற தௌலத்கான், அலாவுதீனைத் தோற்கச்செய்து அவனைத் திபல்பூரிலிருந்து துரத்திவிட்டான்; அவன் காபூலுக்கு ஓடிப்போய் இச்செய்தியைத் தெரிவித்தான்; மேலும் டில்லியைச் சூழ்ந்த நாட்டைப் பிடிக்கத் தனக்கு உதவிபுரிந்தால் பஞ்சாப் முழுவதையும் அவருக்கு அளிப்பதாகவும் தெரிவித்தான்; பேபரும் அதற்கு இணங்கினார். பேபர் சொல்லை நம்பி அலாவுதீன் லாகூருக்குத் திரும்பினான். பேபர் அஸ்பெக்கர் தொந்தரவினால் இந்தியப் படையெடுப்பைத் தள்ளிவைக்க நேர்ந்தது. கி. பி. 1525—ஆம் ஆண்டு நவம்

பார்பீ பேபர் இந்தியாவின்மீது படையெடுத்துச் சென்றார். அவர் குமாரன் ஹுமாயூன் படாக்ஷானிலிருந்து ஒருபெரும்படையுடன் சண்டைக்குச் சென்றான். போர்த்திறமை மிகுந்த காஜாகாலான் என்பவன் தன்வீரரை அழைத்துக்கொண்டு கஜினிக்குச் சென்றான். இதுவரையில் நடந்த சண்டையில் பேபரிடம் இவ்வளவு பெரிய படை இருந்ததே இல்லை; எனினும், டில்லியரசன்வசம் இருந்த படையின் தொகையை நோக்கின் பேபரது சேனை பன்மடங்கு சிறியது என்று கூறல்தகும். சேனையோடு ஜீலம் நதிக் கரையைக் கடந்தவுடன் பேபரோடு அலாவுதீன் அனுப்பிய சேனையின் ஒருபகுதிவந்து சேர்ந்துகொண்டது. அலாவுதீன், போர்முறை யறியாதவன்; முன்பின் யோசியாமல் டில்லியைத் தாக்கத் தன் சேனையை விடுத்தான; லோடியின் சேனவீரர் அச்சேனையைத் தோல்வி யடையச்செய்து சின்னபின்னமாக்கினர். அச்சேனையின ஒருபகுதியே லாகூரையடைந்து பேபரோடு சேர்ந்துகொண்டது. இச்செய்தியைக் கேள்வியுற்ற பேபர் லாகூரைக் கைப்பற்றத் தக்க முயற்சியை விரைவிற் செய்தார். தௌலத்கான் தன் வஞ்சினத்தைத் தீர்த்துக்கொள்ள அதுவே தக்க சமயம் என்றெண்ணி 40,000 வீரர்களுக்குத் தலைமை வகித்துப் பேபரைத் தாக்கினான்; ஆயினும், அப்பெருஞ் சேனை பேபரைக் கண்டதும் சூரியனைக் கண்ட பனிபோல் ஓடிற்று. குளிர் மிகுந்த மலை நாடுகளிற் பிறந்து தம் வாணாட்களிற் பெரும்பகுதியைப் போராற்றுவதிலேயே கழித்து வந்த பேபர் முன்னிற்க வல்லவர் எவர் ? தௌலத்கான் சேனை சிதறுண்டது; அவனது வீரர் தாறுமாறாக ஓடலாயினர். பேபர்,

அவர்களைத் துரத்திச் சென்று இரவி யாற்றைக் கடந்தார். அங்கே இவரை எதிர்ப்பவர் எவரும் இல்லை; பகைவரைத் துரத்திச் செல்லும்படி சேனையின் ஒரு பகுதியை யனுப்பினர்; தௌலத், சிறைபிடிக்கப்பட்டுப் பேபர் முன் நிறுத்தப்பட்டான். பேபர், அவனது வஞ்சக எண்ணத்தையும் கொடுமையையும் அறவே மறந்து அவன் பிழைகளை மன்னித்து விடுதலை செய்தார்; ஆனால் அவன் அவமானத்தால் தன்னூர் திரும்புகையில் மனமுடைந்து உயிர் நீத்தான். அப்பொழுது பஞ்சாப், பேபர் வசப்பட்டது. அதையாளும்படி தம்மனிதரில் ஒருவரை நியமித்து விட்டு அலாவுதீன் தொடர்ந்துவர அவர் டில்லியை நோக்கி வந்தார். வரும்வழியில் அம்பாலா என்னும் ஊரைக் கிட்டியதும் இப்ராஹிம் ஒருபெருஞ் சேனையுடன் தன்னைத் தாக்கவந்து • கொண்டிருப்பதாகக் கேள்வியுற்றார்; இதுவன்றி, ஹிஸார் பிரூஸா என்பவர், தம்படையுடன் லோடிக்குதவி புரிய வருவதாகவும் தெரிந்து கொண்டார். உடனே பேபர், தம்மகன் ஹுமாயூனை யனுப்பி பிரூஸாவின் சேனையைத் தாக்கச் செய்தனர்; அவன் தோல்வியுற்றான்; பகைப்படை குழப்பம் மேலிட்டுப் போர் செய்யவியலாமல் நாற்புறங்களிலும் ஒடியது. ஹுமாயூன் செய்த சண்டைகளில் இதுவே முதன்மையாகும்; பேபரின் வீரர் ஊரைக் கொள்ளையிட்டனர்; பகைவர் நடுக்குறும் வண்ணம் பேபர் நூறுவீரரைப் பீரங்கி வாயில்வைத்துச் சுட்டுக் கொன்றார். சென்ற விடமெல்லாம் வெற்றி கிடைப்பதைக் கண்டு ஊக்கங் கொண்டு 'ஷாஹதாபாத்' வழியாக யமுனை நதியைக் கடந்து இப்ராஹிம் இருந்த இடம் வந்து சேர்ந்தார்; பகைவர் படையைக் கடலெனக் கூறின்

பேபரது சேனையை அச்சடலிற்பாயும் ஓராறு என்று கூறல் தகும். லோடியின் வீரர் சண்டைக்கு ஆயத்த மாக இருந்தனர். இனிப்பரதம் கண்டத்தை ஆள்ப வர் முகலாயரா? ஆப்கானியரா? என்பது இனிநடக் கப் போகும் பெரும் போரால் தெளிய வேண்டும்; தோல்வியடைந்தால் பேபர் நிலையாதாகுமென்பதை எளிதில் உணரலாம். இந்தசமயத்திலும் தன் முன் னே முழுங்கிக்கொண்டு வரும் சேனை வெள்ளத்தை சிறிதும் பொருட்படுத்தாமல் இயற்கை யழகு வாய்ந்த நீரோடை ஒன்றைக் கண்டு அகமகிழ்ந்து படகொன் றில் ஏறிப் பேபர் உலாவலானார்; சிறந்தக் கல்வி மானல்லரேனும் இயற்கைத் தேவியின் அழகையள் ளிப் பருகி மகிழ்வதில் பேபருக்கு விஞ்சியவரெவ ரும் இருந்திருக்க முடியாது.

லோடி, தன் பெரும்படையின் ஒருபகுதியை அனுப்பிப் பேபர் சேனையைத்தாக்க உத்தரவிட்டான். பேபர் அதை எளிதில் தோல்வியடைவித்தார். கி. பி. 1526 ஆம் ஆண்டு ஏப்ரல்மீ 21உ இருதிறத்தாருக் கும் பானிப்பட்டில் கடும்போர் நிகழ்ந்தது. பேபர், 700 வண்டிகளை ஒன்றோடொன்றாய்ப் பிணைத்து அவைகளில் துப்பாக்கிகளை வைத்துப் போர்க்களம் இழுத்துவந்து நிறுத்தினார்; தம் படையை அணி வகுத்தார்; ஸுல்தான் இப்ரஹிம் லோடி, நூறு யானைகளடங்கிய பெரும்படையுடன் போர்க்களம் புகுந்து சண்டைக்கு ஆயத்தமாயிருந்தான். பேபரின் மனோதைரியத்தையும் திறமையையும் கருதாமிடத்து, லோடியைத் துரும்பென மதிக்கலாம். போர்வீரனு க்கு ஆபத்தில் இருக்கவேண்டிய தைரியம், போர்த திறமை, பகைவர் திறனறிந்து செயலாற்றும் வன்மை,

கலங்கிய காலத்தில் தம் வீரரை உற்சாகப்படுத்தித் தேற்றும் வன்மை முதலிய சிறந்த குணங்கள் பேபரிடம் மேம்பட்டு விளங்கின. இவைகளே அவரது வெற்றிக்கும் சிறப்புக்கும் காரணங்களாம். வாணாளில் இவர் பட்ட துன்பங்கள் இவ்வளவு அவ்வளவு அல்ல; பதியிழந்து படைத்த நிதியிழந்து உறவினரால் துன்புற்று, தங்க இடமும் உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றி ஊரூராய்த் திரியுங்காலத்திலும் இவர் மனவுறுதியில் தளராமல் காரியத்தில் கண்ணுங் கருத்துமாக இருந்தார். ஒருநாளிரவில் இவரது வீரர் பகைவர் சேனையைத் திடீரெனத் தாக்க முயன்றனர்; ஆனால், இஃது அப்படியே நடைபெறவில்லை. இதைக் கேள்வியுற்ற பகைவர், தாம் தங்கியிருந்த இடத்திலிருந்து வெளி வரலாயினர். ஸுல்தான் இப்ரஹிம், பேபரின் எண்ணம் முற்றுப் பெறாமைகண்டு மனமகிழ்ந்து மறுநாட்காலையில் தன் சேனையைப் பேபர் படைமுன் அணிவகுத்து நிறுத்தினான். இவற்றையெல்லாம் உணர்ந்த பேபர், தமது வீரரை அவரவர்க்குரிய இடத்தில் நிற்கப் பணித்தார்; ஸுல்தானது வீரர், பேபரின் வலப்பக்கச் சேனையைத் தாக்கினர்; பேபர் தம் வீரரைச் சேர்த்துக்கொண்டு கடும்போர் புரிந்தனர். ஸுல்தான் சேனை மிகப் பெரியதெனினும் கூலிப் படையாதலின் முழு மனத்தோடு போராற்றும் திறமை பெறவில்லை; அப்படை அங்ஙனம் இருந்தமைக்கு, இரக்கஞ் சிறிதுமில்லாத லோடியும் காரணமாவான். அவன் தன் படையைச் சேர்ந்த வீரரைக் கொடுமைப்பட நடத்தி வந்தான். விரைவில் லோடியின் படையிற் குழப்ப முண்டாயிற்று. வீரர் மனந்தளர்ந்து அங்குமிங்கும் ஓடலாயினர். அப்படி நேரு

வதை எதிர்ப்பார்த்திருந்த பேபரும் அவர்களைத் தூரத்திச் சென்று முற்றிலும் பணியச்செய்தார். சண்டையில் இறந்தவர் எண்ணிலடங்கார் புண்பட்டவர் பலர். பேபரின் கருத்து நிறைவேறியது. ஆரியாவர்த்தம் பேபர் வசமாயிற்று. போர்க்களத்தில் கிடைத்த பொருள்களை வாரிக்கொண்டு டில்லி ஆக்ரா முதலிய இடங்கள் சென்று பொக்கசங்களைக் கொள்ளையடித்துக் கிடைத்த பொருளைத் தம் வீரருக்குப் பிரித்துக்கொடுத்தார். சண்டை செய்த ஒவ்வொரு வீரரும் அளவிறந்த பொருளையும் பட்டத்தையும் பெற்றனர்; அன்றியும் அவர் தம் உறவினருக்கு அளவு கடந்த வெள்ளியும் பொன்னும் மணியும் அளித்த பிறகு எஞ்சிய பொருளை நாட்டுச் சீர்திருத்தப்பணியிலும் படைப்பெருக்கத்திற்காகவும் பொக்கசத்திற் சேர்த்துவைத்தார். தமக்கென்று அவர் ஒன்றையும் வைத்துக்கொள்ளவில்லை ஹுமாயூன் தான் செய்த பேருதவிக்கு ராஜா விக்கிரமஜித், தனக்கு அன்புடன் அளித்த ஒப்புயர்வற்ற மாணிக்கத்தைப் பேபரிடம் காட்டியபோது அவர் அதைப் பார்த்து விட்டு அவனிடமே திருப்பிக் கொடுத்துவிட்டார். பொருளை இறுகச் சேர்த்துவைத்துக் கொள்ளுவதில் அவருக்குச் சிறிதும் விருப்பம் இல்லை; அதைத் தம்மைச் சேர்ந்த - உண்மையுடனுழைத்த - வீரருக்குக் கொடுத்து அவர்கள் முகமலர்ச்சியைக் காண்பதில் பேபரையொத்த பெருமனம் படைத்தவரெவருமில்லை. எல்லாப் பொருளிலும் மேற்பட்டதும், என்றும் அழியாததுமான புகழை அவர் பெற்றார்; இதுவே அவர் விரும்பியதாகும்.

## பத்தாவது அத்தியாயம்.

பேபர் அப்பொழுது டில்லி ராஜ்யத்திற்குத் தலைவரானாலும் ஆரியா வர்த்தம் இன்னும் அவர் வசமாகவில்லை. டில்லிக்குப் பெயரளவில் அவர் அரசரேயன்றி வேறன்று; இப்ராஹிம், இறந்தாலும் அவனது வழித் தோன்றல்கள் அழிந்திலர்; அவன் சகோதரன் டில்லி தன்னைச் சேர்ந்ததென்று உரிமை கொண்டாடினான். ஆக்ராவுக்குக் கிழக்கிலும் தெற்கிலுமுள்ள நிலப்பகுதியைப் பேபர் இன்னமும் கைப்பற்றவில்லை; அங்குள்ளவர் முகலாயரை வெறுத்து முடிவுவரையில் எதிர்க்கக் கருதிக் கலகஞ் செய்வாராயினர். பியாரு, மீவாட், டோல்புரி, குவாலியர், எடாவா முதலிய இடங்களிலுள்ளவர் பேபருக்கு அஞ்சித் தங்கள் கோட்டைகளைப் பலப்படுத்திக் கொண்டனர்; அளவற்ற பொருளிருந்தும் பேபரின் வீரர் பசியால் வருந்த நேர்ந்தது.

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி,
தொகுத்தார்க்குந் துய்த்தலரிது"

என்பது உண்மையாயிற்று. பேபர் ஆக்ரா வந்த சமயம் கோடைக்கால நடு. ஊர்க் குடிகளிற் பெரும்பாலோர் இவர் வருகையைக் கேள்வியுற்று அஞ்சியோடி விட்டனர். எஞ்சியவர் கலகஞ் செய்யலாயினர். வழிகளில் திருடர் பயம் மிகுந்திருந்தது; கதிரவன் வெப்பம் பொறுக்க வியலாமல் வீரரிற் பலர் உயிர் துறந்தனர். மற்றவர் தத்தம் ஊர் திரும்ப விழைந்தனர். பேபருடைய தளபதிகளுட் சிறந்த காஜா காலானும் தன் தாய் நாட்டைய விரும்பினர்; இதையுணர்ந்த பேபர் தம வீரரை

அழைத்துப் படாத பாடு பட்டுக்கைக்கொண்ட நாட்டை அடக்கியாளாமல் ஊர் திரும்புவது சுத்த வீரருக்கு அழகன்று' என்று கூறி அவர்கள் மனத்தைத் தேற்றினர். அவர்களும் பேபர் கூறிய மொழியைக் கேட்டுக் களிப்பெய்தி, ஊர் செல்லும் நோக்கத்தை மறந்தனர். காஜா காலான் மட்டில் கஜினிக்குக் கவர்னராக நியமனம் பெற்று அந்நகரை யடைந்தான். அவன் புறப்பட்டு போகுமுன் டில்லியில் ஒரு சுவரில், "தங்கு தடையின்றிச் சிந்துவைக் கடந்து என் தாய் நாடடைந்தால் ஆரியாவர்த்தத்தை இனி எட்டியும் பாரேன்" என்று எழுதிவைத்தான். இதைக்கண்ட பேபர் வருத்தத்துடன், "கதிரவன் கொடுமைக்கு அஞ்சி ஓடின், பனியின் கொடுமை அதனினும் குறைவோ?" என்னும் விடையை எழுதியனுப்பினர். பழக்க வழக்கங்கள் மாறிய பகைவரிடையில், வெப்பம் மிகுந்த நாட்டில் நிலைத்து வாழ எண்ணங்கொண்ட பேபரின் தைரியத்தை என்னென்று புகழ்வது! இவர் மிகவிரைவில் கலகஞ் செய்த மக்களை யடக்கித் தம்மிடம் அன்பு பாராட்டச் செய்துகொண்டார். இவர் காட்டிய தயையையும் நட்பையும் கண்ட குடிகள் மனமாற வாழ்த்தி 'அரசென்பது இவருக்கே தகும்' என்று உறுதிகொண்டனர். முதலில் இந்தியர், தைமூரைப்போல் பேபரும் ஊர்களைக் கொளுத்தி மக்களைக் கொள்ளையிட்டுக் கொல்லுவாரென்று எண்ணினர்; அதனால் பேபருக்குமாறாக நடந்தனர் என்பது உண்மையே; சிறிது சிறிதாக அவரது செயலைக்கண்டு அன்பு காட்டலாயினர். முதல் முதல் ஆப்கானியத் தலைவன ஒருவன் 2000 வீரரோடு பேபருடன் சேர்ந்து கொண்டான்

தம்மிடம் சிறைப்பட்ட ஆப்கன் வீரரிருவரைப் பேபர் தயையுடன் விடுவித்த உயர் குணத்தை மெச்சி அவர்கள் தந்தையாகிய ஆப்கானிய தளகர்த்தன் இவருக்கு உயிர்த் துணைவனுனன். இம்மட்டோ! ஸுல்தான் இப்ரஹீம் பீஹார் மாகாணக் கலகத்தை யடக்குமாறு அனுப்பிய ஆப்கன் படை பேபரைச் சரணடைந்தது; ஜான்புரி, அயோத்தி முதலிய இடங்களில் தோன்றிய கலகத்தைத் தம் வீரரைக் கொண்டு பேபரடக்கினுர்; நிற்க,

பேபர் சாம்பலை (Sambhal) தந்திரமாகக் கைப்பற்றினுர். இவர் குமாரஞன ஹுமாயூன் கிழக்கிலிருந்த ஆப்கானியரை வெல்ல ஒருபெருஞ்சேனையுடன் சென்றுன். இதைக் கேள்வியுற்ற ஆப்கானியர் அஞ்சியோடிக் கங்கையைக் கடந்து சென்றனர். ஹுமாயூன் அவர்களைத் துரத்திச் சென்று ஜான்புரியையும் காஜிபூரையும் கைப்பற்றி அவ்வவ்விடங்களிற் சில வீரரைக் காவல் வைத்துவிட்டு, கால்பியான் வழியாகத் தம் தந்தைககுதவிபுரிய வநதான்.

ஆப்கானியர் அடங்கிவிட்டாலும் பேபருக்குப் பழைய பகைவன் ஒருவன் இருந்தான். அவனே இப்பொழுது உதயபுரி எனவழங்கும் சித்தூரை ஆண்டுவந்த ராணுசங்கன் என்னும் ரஜபுத்திர வீரன். அவனும் பேபரை ஒப்ப இளமையில் பல துன்பங்களுக்கு ஆளானவன்; நாட்டை ஏற்றுக்கொள்ளுமுன் அவனுக்கு நேர்ந்த இடையூறுகளை ஒவ்வொன்ருக நீக்கிப் பட்டம் பெற்றுன். மாளவ தேசத்தரசஞன ஸுல்தான் கில்ஜியிடமிருந்து பீல்ஸா (Bhilsa), சாரங்கபுரி, (Sarngapur) சாந்தேரி (Chanderi) முதலிய இடங்களைக் கைப்பற்றினுன். இவன் டில்லி

யரசனை லோடியுடன் பலமுறை சண்டையிட்டிருக்கிறான். சிற்றரசர் பலர் இவனுக்குக் கப்பங் கட்டி இவன் முன் கைகட்டி வாய் பொத்தித் தானை மடக்கி அடக்கத்துடன் நிற்பது வழக்கம். பேபரே இவன் வீரதீரங்களைப் புகழ்ந்து கூறுவாரானால் இவன் புகழுக்கு வேறு சாட்சியம் வேண்டுமோ?

பேபர் காபூலிலிருந்தபொழுது ராணா, டில்லியைக்கைப் பற்றத் தானுதவுவதாகத் தெரிவித்ததுண்டு; ஆனால் காலம் வாய்த்தபோது ராணா சொற்படி உதவமறுத்துவிட்டான். பேபர் அவனது செயலை வெறுத்துத் தண்டிக்கும் சமயம் நோக்கியிருந்தார். ஹுமாயூன் ஆக்ராவை யடைந்ததும் ராணா மீவாட் நகர ஹஸான்கானோடு சேர்ந்து கொண்டு பியானாவை நோக்கி வருவதாகக் கேள்வியுற்றார்; இராஜபுத்திர வீரனுக்கும் முகலாய அரசனுக்கும் கடைசிவரையில் கடும்போர் நிகழலாயிற்று. தாமதமின்றிப் பேபர் தம் சேனையின் ஒரு பகுதியை முன்னேயனுப்பிப் பகைவரைத் தாக்க உத்தரவிட்டார். பிறகு தாமே பெரும்படையுடன் போர்க்களஞ் சென்றார். இதுவரையில் இவரைப் பகைத்தவர் தம் மினத்தைச் சேர்ந்த முகமதியரே. இப்பொழுது வீரமே உருவெடுத்ததெனத்தகும் இராஜபுத்திர சிங்கம் இவருக்குப் பகைமையாயிற்று.

பேபர் சிகிரிக்கு அருகில் தங்கியிருந்தார். பியானாவிலிருந்த வீரர், இவரோடு சேர்ந்து கொண்டனர். இராஜபுத்திர வீரர், உயிரைத் துரும்பென நினைத்து வீராவேசத்துடன் போர் புரிந்தனர். முகலாயர் அவர்கள் வீரத்தையும் மனோ உறுதியையும் கண்டு வியந்தனர். பகைவரின் வலிமை கண்டு மனந்தளர்

ந்தனர். இதையறிந்த பாதுஷா அவர்களைய ழைத்து,

"நேயர்கள்! பிறந்தவர் இறப்பது உறுதி; அழிவி ல்லாப் பொருள் கடவுள் ஒருவரே; ஆதலால், பகை வர் முன் தோல்வியடைந்து அவமானப்பட்டுப் புறங்காட்டி ஓடுவதைக் காட்டிலும் எதிரில் நின்று சண்டைசெய்து இறப்பதே வீரருக்கு அழகு. போ ரில் மாள்பவர் வீரசுவர்க்கத்தையும் அழியாப் புக ழையும் அடைவர் அன்றோ? ஆதலால் வீரத்தைக் கைக்கொண்டு எது வரினும் இடத்தைவிட்டுப் பெயராமல் சண்டை செய்வதே நம் கடமையாகும்" என்று கூறினார்.

இம்மொழிகளைக் கேட்ட முகல்வீரர் வெட்கித் தலைகுனிந்து முன்னினும் பன்மடங்கு தைரியத் துடன் சண்டையிட்டனர். இருதிறத்தினரும் நெடுநேரம் கடும்போர் புரிந்தனர்; உதிர வெள்ளம் பெருகியது. முகல்வீரர், இராஜபுத்திரரைச் சூழ் ந்துகொண்டனர்; தளகர்த்தரிற் சிறந்தோர் உயிர் விட்டனர். தலைவரழியவே பிறவீரர் மனம் தளர் ந்து நாற்புறமும் ஓடுவாராயினர்; பேபர் வெற்றி முழக்குடன் பகைவரைத் துரத்திச் சென்றார். ராணாசங்கன் தப்பி ஓடிவிட்டான்.

இராஜபுத்திரர் தோல்வியடைந்தாலும் அவர்களின் சிறந்த கோட்டைகளைக் கைப்பற்றுதவரையில் தம க்கு அவர்களால் அடிக்கடி துன்பம் நேருமென்பதை யுணர்ந்த பேபர் மாளவ தேசத்திற்குத் தென்கிழக்கி லுள்ள சாந்தேரிக் கோட்டையைக் கைப்பற்றச் சென்றார். அக்கோட்டையை ராணாசங்கரின் உயிர்த் தோழரான மித்னிராவ் பரிபாலித்து வந்தார்.

இவர் அவ்விடங்களில் இராஜபுத்திரருக்குத் தலைமை வகித்து அவர்கள் கைகட்டி வாய்பொத்தி யிருக்கும் வண்ணம் அவ்வளவு செல்வாக்குப் படைத்தவர். பேபர் இங்குவந்தபோது மிதினிராவ் 5000 வீரருடன் கோட்டைக்குள் இருந்தார். பேபர் சில நிபந்தனைகளுடன் சமாதானத்திற்கு வருவதாகத் தெரிவித்தார்; மிதினிராவ் அந்நிபந்தனைகள் தம்மினத்தவரை அவமதிப்பதாக கூறிப் போருக்கே வரவேண்டினர். பேபரின் வீரர் கோட்டையைச் சூழ்ந்து கொண்டனர். அச்சமயம் நைஜாம் அதீன் கலிபா என்பவர், பீஹாரா மாகாணத்தில் இருந்த ஆப்கானியரை வென்று வர அனுப்பிய சேனை தோல்வியுற்று ஊரைவிட்டு ஓடிவிட்டதாகச் செய்திவந்தது. வந்தவர் உடல் நடுக்கத்தையும் மனோவிகாரங்களையும் கண்டு எல்லாம் ஈசன் செயல் என்றும், அவர் திருவருளால் நேருவன எவையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளத் தக்கனவென்றும் பேபர் கூறினர்; வந்தவர் மனத்தைத் தேற்றினர். இச்செய்தியைத் தம் வீரருக்குத் தெரிவியாமல் அவர் அவர்களை உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தார். பேபரின் வீரர் இரவில் கோட்டையின் வெளிப்புறத்தைக் கைப்பற்றினர். விடிந்தவுடன் கோட்டைக்குள் இருந்தவர், பகைவர்மேல் கற்களையும் நெருப்பையும் வீசியெறிந்தனர். அவற்றைப் பொருட்படுத்தாமல் முகலாயர் கோட்டைச் சுவர்களில் இடைவெளி செய்து உள்ளே நுழைய முற்பட்டனர். இராஜபுத்திர வீரர், இனித் தப்புவதரிது என்பதையுணர்ந்து தங்கள் மனைவிமக்களைக் கொன்று முகலாயர் மேற் பாய்ந்தனர். நூற்றுக் கணக்கான முகல் வீரரைக்

கொன்றனர்; அவர்கள் சிறைப்பட்டு அவமானத்தோடு துன்ப மடைவதைவிட உயிர் நீப்பதே தகுதியெனக் கருதி ஒருவரையொருவர் குத்திக் கொண்டிறந்தனர். இவர்கள் வீரத்தை என்னென்று புகழ்வது! இச்செய்தி காதில்விழுந்தவுடன் ராஞு சங்கன் மனங்கலங்கி உயிர்விட்டான். இவனுடன் இரசபுத்திர வீரம் அழிந்ததென்றே கூறவேண்டும்.

இப்பொழுது பேபர் இராஜ்யம், மேற்கே குண்டஸ் படாக்ஷானிலிருந்து கிழக்கே வங்காளம் வரையிலும், வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே குவாலியர் வரையிலும் பரவியிருந்தது; என்றாலும், இப்பெரிய ராஜ்யத்தை அமைதிபெற ஆளுதற்குரிய செயல்களைச் செய்யவேண்டியதவசியமா யிருந்தது. சிலநாள் படைப்பலத்தாலேயே அமைதியை நிலவச் செய்ய நேர்ந்தது. பிறகு பேபர், நாட்டைப் பல கூற்றங்களாகப் பிரித்து, தக்கவ்ரைக் கொண்டு அவைகளைப் பரிபாலிக்குமாறு உத்தரவளித்தார். அவர்களுக்கு ஜாகீர்தார் என்று பெயர் வழங்கியது; அவர்கள் நிலவரி வியாபாரவரி முதலிய அரசிறைகளை வசூலித்தனர். முகமதியரல்லாதாரிடம் போல் வரியையும் வாங்கிவந்தனர். பெரிய ஜமீந்தார்கள் பெயரளவில் சக்கரவர்த்திக்குக் கீழ்ப்பட்டிருந்தாலும் தத்தம் விருப்பம்போல் நடந்து வந்தனர்; ஆதலால் பெயரளவில் பேபர் இந்தியச் சக்கரவர்த்திப்பட்டம் பெற்றிருந்தார்; எல்லைப்புறங்களும் மலைநாடுகளும் அப்பொழுது முற்றிலும் அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவில்லை; ஆப்கானியர் தங்கள் விருப்பம்போல் நடந்து வந்தனர்; மேற்கே சிந்துமாகாணமும் கிழக்கே பீஹாரும் பேபருக்குப் பணிய வில்லை. இம்மாகாணங்

களுள் பீஹாரே சக்கரவர்த்திக்குப் பெருந்துன்பத்
தை அடிக்கடி கொடுத்து வந்தது. பேபர், இராஜபுத்
திரரோடு போராற்றுங் காலையில் இம்மாகாணத்திலி
ருந்த ஆப்கானியர் கலகஞ் செய்து வந்தனர். இவ
ர்கள் தோ ஆபிற்குள் புகுந்து ஹாம்ஸ்தாபாத் என்
னும் ஊரைக் கைப்பற்றி, கன்னோசியிலுள்ள
பேபரது போர் வீரரைத் தாக்கி ஓடச் செய்தனர்.
சாந்தேரியைக் கைப்பற்றியவுடன் பேபர், அவர்க
ளைத் தண்டிக்கப் புறப்பட்டார்; பெருமபடையுடன்
யமுனையாற்றைக் கடந்து தம் படையில் ஒரு பகு
தியை முன்னே போக்கி, கன்னோசியின் நிலையை
அறிந்துவரக் கட்டளையிட்டார். பேபர வருகை
யைக் கேள்வியுற்ற ஆப்கானியர் அவ்வூரைவிட்டுப்
பல்வேறு ஊர்களுக்கு ஓடுபவரைப் போலப் போக்
குக் காட்டிக் கங்கையைக் கடந்து கிழக்குக் கரையில
சேர்ந்து கொண்டனர். பேபரை வெலலுதற்குரிய
முயற்சிகளை அங்குச் செய்வாராயினர். சக்கர
வர்த்தி கின்னோட் சென்று கங்கைக்கு எதிர்கரையில்
பகைவருக்கு எதிரில் வநது தங்கினர்.

சக்கரவர்த்தி, ஆப்கானிய வீரரிடமிருந்து 30 அல்
லது 40 படகுகளைக் கைப்பற்றித் தம் வீரரை ஆற்றி
னிடையே பாலங்கட்டச் செய்தார். பகைவர்
இச் செயலைக் கண்டு எள்ளி நகைததனர். இடை
யூறுகள் பலநேர்ந்தாலும், அவற்றைச் சிறிதும
பொருட்படுத்தாமல் பாலம் கட்டி முடித்தனர்.
முதலில் காலாளும் பஞ்சாப்வீரரும் ஆற்றைக்
தாண்டி மறுகரை யடைந்தனர். மறுநாட்காலை,
சேனையிற் பெரும்பகுதி பாலத்தைக் கடக்குஞ் சம
யத்தில் ஆப்கன்வீரர் கல் முதலியவைகளை வீசியெ
றிந்தனர். இவற்றைப் பொருட்படுத்தாமல் முதல்
சேனை மறுகரை சேர்ந்தது ஆப்கன்வீரர் அச்ச
மும் நடுக்கமுமெய்தி ஓடலாயினர். பேபர், அவர்
களை விடாமல் அயோத்திவரையில் துரத்திச்சென்று
வழியில் நூற்றுக்கணக்கான வீரரைச் சிறைசெய்து

கொன்றார். ஆப்கன் சாதியாருக்கு இது நல்ல படிப்பினையாயிற்று; மழைக்காலம் நெருங்கவே பேபர் ஆக்ரா சென்றார்.

இந்தியாவின் சீதோஷ்ணநிலை பேபர் உடலுக்கு ஒவ்வவில்லை. கதிரவன் வெப்பந் தாங்கமாட்டாமல் அடிக்கடி சுரநோயால் அவர் வருந்தலானார். ஓய்வு ஒழிவு இன்றி ஊருராய் அலைந்து இடைவிடாமல் போர் புரிந்து வந்ததனால் உடல் தளர்ந்து வலிமை குறையலாயிற்று. இளமையில் இவர் வலிமையைக் கண்டு அச்சமும் வியப்புங் கொள்ளாதவரெவருமிரார். இவர், வன்மையிற் சிறந்த வீரரிருவரைத் தம தோள்களிற் சுமந்து கொண்டு கோட்டை மதின் மீதேறிச் சுற்றிப்பன்முறை ஓடிவந்தாரென்று கூறப்படுகிறது. கங்கையாறொன்றைத் தவிரத் தாம் கண்டபிற ஆறுகளையும் நீந்தியே கடந்ததாக இவரே கூறுவதாலறியலாம். இடைவிடாமல் மிகவிரைவில் நாள் முழுதும் இவர் குதிரைச்சவாரி செய்துள்ளார். இத்தகைய வலிமைபெற்ற அரசர், சண்டைகளாலும் வெப்பக்கொடுமையாலும் துன்பங்களாலும் கவலையாலும் வலிமை குன்றி உடல்தளர்ந்தது இயல்பேயன்றோ?

ஆக்ராவில் அழகிய தொரு தோட்டத்தில் பேபர் தம்மைச் சேர்ந்த படை வீரருக்குப் பெருஞ்சோறளித்தார்; அதற்கு, சாமர்க்கண்டிலிருந்து காஜாக்களும் அஸ்பெக் ஸுல்தான்களும் பாரசிகமன்னரும் வங்கவரசர் முதலியோர் அனுப்பிய தூதரும் வந்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் விலையுயர்ந்ததும் மதிப்புள்ளதுமான சிறந்த பொருள்கள் பலவற்றைப் பரிசாகப் பெற்றனர். அப்பொழுது பேபர் வீடு வாயில்களின்றி அழைப்பாரற்று மனைவிமக்களைத் துறந்து தம்மொடு அலைந்துதிரிந்து சொல்லொணா அல்லல்களுக்கு ஆளாகி அண்டிஜானிலிருந்து வந்தவருமான வீரருக்கு விலைமதிக்க வொண்ணா மாணிக்க முதலிய வற்றையும், உயர்ந்த விலையுள்ள

ஆடைவகைகளையும் கொடுத்து அவர்களைச் சிறப்பித்தார். செல்வம் வந்துற்ற காலைச் செருக்கடைந்து பழைய நட்பை மறப்பது உலக இயல்பு, பேபர், அதற்கு மாருக நடந்து கொண்டது வியக்கத்தக்க தன்ருே? விருந்து விமரிசையாக நடைபெற்றது.

பேபருக்கு ஓடும் நீரைக்கண்டால் அளவுகடந்த மகிழ்ச்சி புண்டாகும்; ஆக்ராவில் யமுனையாற்றங் கரையில் அவர்குளங்கள் பல வெட்டுவித்தார்; மலர் வனம், சிங்காரத்தோட்டம் முதலியவற்றைத் தோற்றுவித்தார்; கண்களைக் கவரும் அழகிய கட்டடங்கள் பலவற்றைக் கட்டளைஞர்; ஆயினும், நாட்டைச் சீர்திருத்தி அழகு பெறச் செய்ய இவருக்கு அவகாசம் கிடைக்கவில்லை. போர் ஆற்றுவதிலும் கலகங்களை யடக்குவதிலுமே இவர்காலங் கழிக்க நேர்ந்தது. பீஹாரிலுள்ள ஆப்கானியர் அப்பொழுதும் அடங்கிவிடவில்லை; இப்ராஹிம்லோடியின் தம்பி ஆப்கன் வீரரோடு சேர்ந்து கொண்டான். ஜான்புரி பீஹார் முதலிய இடங்களில் உள்ளமக்கள் அவனையே அரசனுக ஒப்பினர்; ஆப்கானியர் தமக்குள் இருந்த வேற்றுமைகளை மறந்து ஆப்கன் அரசை மீளவும் பாரத நாட்டில் நிலைநிறுத்த அவனுக்குப் பேருதவியாயினர். பேபர், இச் செய்தியை டோல்புரியிலிருந்தபோது கேள்வியுற்ருர். அப்பொழுதே அவர் பெரும்படையுடன் ஆக்ராவுக்குத் திரும்பினுர்; கங்கையை அடைந்ததும் வடவிந்தியாவின் கிழக்கிலுள்ள மாகாணங்களையடக்கும் பொருட்டு அனுப்பியிருந்த தம்மகன் மறுகரையிலிருந்த பகைவரது நிலைமையை அறிந்து கொண்டு பேபரிருந்த கங்கையின் வலக்கரையில் பாசறை தங்கினுன்; மறுகரையிலுள்ள ஹுமாயூனும் அவருடன் பெயர்ந்து வந்தான். பேபர் வருகையைக் கேட்ட ஆப்கன் வீரர் ஓடிவிட்டனர்; லோடியும் சூனாரை விட்டு ஓடலானுன். பேபர் அலகாபாத், சூனா, காசி, காஜிபூர், பக்ஸார முதலிய இடங்களின் வழியாகச் செல்லுகையில் ஆப்கன் தலைவர் பலர் பேபரிடம் தஞ்

சம் புகுந்தனர். ஸுல்தான் இப்ராஹிம் லோடியின் சகோதரன், நல்லசமயத்தில் உதவுவாரொருவருமின்றி வங்கசேனையிடம் தஞ்சமடைந்து தனக்குதவி புரியும்படி வேண்டினான்.

வங்காளம் நீண்டகாலமாக டில்லியைச் சேராமல் தனியாகவே இருந்து வந்தது; அதனால், தமக்குத் தீமையில்லாதவரையில் அதைப் பணிவிக்கப் பேபர் கருதவில்லை; வங்கநாட்டரசன் நாஸரத்ஷா தூதரை பேபரிடம் விடுத்துத் தனக்குக் கப்பங்கட்டச் செய்தியனுப்பினான் அப்பொழுது வங்க வீரர், ஆப்கன் வீரரோடு சேர்ந்து அவர்களுக்கு உதவியாயிருந்தனர். தமது நாட்டைக் காக்காமலிருக்கும் பொருட்டு வங்க வீரர் ஆப்கானியரோடு சேர்ந்திருந்தாலும் இருக்கலாம். வங்கத் தூதரிடம் பேபர் வங்கத்திற்குத் தீங்கிழைக்கத் தாம் விரும்ப வில்லை யென்றும், ஆனால், கலகக்காரர் எங்கிருந்தாலும் அவர்களைத் தண்டிக்கப் பின்வாங்கப் போவதில்லை யென்றும் கூறினார். வந்த தூதர் விலையுயர்ந்த பரிசுகளைப் பெற்றுத் தம்மூர் திரும்பினர்.

பேபர் ஜான்பூரிலிருந்து 20000 வீரரை அழைத்துக் கொண்டு கோக்ராவை யடைந்தார். மறுக்கரையில் வங்கவீரர், சண்டைக்குரிய கருவிகளுடன் ஆயத்தமாக நின்றனர். பேபர், தம்வீரருடன் பகைவரை நாற்புறமுஞ் சூழ்ந்துக்கொண்டு சடுப்போர் புரிந்தார். முகலாயர் நான்கு பக்கங்களிலும் சூழவே வங்க வீரர் செய்வது இன்னதென்றறியாமல் குழப்பமடைந்து ஓடலுற்றனர். இதுவே அவர் செய்த கடைசிச் சண்டையாகும்; ஆப்கானியர் கலகம் இதனுடன் முடிந்தது; பேபர் வங்கவரசரோடு உடன்படிக்கை செய்து கொண்டார்; அவர் மூன்று போரில் வட இந்தியாவைத் தம்வசப்படுத்தி விட்டார்; ஆரியா வர்த்தம் அவருக்குக் கிட்டியதாயினும், சிலவற்றுற் பேபர் அதை வெறுக்லானார். முதலில் கதிரவன் கொடுமையை அவரால் தாங்கமுடியவில்லை; ஊர்களும் நகர்க

ளும் சண்டை சச்சரவுகளால் அழகற்று விளங்கின வென்றும், ஆரியாவர்த்தம் மலைகளின்றி இயற்கைப் பொலிவழிந்து காணப்பட்டதென்றும் அவரே கூறியிருக்கிறார்; இந்தியாவில் அவர் இன்னும் சில்லாண்டுகள் வாழ்ந்து வந்தால் இந்நாட்டைப் பற்றி இங்ஙனம் அவர் கூற இடமிராது. ஆக்ராவிலிருந்து அவர் ஆப்கானிஸ்தானத்தில் உள்ள காஜாகாலான் என்னுந் தளகர்த்தனுக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"நாட்டின் நிலை ஒருவாறு சீர்பட்டது. இன்னும் சில நாளில் எல்லாம் ஒழுங்காய் விடும்; அதன் பிறகு நான் அங்குவரக் கருதி யிருக்கிறேன்; நம் நாட்டு வனப்பையும் குளிர் காற்றையும் நான் எப்படி மறக்க முடியும். தேனொழுகும பழவர்க்கங்களையும் எழில் பெற்ற தோட்டங்களையும் விட்டு விட்டு இந்நாட்டில் வந்து வாழ்வது, எனக்குச் சிறைப்பட்டிருப்பது போலத் தோன்றுகிறது. என் அன்பை நேயருக்குச் சொல்லுக."

பர்கானு, காபூல் முதலிய இடங்களில் உள்ள மலைகள் ஆறுகள் தோட்டங்கள் அழகிய கட்டடங்களாகியவை இவர் மனத்தில் எப்பொழுதும் குடிகொண்டிருந்தன.

அப்பொழுது இவர்பிள்ளை ஹுமாயூனுக்கு மூத்த குழந்தை பிறந்தது; பேபர் அவனுக்குப் பின்வருமாறு எழுதினார்:—

"உனக்குக் குழந்தை பிறந்த செய்தி எனக்கு நிரம்ப மகிழ்ச்சியை விளைவித்தது. இச்சமயம் சாமர்க்கண்டில் கலகங்களும் குழப்பமும் மேலிட்டுள்ளன. சாமர்க்கண்டைக் கைப்பற்றத் தகுந்த சமயம் இதுவே; ஆதலால் உன் சகோதரரோடு சாமர்க்கண்டுக்குச் சென்று அந்நாட்டைக் கைப்பற்றும் முயற்சிகளை உன்னாலியன்ற அளவு செய். போராற்றிக் கீர்த்தி பெறத்தக்க வயது இதுவே. சோம்பலென்னும் பேய், வம்சத்தை அழித்து விடும்; காலதாமதஞ் செய்யாதே."

ஹுமாயூன் சாமர்க்கண்டை வென்று வசப்படுத்திக் கொண்டால் அவனையே அதற்கு அரசனாக நியமித்து விடப் பேபர் எண்ணினார்; ஆனால் அவர் எண்ணப்படி சாமர்கண்ட் படையெடுப்பு அனுகூலமாக முடிவுபெறவில்லை. ஹுமாயூன், படக்ஷானிலிருந்து புறப்பட்டு ஆக்ராவில் தம்தந்தையுடன் சேர்ந்து கொண்டான்.

பேபருக்கு ஹுமாயூனிடம் அளவிலா அன்புண்டு; ஒரு சமயம் ஹுமாயூன் தன்னினைவுமறந்து சுரநோயால் வருந்தியிருந்தான். வைத்தியரெல்லோரும் 'அவன் பிழைப்பதரிது' என்று கூறினர்; அப்பொழுது முகமதியப் பெரியோர் சிலர், ஆண்டவன் மனங்குளிர்ந்தாலன்றிப் பிழைக்க வேறு வழியில்லை என்று பேபரிடம் கூறினர்; பேபர், தம்மகன் பிழைத்தெழுந்தால், அவனுக்குப்பதில் தம் உயிரைக் கொடுப்பதாகக் கடவுள் முன் உறுதி கூறினார். இதைக்கேட்ட மந்திரிகளும் பிறரும் நடுக்குற்று அங்ஙனம் செய்பக கூடாதென்று வேண்டி நின்றனர்; பேபர் அதற்கு இணங்கவில்லை; தாம் வேண்டிக் கொண்டபடியே தம்மகன் பட்ட சுரநோயால் வருந்தலானார்; ஹுமாயூன், நோய் நீங்கிப் பழைய நிலையை அடைந்தான்; அதைக் கண்ட பேபர் அளவிலாக் களிப் படைந்தார்.

பேபருக்கு மரணகாலங்கிட்டியது; அப்பொழுது அவர் ஹுமாயூனைத் தம் அருகில் அழைத்து, செங்கோலை அவனிடம் கொடுத்துப் பட்டஞ் சூட்டினார்; சிறிது நேரத்திற்கு எல்லாம் அவர் உயிர் உடலை விட்டுப் பிரிந்தது; அப்பொழுது அவருக்கு வயது நாற்பத்தெட்டு. தம் வாழ்நாள் முழுவதும் போர்க்களத்திலேயே செலவழித்துச் செயற்கரிய செயலைச் செய்து முடித்து அழியாப் புகழையும் பெருமையையும் அடைந்த இம்மன்னர் பெருமான் வாழ்க்கைச் சரிதத்தை நாம் என்றென்றும் மறக்க முடியாது.

Hogarth Press, Madras.